# அவனும் ராமன்தான்

லாவண்யாவின் திருமணத்திற்கு சாரதா போயிருந்தாள். அதற்குப் பின்னர் லாவண்யா தன் கணவன் கல்யாணராமனுடன் அவள் வசித்த ஃபிளாட்டுக்கு வந்திருந்தாள். ஒரு மாத கால இடை வெளிக்குப் பின்னர் அவளுக்கு ஒரு கடிதம் வந்தது.

பம்பாய் தலைமை அலுவலகத்திற்கு மாற்றலாகி யிருக்கிறது. நேரில் வந்து விடை பெற்றுக் கொள்ள இயலவில்லை, மன்னிக்கவும். நானும் லாவண்யாவும் பம்பாய் சென்றதும் எங்கள் முகவரியைத் தெரிவிக் கிறோம். உங்களை என்றும் மறவாத நன்றியுள்ள, கல்யாணராமன்.

சாரதா அவனிடமிருந்து பின்னால் எந்தவிதமான கடிதப் போக்குவரத்தையும் எதிர்பார்க்கவில்லை. அவனும் தன் முகவரியைத் தெரிவிக்கவில்லை. அவர்கள் இருவரும் அந்த விபத்து நேர்ந்த சூழ்நிலையினின்று விலகி அப்பால் போனது மிகவும் நல்ல காரியமாகும்.

சாரதா கடிதம் மூலம் அவர்கள் வாழ்வில் குறுக்கிட்டு - மறுபடியும் அந்தத் துன்பத்தை நினை வுறுத்திக் கொண்டிருக்கவும் விரும்பவில்லை. அதனால் சாரதா லாவண்யா, கல்யாணராமன் இருவரையும் தன் ஞாபகத்தினின்று ஒதுக்கி விட்டாள்.

ஆனால் காவல்துறை அதிகாரியான ரங்கநாதனை அடிக்கடி தொலைபேசி மூலமாவது விசாரிப்பதை நிறுத்தவில்லை. ஏதாவது ஒரு சமயம் அவன் உதவி தேவைப்படலாம் என்றதொரு நோக்கம். மேலும் அவன் அவளுடைய குடும்பத்தின் நண்பரின் மகனாயிற்றே அந்த உறவை அவள் முறித்துக் கொள்ள விரும்பவில்லை. ஒரு நாள் கடைத்தெருவிற்குப் போய்விட்டு தனக்குப் பரிச்சியமான ஒரு பெண்ணின் வீட்டிற்குப் போகத் திரும்பியபோது கவனித்தாள்.

லாவண்யாவின் பெற்றோர்கள் வசித்த அந்த வீட்டு வாசலில் வேறு ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள்.

அப்படியானால் லாவண்யாவின் பெற்றோர்களும் அந்த வீட்டிலிருந்து வேறு வீட்டிற்குக் குடி போய் விட்டார்கள் போலும்.

அந்த விபத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் அதை மறக்க வேறு இடங்களுக்குப் போய் விட்டனர்.

அதில் சம்பந்தப்படாது உதவி மட்டும் செய்த சாரதா ஏன் இனி அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். அவர்களை முற்றிலும் மறந்து விடுவதுதான் முறை.

தனிமை அவள் மனத்தில் சதா ஒரு பரபரப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

நாள் முழுவதும் எதையாவது செய்து கொண டிருந்தால் ஒழிய மனதிற்கு அமைதி கிட்டாது போன்ற ஒரு நிலை.

வழக்கம் போல அவள் வசித்த காவேரி - நர்மதா மான்ஷனில் மற்ற ஃபிளாட்டுகளில் குடியிருந்தவர்கள்



தாமுண்டு தம் வேலையுண்டு என்று ஒதுங்கி சுயநலக் காரர்களாக வாழ்ந்தனர்.

இதுதான் பட்டணத்து வாசம் - பம்பாயின் பாராமுக வாழ்க்கையை உதறிவிட்டு அவள் பட்டணத்திலாவது, அக்கம் பக்கத்தாருடன் உறவாடிக் கொண்டு வாழ ஆசைப்பட்டு வந்ததிற்குப் பலன் - தனிமை, கொடுமையான தனிமை.

குறைபட்டுக் கொள்வதில் லாபமில்லை.

அதைத் தவிர்த்துக் கொண்டு வாழ முயல வேண்டும்.

அவளை ஒத்தப் பெண்கள் கல்யாணமாகாது வேலை செய்து கொண்டிருந்துவிட்டு ஓய்வடைந்து முதுமையை எட்டிவிட்டவர்கள். பிள்ளை, பெண்கள் ஏதுமின்றி கணவனை இழந்த விதவைகள், வெளிநாட்டில் பொருளீட்டப் போய்விட்ட பிள்ளை, பெண்களை நினைத்துக் கொண்டு - இறந்துபோன கணவனுக்குக் கண்ணீர்விட்ட வண்ணம் தனியே வாழ நேர்ந்துவிட்டு, அதிக வயதை அடைந்த விதவைகள் எனப் பலர் - நெருக்கமான நகரத்தின் மக்கள் கூட்டத்திடையே, தன்னந்தனியாக வாழப் புரிந்து கொள்ளவேண்டும்.

அப்படிப்பட்டதொரு நாகரிகம் நகரங்கள் அனைத்திலும் பரவிக்கொண்டு வருகிறதே!

தன்னையே அவள் அடிக்கடி சாடிக்கொண்டு அன்றாடம் அவள் செய்து வந்து வீட்டுக் காரியங்களைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

பக்கத்தில் உருவாகிக் கொண்டு - லாவண்யாவின் விபத்துக்குக் காரணமாயிருந்த அந்தக் கட்டடம் இப்போது பூர்த்தியாகி விட்டிருந்தது.

''ப'' என்ற எழுத்தின் வடிவமாக அமைந்த இருபத்தேழு ஃபிளாட்டுகள் கொண்டதொரு கட்டடம் அது. மூன்று தளங்களாகக் கட்டப்பட்டிருந்தது. அவள் வசித்த குடியிருப்புப் பகுதியில் லிஃப்ட் வசதி இருந்தது.

''மதுரா அப்பார்ட்மெண்ட்'' என்ற பெயரைத் தாங்கிய அந்தக் கட்டடத்தின் வாயில்புறம் சாலையை நோக்கி அமைக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் ஒரு பக்கத்து ஃபிளாட் வரிசையின் படுக்கையறை ஜன்னல்கள் அவள் குடியிருந்த பக்கம் தெரிந்தன.

ஒவ்வொரு ஃபிளாட்டும் விலைக்கு வாங்கப் பட்டதா அல்லது வாடகைக்கு எடுக்கப்பட்டதா, அவளுக்குத் தெரியாது. விரைவில் ஒன்றுகூடக் காலி யில்லாது நிறைந்து விட்டன. இருட்டியதும் அவள் பக்கம் தெரிந்த ஜன்னல்களில் விளக்கு வெளிச்சமும் மனிதர்களின் பேச்சுக் குரலும் அவளது தனிமைக்குக் கொஞ்சம் இதமாகவே இருந்தன.

''மதுரா அப்பார்ட்மெண்டின்'' அருகே அடுத்த படியாக அதே கண்டிராக்டர் வெறுமையாக இருந்த சிறு இடத்திலே ஒரு ஷாப்பிங் செண்டரைக் கட்டி விட்டிருந்தார். அதுவும் பல கடைகளால் நிரம்பி விட்டிருந்தது. பிளாஸ்ட்டிக் வாளியிலிருந்து புத்தகங்கள் வரை வாங்க, தனித்தனியான - அழகான கடைகள் அருகில் அமைந்து விடவே சாரதா அடிக்கடி ஷாப்பிங் செண்டருக்குப் போய் வரத்தொடங்கினாள்.

சில சமயம் வேண்டாத சாமான்களை விலை கொடுத்து வாங்கிக்கொண்டு வந்துவிட்டு, இதையேன் வாங்கி வந்தேன் என்று யோசித்து தன் முட்டாள் தனத்தை தானே இடித்துக் கொள்வதும் உண்டு.



பக்கத்துக் கட்டடத்தின் பின் வாயில் வழியே குறுக்கே சென்று அந்த ஷாப்பிங் சென்டரை விரைவில் அடைய வசதியிருந்தது. முன்வாசலையும் பின் வாசலை யும் காவல் காத்த காவலாளிகளிடம் மாதந்தோறும் இரண்டு ரூபாய்களைக் கொடுத்துவிட்டு அவர்களது க்ஷேம லாபங்களை விசாரித்துவிட்டு அந்த வழியாக சாரதா கடைத்தெருவுக்குப் போவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

அவளைக் கண்டதும் புன்னகையுடன் அந்தத் தனியார் வழி மூலம் கடைக்குப் போக அந்தக் காவலாளி கள் அனுமதித்தனர்.

அப்போதுதான் அடுத்த கட்டடத்தின் பதினான்கா வது ஃபிளாட்டில் கோதண்டராமனும், சீதாவும் புதிதாகக் குடியேறியிருந்தனர். மிக அருகில் அவர்களது சமைய லறையும், படுக்கையறை சிட் அவுட்டும் இருந்ததால் சாரதாவுக்கு அவர்கள் பேசுவது சில சமயம் கணீரென்று காதில் விழுந்தது. தன் படுக்கையறை திரைச்சீலை இடுக்கு வழியே அவள் சில சமயம் அந்தப் பெண் சமையலறையில் வளைய வருவதை வேடிக்கை பார்ப்பது வழக்கம்.

புதிதாகக் குடி வந்தவர்கள் தங்களது வீட்டில் கொண்டுவந்து போட்ட சாமான்களையும், எது எந்த பக்கம் போட வேண்டும் என்று அவர்களிருவரும் இரைந்து பேசிக் கொண்டதையும் கேட்டு ரசித்தாள் சாரதா.

"சீதா! சீதா!" என்று அவன் இரைந்து கூப்பிட்டதின் பயனால் அந்த ஃபிளாட்டில் குடியேறி இருப்பவளின் பெயர் சீதா என்று தெரிந்து கொண்டாள்.

தொலைபேசியை படுக்கையறைக்குள்ளும் வைத்துக்கொள்ள பிளக் வசதி இருந்தது போலும்.

சிட்அவுட் கதவைத் திறந்து வைத்து விட்டு அந்தப் பெண் ஒருநாள் டெலிபோனில் பேசியது கூட சாரதாவுக்குத் துல்லியமாகக் கேட்டது.

"கோதண்டராமன் வீடான்னு கேட்கிறீர்களா? ஆமாம்... தொலைபேசி எண் சரிதான். அவர் இப்போது வீட்டில் இல்லை... வர இன்னும் கொஞ்ச நேரம் ஆகும். இரவு எட்டு மணியளவில் கூப்பிட்டுப் பாருங்கள். இருப்பார்" என்று இரைந்து, சீதா யாருக்கோ பதில் சொன்னது சாரதாவுக்கு நன்றாகக் கேட்டது.

அப்படியென்றால் சீதாவின் கணவர் பெயர் கோதண்டராமனா? பெயர்ப் பொருத்தம் மிகவும் அழகாக அமைந்திருக்கிறதே. அத்தோடு உருவப் பொருத்தமும் ரொம்ப பொருத்தமாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தாள்.

ஈரத்துண்டைக் காயப் போட சீதா சிட் அவுட்டிற்கு வந்தபோது தன் படுக்கையறை திரைச்சீலையின் இடைவெளி வழியே அவள் ஒரு நாள் அந்தப் பெண்ணை காலோடு தலைவரை உற்றுப் பார்த்து வியந்து போனாள்.

உண்மையில் சீதா அந்த ஜனகன் மகள் சீதாவைப் போல, தங்கச் சிற்பமாக மிகவும் அழகாக இருந்தாள்.

காய அவிழ்த்துப் போட்டுக் கொண்டிருந்த கூந்தல், மயில் தோகைபோல முதுகில் புரண்டு இடைவரை



தொங்கிக் கொண்டிருந்த அழகினை வியப்புடன் ரசித்தாள் சாரதா.

அந்தக் கூரிய மூக்கையும் - கனிவு நிறைந்த கண்களையும் - லேசான உதட்டுச் சாயத்தில் குவிழ்ந்த சிமிழ்போன்ற உதடுகளையும் பார்த்தபோது அவளுக்கு அந்தப் பெண்ணை எங்கேயோ முன்பு பார்த்தது போன்றதொரு பிரமை ஏற்பட்டது.

'வெறும் அழகுப் பாவையாக இல்லாது, சீதா பொறுப்பான குடும்பத் தலைவி என்பதையும் தன் வீட்டு ஜன்னல் வழியாகப் பார்த்துப் புரிந்து கொண்டாள் சாரதா.

அவளைப் போல சீதாவும் சாயங்கால வேளைகளில் பிளாஸ்டிக் கூடையுடன் காய்கறிக் கடைகளுக்குச் சென்று வந்தாள். திரும்பி வந்ததும் அவைகளை அவள் பாத்திரம் தேய்த்து கவிழ்த்து வைக்கும் மேடை மீது கொட்டி, வகை பிரித்து பிளாஸ்டிக் பையில் போட்டு, சாப்பாட்டறையின் முன்னாலிருந்த ப்ரிட்ஜில் அழகாக அடுக்கி வைத்தாள்.

இரவில் சாப்பாட்டிற்கு அவள் தன் கணவனுக்கு சப்பாத்தியும், சட்னியும் செய்யும்போது நெய் வாசனை சாரதாவின் மூக்கைத் தாக்கியது.

சமைத்த பொருள்களை சுத்தமான ஸ்டீல் டப்பாக்களில் போட்டு ஒரு பக்கம் வைத்து விட்டு சமையலறையை அவள் சுத்தம் செய்வதை சாரதா தினசரி ஒரு வேடிக்கையாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். அடுத்த கட்டிடத்தில் அந்தத் தம்பதியர் குடியேறியது ஒரு வகையில் சாரதாவுக்கு ஒரு பெரிய பொழுது போக்காகத் தான் இருந்தது. இரவு உணவு தயாரித்தபின் சீதா முகம்

கழுவி வேறு ஆடை உடுத்திக் கொண்டு லேசான ஒப்பனையும், கொண்டையில் மல்லிகைப் பூச்சரமுமாக சிட்அவுட்டில் வந்து சிறிது நேரம் நிற்பது வழக்கம். இருட்டத் தொடங்கியதும் சிட் அவுட்டை சாத்திக் கொண்டு அவள் உள்ளே சென்று விடுவாள். படுக்கை யறையில் எரிந்த விளக்கும் அணைந்துவிடும். பின்னர் சிறிது நேரத்தில் கோதண்டராமன் சமையலறைக்கு வருவான்.

''குளிச்சுட்டு ஆபீஸ் துணிகளை மாத்திக்கொண்டு வாங்கோன்னு எத்தனை தடவை சொல்வது'' என்று சீதா கண்டிப்பாள்.

''உம் - சப்பாத்தியின் நெய் மணம் வாசல் வரைக்கும் வந்துட்டது. ஒரே பசி'' என்று அவன் விளையாட்டாகக் கூறிவிட்டு அவளை இறுக அணைத்துக்கொள்ளும் காட்சியைப் பார்க்கக் கூசி, சட்டென்று சாரதா திரும்பி படுக்கை மீது வந்து உட்கார்ந்து விடுவாள்.

அந்தத் தம்பதியரின் வாழ்க்கை அவளது கணவனுடன் அவள் வாழ்ந்த காலத்தை நினைவுறுத்தும். கண்களில் லேசாகக் கண்ணீர் புரளும்.

மாரடைப்பால் அவர் திடீரென்று மரணமடையா திருந்தால்... இப்படித் தன்னந்தனியே அவள் கொட்டுக் கொட்டென்று உட்கார்ந்திருக்க அவசியமில்லையே என்று நினைத்துக் கொள்வாள்.

''சீதா! லுங்கியை எங்கே வச்சே... பனியன் மட்டுந்தான் இருக்கு'' என்று அவன் கத்திக் கூப்பிடுவது காதில் கேட்டால்... இருவரும் ஒருவர்மேல் ஒருவர்



பிரியமாக வாழும் இந்தத் தம்பதியர் யாரோ - யாராயிருந்தால் என்ன? பசுமையாக இருந்த அவளது கடந்தகால தாம்பத்ய வாழ்க்கையை மீண்டும் நினை வுறுத்தும் வகையில் ரொம்ப ஒற்றுமையாக இருக் கிறார்கள். அவர்கள் நன்றாக இருக்கட்டும் - கூடிய சீக்கிரம் சீதாவுக்கு ஒரு குழந்தை பிறக்கட்டும் என்று தனக்குள் வேண்டிக் கொள்வாள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் கோதண்டராமன் அந்த சிட்அவுட்டில் நாளேடுகளுடன் ஒரு பிரம்பு நாற்காலியில் காலை வேளைகளில் உட்கார்ந்திருப்பதை அவள் பார்த்திருக்கிறாள். சில சமயங்களில் அலுவலக உடுப்புடன் அங்கே வந்து சீதா வைத்திருக்கும் பூச்செடி சட்டிகளை நோட்டம் பார்த்துக் கொண்டு நிற்கும்போது கவனித்திருக்கிறாள்.

அலுவலக உடையிலும், சாதாரண லுங்கி பனியனிலும் கச்சிதமாகத் தெரிந்த கோதண்டராமன் உருவத்தில் சீதாவுக்கு ஏற்றவனாக லக்ஷணமாகத்தான் இருந்தான்.

''பெயர் ஒற்றுமை; உருவத்திலும் ஒருவர்க் கொருவர் ஈடான தோற்றமுடையவர்கள்; அன்பான தம்பதியர்; இளம் வயதினர். கடவுளே யார் கண்ணும் பட்டுவிடக் கூடாது. இவர்கள் இருவரும் சுகமாக எந்தவித இடையூறும் இன்றி - நோய்நொடியின்றி வாழவேண்டும்'' என்று அடிக்கடி சாரதா வேண்டிக் கொள்வது வழக்கம்.

அந்தத் தம்பதியரை அறிமுகம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசையும் அவளுள் உருவாகியிருந்தது உண்மை.

அந்த வாய்ப்பும் எதிர்பாராவிதமாக ஒருநாள் அவளுக்குக் கிட்டியது. அடுத்திருந்த ஷாப்பிங் சென்டரில் பொழுதைப் போக்க வளைய வந்து கொண்டிருந்தவள், மிகப் பெரிய அளவில் புதிதாக ஆரம்பித்திருந்த புத்தகக் கடைக்குள் நுழைந்தாள். பல புத்தகங்களைப் பார்வையிட்டுவிட்டு, அவளுக்குப் பிடித்த கலீல் ஜிப்ரானின் பிராபிட் எனும் புத்தகத்தை வாங்கிக்கொண்டு திரும்பியவள் தோள்மீது மிருதுவான கரம் ஒன்றுபட்டது.

''உங்களுக்கு கலீல் ஜிப்ரானின் கவிதைகள் பிடிக்குமா? - எனக்கு ரொம்ப பிடிக்கும். நான் உங்க ஃபிளாட்டுக்குப் பக்கத்திலே இருக்கிற அபார்ட் மெண்டில் தானிருக்கேன். ஒரு நாள் படுக்கையறை ஜன்னல் திரைச் சீலையை ஒதுக்கினபோது உங்களை நான் பார்த்திருக்கிறேன். பழக்கம் செய்து கொள்ளணும்னு ஆசையா இருந்தது; என். பேர் சீதா.'' தானாகவே அறிமுகம் செய்து கொண்டாள் அவள்.

அப்படியென்றால் அவளும் ரொம்ப கெட்டிக்காரப் பெண்தான். ஒரே பார்வையில் சாரதா தன் பக்கத்து ஃபிளாட்டில் வசிப்பதை புரிந்துகொண்டு விட்டிருக் கிறாளே?

சீதாவைப் பற்றி அவள் கொண்டிருந்த மதிப்பு மேலும் ஓங்கியது.

''எனக்கும் உன்னைத் தெரிந்து கொள்ளத்தான் ஆசையாக இருந்தது. ஆனால் என் வயசுக்காரர்களை உன் போன்ற இளம் பெண்கள் தெரிஞ்சுக்க ஆசைப்பட மாட்டாங்களேன்னு அஞ்சி - தூர இருந்துவிட்டேன் - என் பெயர் சாரதா'' சிரித்தாள் அவள்.



''சிநேகிதத்துக்கு வயதும் அந்தஸ்தும் கிடையா துன்னு உங்களுக்குத் தெரியாதா'' முறுவலித்தபடி அந்தப் பெண் மிகவும் சுவாதீனமாக சாரதாவின் கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.

சாரதாவுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. தினமும் அவள் திரைச்சீலை வழியே தரிசனம் செய்து வியந்து கொண்டிருக்கும் சீதா - வலிய பெற்ற பெண் போல அன்போடு அவளது அன்பை நாடிவருகிறாளே. அதிசயந் தான். இந்தக் காலத்து இளவயதினருக்கு அவளைப் போன்ற வயதான பெண்களிடம் பேசவோ பழகவோ பொழுது ஏது.

வயதானவர்களைக் கண்டால் வியாதி பிடித்தவர் களைக் காண்பது போல தலைமறைவாகிவிடும் காலத்தில், சீதா போன்ற அழகான, படித்த, அறிவுள்ள, பொறுப்பான பெண் அவளுடன் பழக ஆசைப்படுவது விந்தையினும் விந்தைதான்.

''மூணாவது தளத்தில் பனிரெண்டாம் எண்ணில் காவேரி - நர்மதா மான்ஷனில் இருக்கிறேன். உனக்கு சமயம் இருக்கும் போது தாராளமாக நீ வரலாம். லிப்ட் கிடையாது. மாடி ஏறி வருவதற்குள் கொஞ்சம் மூச்சையடைக்கும், அவ்வளவுதான்'' என்று சிரித்தாள் சாரதா.

''முதலில் நீங்க எங்க வீட்டுக்கு வாங்கோ. பிறகு நான் உங்கள் வீட்டுக்கு வரேன்'' கொஞ்சிக் குழைவாக சீதா அழைத்ததை அவள் மறுக்க முடியவில்லை. தொலைபேசி எண்களை இருவரும் மாற்றிக் கொண்டனர்.

''நான் தனிக்கட்டை. எப்போது வேண்டுமானாலும் கிளம்ப முடியும். நீ கணவனுடன் வாழ்கிறவள். அதனால் உன் சௌகர்யத்தை தொலைபேசியில் தெரிஞ்சுண்டு வரேன். உன்னை சந்தித்ததைப் பற்றி ரொம்ப மகிழ்ச்சி என்று சீதாவின் கன்னத்தை அன்போடு வருடிவிட்டுக் கிளம்பினாள்.

அன்று முழுவதும் அந்த எதிர்பாராத சந்திப்பை நினைத்து மகிழ்ச்சியில் மூழ்கிப் போனாள் சாரதா.

அதற்குப் பின்னர், அந்த வாரத்தின் இறுதிக்குள் ஒரு நாள் தொலைபேசியில் சீதாவை அழைத்து, அவளது சௌகர்யத்தை அறிந்து கொண்டு அன்று மாலை அவளை சந்திக்கப் புறப்பட்டாள்.

முதன் முதலாக அந்தப் பெண்ணை வெறும் கையுடனா போய்ப் பார்ப்பது? காலையே கடைத் தெருவுக்குப் போய் ஒரு ஸ்டீல் பால் செம்பை வாங்கிக் கொண்டு வந்தாள். மூடிபோட்டு பார்க்கப் பரங்கிக்காய் போன்ற உருவத்தில் காணப்பட்ட அந்த பாத்திரம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

சீதா மாலையில் மீதமாகும் பாலை அதில் காய்ச்சி வைத்துக்கொள்ள உதவும் என்று சந்தோஷத்துடன் புறப்பட்டாள்.

சாரதாவுக்கு லிஃப்ட் என்றாலே பெருத்த அலர்ஜி.

பம்பாயில் வசித்த சமயம் ஒரு முறை நாலாவது மாடிக்குபோக லிஃப்டில் ஏறிவிட்டு, மின்விசை துண்டிப் பால் அது நடுவழியில் நிற்க, மூச்சடைத்துவிடும் போன்ற பயத்தில், இருளில் அவளுக்குத் தெரியாத இரண்டு இளைஞர்களுடன் லிஃப்டில் அரைமணி நேரம்



அவஸ்த்தைப்பட்ட நினைவு நெஞ்சை விட்டு அகலாத ஒரு பயங்கர அனுபவம் - ஏழு மாடியென்றாலும் ஏழு மலையானை நினைத்துக் கொண்டு அவள் மாடிப்படிகள் வழியாகத் தான் ஏறுவதைப் பின்னர் வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

முகத்திலே வியர்வை பொடிக்க மூச்சிறைக்க உள்ளே வந்து நின்றவளைப் பார்த்து சீதா கேட்டாள்.

''லிஃப்டில் வரவில்லையா, உட்காருங்கோ'' உபசரித்தாள்.

''இரண்டாவது மாடிதானேன்னு ஏறிவந்தேன்.'' தனது லிஃப்ட் பயத்தை அவளிடம் சொல்ல வெட்கி முன்னறை சோபாவில் உட்கார்ந்தாள்.

சாரதா தன் வீட்டைப் படுசுத்தமாக வைத்துக் கொள்வதில் ரொம்பவும் பெருமையாக இருப்பாள்.

சீதா அவளை மிஞ்சிவிட்டிருந்தாள். முன்னறையில் அவள் போட்டு வைத்திருந்த சோபாவின் நிறத்துக்கு ஒப்ப ஜன்னல் திரைச்சீலைகளும், பாதத்தைத் தழுவிய காஷ்மீர் கம்பளமும், சுவரில் இங்குமங்கும் தேவையான இடத்தில், பார்த்து - பொருக்கி மாட்டியிருந்த படங்களும் சீதாவின் ரசனையையும் அவள் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள எடுத்துக்கொண்ட சிரமத்தையும் பறைசாற்றின.

''இந்தச் சிறு பரிசை என் நினைவாக வச்சுக்கோ'' என்றபடி தான் கொண்டு வந்த பால் செம்பை பரிசுக் காகிதத்தில் சுற்றியிருந்தபடி அவளிடம் கொடுத்தாள்.

''இதெல்லாம் எதுக்கு?'' என்று நாணிக் கொண்டு வாங்கிக்கொண்டாள் சீதா.

சாரதாவுக்கு ஆவலை அடக்க முடியவில்லை. ''இந்த ஃபிளாட்டை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்திருக்கீங்களா, இல்லே குடியிருக்க வாடகைக்கு எடுத்துக் கொண்டீங்களா?''

''இத்தனை பெரிய ஃபிளாட்டை விலைக்கு வாங்க ஆசைப்பட்டால் மூன்று லக்ஷத்துக்கு மேல் முதல் போடணும் - இப்பத்தானே என் கணவர் ஓர் உயர்மட்ட அதிகாரியாக ஒரு கம்பெனியில் வேலை பார்க்கிறார். கம்பெனி தயவில் வாடகை கிடைக்கிறதனால் இங்கே குடி வந்திருக்கோம் - இதெல்லாம் எங்களுக்கு சொந்தமாக வாங்கி அனுபவிக்கக் கட்டுப்படியாகாதே'' சீதா வெகுளித்தனமாக சிரித்தாள். ''வாங்கோ சாரதா அம்மா. எங்க ஃபிளாட்டைப் பாருங்கோ - உங்களைப் போல பெரியவங்க வாயால பார்த்து ஆசீர்வதிக்கணும்.''

சாரதா மனம் நெகிழ்ந்து போய் எழுந்திருந்து இடத்தை சுற்றிலும் பார்த்தாள்.

புதிதாகக் கட்டிய ஃபிளாட். சுவரும் மற்ற இடங்களும் பளிச்சென்று இருந்தன. ரசனையுடன் அந்த இரண்டு படுக்கையறைகளையும் கட்டில் மெத்தையுடன் அலங்கரித்திருந்தாள். சாப்பாட்டறையில் போட்டிருந்த சன்மைக்கா மேஜையைச் சுற்றி நான்கு நாற்காலிகள் தானிருந்தன.

''இந்தச் சாமான்களில் சில என் மாமனார் வாங்கித் தந்த பரிசு. சில என் தாயார் வாங்கித் தந்தது. சில கம்பெனி தந்த உபயம்'' என்று கூறிக் கொண்டு சமையலறைக்குள் அழைத்துச் சென்றாள்.



பாத்திரங்கள் கொஞ்சந்தானிருந்தன. ஆனால் எத்தனை சுத்தமாகத் துலக்கப்பட்டு மிகவும் அழகாக அலமாரித் தட்டுகளில் அடுக்கப்பட்டிருந்தன.

''சாரதா அம்மா நீங்க காப்பி சாப்பிடுவீர்களா டீயா'' சிரித்தபடி விசாரித்தாள் சீதா.

''காப்பியா - டீயா... நானா,'' என்ற தலைப்பைக் கொண்டு ஒரு விமானப் பணிப்பெண் எழுதியதான நகைச்சுவைப் புத்தகம் ஒன்றைப் படித்த ஞாபகம் வந்தது.

''எனக்கு அவை வேண்டாம். நீதான் வேண்டும்'' என்று சொல்லி சீதாவைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு, தங்க நிகர் கன்னங்களைத் தடவ வேண்டும் போன்றதொரு தாய்மை உணர்வு அவள் உள்ளத்திலே பெருகிப் புரண்டது.

''பம்பாயில் பல காலம் இருந்து விட்டதால் நான் தேநீர்தான் அதிகம் சாப்பிடுகிற பழக்கம். உனக்கு எது சௌகரியமோ அதைக் கொடுத்தால் போதும்'' என்றாள்.

''நானும் பம்பாய்வாசிதான். அடிக்கடி தேநீர் குடிக்கிற பழக்கம். இவருக்குத்தான் காப்பி வேண்டும். அதுவும் டிகிரி காப்பி போட்டுத் தரணும். ரொம்ப நாக்கு ருசிக்காரர்.''

''உனக்கு நன்றாக சமைக்கத் தெரியும்னு நினைக்கிறேன்.''

''நன்றாக சமைக்கக் கத்துக் கொண்டிருக்கேன் சாரதா அம்மா. ஏன்னா கணவனது அன்பை அவனது இதயத்திலிருந்து பெற முடியாது. அவன் வயிற்றுத் தேவையான ருசியான உணவைப் போட்டுத்தான் அதை

அடைய முடியும்னு ஒரு பழமொழி உண்டல்லவா.'' சாரதா வாய்விட்டு உரத்துச் சிரித்தாள்.

சீதா நகைச்சுவையோடு கூடப் பேசத் தெரிந்த புத்திசாலிப் பெண்ணாக இருக்கிறாளே.

''இதெல்லாம் என்னத்துக்கு?'' என்று சாரதா மறுத்தும், சாப்பாட்டறைமீது வெள்ளைத் துணி விரிப்பைப் போட்டு பீங்கான் தட்டை வைத்து, பூரியும் பாத்தாவும் பரிமாறினாள். கூட ஒரு சிறு ஸ்டீல் கிண்ணத்தில் சர்க்கரை பாகில் மிதந்த இரண்டு குலோப்ஜாமுனும், எடுத்துச் சாப்பிட கரண்டியும் கொண்டு வந்து வைத்தாள்.

கண் இமைக்கும் நேரத்தில் தேநீரைத் தயாரித்து, அழகான போன் சைனா தேநீர் கெட்டிலை எடுத்துக் கொண்டு வந்து இரண்டு பீங்கான் கோப்பைகளுடன் வைத்தாள்.

உணவையும் சிற்றுண்டியையும் நாசூக்காகப் பரிமாறுவதிலும் இந்தப் பெண் கெட்டிக்காரியாக இருக்கிறாளே. சாரதாவுக்கு வியப்புக்கு மேல் வியப்பு.

''என்னத்துக்கம்மா இத்தனையும் செய்திருக்கே?''

''என் கணவருக்கும் சேர்த்து செய்திருக்கேன். வீட்டுக்கு வரத்துக்கு முன்னாடி டிபன் என்னன்னு கேட்டுக் கொண்டேதான் வருவார். பச்சைக் குழந்தை போல ரொம்ப படுத்துவார்'' பெருமையோடு சொன்னாள் சீதா.

''ஒரு பச்சைக் குழந்தை இந்த வீட்டில் தவழத் தொடங்கினால் அவர் அடங்கிப் போய்விடுவார். ஆமாம் கல்யாணமாகி எத்தனை காலமாச்சு.''



''இரண்டு வருஷமாச்சு'' சொல்லி முடிப்பதுற்குள் சீதாவின் முகம் செம்மையாகியது. ''அப்போ ஒரு பச்சைக் குழந்தை வரவேண்டிய காலந்தான்'' சாரதா வேடிக்கையாகச் சொல்லியபடி குலோப்ஜாமுனைக் கரண்டியால் பிளந்து வாயில் ஒரு துண்டைப் போட்டுக் கொண்டு விழுங்கினாள்.

'நாக்கில் கரைந்துவிடும் போல் எத்தனை பக்குவமாகச் செய்திருக்கிறாள். இந்த கெட்டிக்காரப் பெண்ணுக்கு சீக்கிரம் ஓர் அழகான குழந்தை பிறக்கனும்,' தன்னுள்ளே வேண்டிக் கொண்டாள்.

விடைபெற்றுக் கொண்டு புறப்படுமுன் சாரதா சொன்னாள்.

''நான் உன் விருப்பப்படி இங்கே வந்துவிட்டேன். நீயும் உன் கணவரும் ஒரு நாள் இரவு சாப்பாட்டுக்கு என் வீட்டிற்கு வரணும்'' உத்தரவிட்டாள்.

பின்னர் சாரதாவின் வேண்டுகோள்படியே ஒருநாள் இரவு அவர்களிருவரும் அவளது ஃபிளாட்டுக்கு சாப்பிட விருந்தினராக வந்தனர்.

சீதாவும் வெறும் கையுடன் அங்கே வரவில்லை. ஒரு கைத்தறி மேஜை விரிப்பை வண்ணக்காகிதத்தில் சுற்றி எடுத்து வந்திருந்தாள்.

கோதண்டராமன் பழகுவதற்கு மிகவும் இனிய சுபாவம் உடையவனாகத் தெரிந்தான். நகைச்சுவையில் மனைவிக்கு ஒரு படி மேலாக இருந்தான். சாரதாவுக்கு உதவியாக உணவு பாத்திரங்களைக்கூட, வந்து தானே எடுத்து வந்து மேஜை மீது வைத்தான். அவனது நடத்தையில், தான் ஒரு பெரிய அலுவலகத்து உயர்மட்ட

அதிகாரி என்ற கர்வம் துளியும் இல்லாதிருந்தது. சாரதாவுக்கு அவர்களைப் பிடித்துப் போயிற்று.

அவர்களுக்கும் சாரதாவைப் பிடித்துப் போயிற்று.

அதற்குப்பின் அவர்கள் தொலை பேசியில் தொடர்பு கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருக்வில்லை. படுக்கையறையின் பின் கதவைத் திறந்து கொண்டு சிட் அவுட்டில் வந்து சீதா சாரதாவை உரத்த குரலில் கூப்பிட்டுப் பேசினாள்.

சாரதாவும் சில சமயம் படுக்கையறை திரைச் சீலையை விலக்கிவிட்டு ''சீதா! உன்னைத்தானே இப்படி வா'' என்று குரல் கொடுத்துப் பேசினாள்.

நாளைக்கு ஒரு முறையேனும் இருவரும் இவ்வாறு அளவளாவிக் கொண்டனர். ஞாயிற்றுக்கிழமைகளில் கோதண்டராமனும் அவர்களது பேச்சில் கலந்து கொண்டான்.

'ஒரு புது தினுசு துவையல். பெண்கள் பத்திரிகையில் படித்தேன்? உடனே செய்து பார்த்தேன். உங்களுக்கு வேலைக்காரப் பெண்ணிடம் கொடுத்து அனுப்பி யிருக்கேன். பிறகு உங்க அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்' என்று சிட்அவுட்டிற்கு வந்து எச்சரிக்கை கொடுப்பாள் சீதா. ''உன் வீட்டுக்காரருக்கு அடை பிடிக்குமே. சூடா மருதாயிகிட்டே குடுத்து அனுப்பி யிருக்கேன். அவரைச் சாப்பிடச் சொல்'' தன் ஜன்னல் வழியே குரல் கொடுப்பாள் சாரதா.

உணவுப் பொருள்கள், பத்திரிகைகள், புத்தகங்கள் எல்லாம் இரு வீட்டிலும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.



இரண்டு குடும்பமும் அன்பிலே இணைந்து மிகவும் நெருக்கமாயின. அப்பாடா! தனிமை ஒரு வழியாகத் தொலைந்தது. பேச்சுத் துணைக்கும், தளர்ந்துவிட்ட உடலுக்குத் தெம்பு கொடுக்கும் காயகல்பம் போல ஒரு இளம் பெண்ணின் தோழமை ஏற்பட்டது எத்தனை பெரிய அதிர்ஷ்டம். பல தடவை எண்ணி மகிழ்ந்தாள் சாரதா.

## 2

தீபாவளி நெருங்கிக் கொண்டு வந்தது. வேலைக் காரி மருதாயி ஒரு வேளை வந்து வேலை செய்கிறவள். ஆனாலும் ஒரு புதுப் புடவையை எதிர்பார்த்தாள். தீபாவளி - பொங்கல் பண்டிகைகளுக்கு வீட்டுக்காரர்கள் புதிய துணி மணிகளை எடுத்தாலும் எடுக்காவிட்டாலும், அவர்களை நம்பி வாழும் வேலையாட்களுக்கு எடுத்துத் தர வேண்டியது கடமையாயிற்றே!

ஆனாலும் மருதாயி மிகவும் திருப்தியில்லாதவளாக இருந்தாள்.

சுங்கடிச் சேலை வேண்டும் என்றாள். சீதாவுடன் கூட அந்தக் கடைக்குச் சென்று அவள் கேட்ட வண்ணத்தில் சேலை எடுத்து வந்தும் பயன் இல்லை.

''இதைக் கட்டிக் கொண்டால் வயதானவள் போலத் தெரியும். வேண்டாம். வாயில் புடவை எடுத்துத் தந்து விடுங்கள்'' என்று வாங்கியதை ஏற்க மறுத்துவிட்டாள்.

''பரவாயில்லை நான் கட்டிக் கொள்கிறேன்'' என்று சாரதா அதைத் தனக்கு வைத்துக் கொண்டு மறுபடியும் சீதாவுடன் கடைகளில் ஏறி இறங்கினாள்.

''இந்தக் கலர் எனக்குப் பிடிக்காதே. இதையா போய் வாங்கிட்டு வந்தீங்க. எனக்குப் பச்சைக் கலரில் சேலை எடுத்துத் தரச் சொன்னேனே'' என்று மருதாயி அதையும் வாங்க மறுத்தபோது சாரதாவுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது.

''பரவாயில்லை, கடைக்காரர் தெரிஞ்சவர். அவரிடம் இதைக் கொடுத்து திரும்ப நான் ஏதாவது என் உபயோகத்திற்கு வாங்கி வருகிறேன். உன்னிடம் பணமாகத் தந்து விடுகிறேன் சரிதானே'' என்று கேட்டபோது, அதற்கும் அவள் ஒப்புக் கொள்ளவில்லை.

''பணத்தை வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போனால் என் ஊட்டுக்காரர் அதை ஒரே நாளில் குடிச்சுத் தீர்த்துடுவார். நீங்களே பார்த்து ஒரு பச்சை நிறத்திலே வாயில் சேலை எடுத்துத் தந்துடுங்கள் அம்மா'' என்று அவள் அழுகை கலந்த குரலில் கேட்டபோது சாரதாவுக்கு கோபத்திற்குப் பதில் பரிதாபம் ஏற்பட்டது.

தொலையட்டும் என்று மூன்றாவது முறையாக அவள் சீதாவுடன் மறுபடி கடைக்குச் சென்றாள்.

இந்த முறை அவள் வாங்கி வந்த சேலைக்கு மறுப்புத் தெரிவிக்காது மருதாயி பற்கள் அனைத்தும் தெரிய சிரித்துக் கொண்டு அதை வாங்கிக் கொண்டாள்.

தீபாவளி என்று தனிப்பட்ட முறையில் அவள் அந்தப் பண்டிகையைக் கொண்டாடுவதில்லை. அதனால் அதிகமாகப் பலகாரம் தயாரிப்பதுமில்லை.

ஆனால் வேலைக்காரி மருதாயிக்குக் கொடுக்க வேண்டுமே. புதிதாக ஏற்பட்ட சிநேகிதர்களான சீதா - கோதண்டராமனுக்குத் தரவேண்டுமே. சிரமத்தைப் பாராது இனிப்பில் இரண்டு தினுசும், காரத்தில் இரண்டு தினுசும் செய்து பத்திரமாக டப்பாக்களில் அடக்கினாள்.



சீதாவின் வீட்டிற்கு வந்து அவளுக்குப் பலகாரத் தயாரிப்பில் உதவி செய்வதாகக் கேட்டபோது சீதா மறுத்து விட்டாள்.

''நானே தயாரித்துக் கொண்டு வந்து உங்களுக்குக் கொடுத்தால்தான் அது பண்டிகையின் பெருமையை அடையும். என்ன புடவை வாங்கியிருக்கிறேன் என்றா கேட்கிறீங்க - அதுவும் ஒரு ஸஸ்ப்பென்ஸ்'' தொலை பேசியில் மணிபோல சிரித்தாள் சீதா.

தீபாவளி அன்று விடியற்காலையே அந்தச் சூழ்நிலை பட்டாஸ் வெடிகளின் ஓசை ஓயாமல் அதிர்ந்தது.

திரையை விலக்கி - அடிக்கடி அந்தப் பக்கத்து சிட் அவுட் கதவை எட்டிப் பார்த்தாள் சாரதா.

போக்கிரிப் பெண். வேண்டுமென்றே சமையல் அறை ஜன்னல்களைக்கூட மூடிவிட்டிருந்தாள்.

இருள் பிரியாத வேளை... அழைப்பு மணி கிறுகிறுத்தது. அவளுக்குத் தெரியும். மருதாயி அத்தனை சுருக்காக வந்து விடமாட்டாள் என்று.

கதவைத் திறந்தபோது, கல்யாண மாப்பிள்ளை - பெண்போல... கோதண்டராமன் - வேட்டி சட்டை உத்திரீயமும், அவள் அழகான நீலவண்ணக் காஞ்சிபுரப் பட்டுச் சேலையும், கழுத்திலே நீலக்கல் அட்டிகையுமான அலங்காரத்தில் கையில் ஒரு ஸ்டீல் தட்டை வெள்ளைத் துணியால் மூடிக் கொண்டு கணவனுடன் உள்ளே வந்தாள்.

''கங்கை ஸ்நானம் ஆச்சா?'' என்று விசாரித்தபடி கையிலிருந்ததட்டை மேஜைமேல் வைத்துவிட்டு இருவரும் அவள் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தனர்.

சாரதாவின் நெஞ்சை என்னவோ அடைத்துக் கொண்டது. இப்படிப் பாசமும் நேசமுமாக அவளது உறவினர்கள் கூட அவளிடம் நெருங்கியதில்லையே? இதென்னவோ விட்ட குறை தொட்ட குறை போலும். மனம் நெகிழ்ந்துபோய் அப்படியே சீதாவை வாரி எடுத்து தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். ''அடுத்த தீபாவளிக்கு இந்த இனிப்புகளுடன் கூட கை நிறைய ஒரு இனிப்பை எடுத்துக் கொண்டு தரணும்னு வாழ்த்தரேன்.''

''சாரதா அம்மா உங்கள் ஆசி நிறைவேறிட்டிருக்கு. முந்தா நேத்து நான் டாக்டர் ரேவதியைப் போய்ப் பார்த்தேன்.

''நேத்துதான் பரிட்சையின் முடிவைச் சொன்னாங்க. டெஸ்ட் பாசிடிவ் என்றாங்க.'' சாரதாவின் காதுகளில் மட்டும் கேட்கும்படி அவள் இரகசியமாக சொன்னபோது தன் பெண்ணுக்கு ஏற்பட்டதொரு நிறைவினைப் போல சாரதா அக மகிழ்ந்து போனாள்.

''கோதண்டராமன், உங்கள் இருவருக்கும் பாராட்டு தல்கள். இன்னிக்கு நீங்க ரெண்டு பேரும் என்னோட உட்கார்ந்து காலை காப்பி, டிபனைச் சாப்பிட்டுட்டுப் போறீங்க. வீட்டுக்குப் போக உங்களுக்கு அனுமதி தரமாட்டேன்'' என்று அன்புடன் கூறியபடி அவர்கள் இருவரையும் முன்னறையில் உட்கார வைத்து உபசரித் தாள்.



''சரி... உங்கள் உத்திரவுக்கு ரெண்டு பேரும் கீழ்ப்படிகிறோம்'' சிரித்தான் கோதண்டராமன்.

''இல்லை, மூன்று பேரும் கீழ்ப்படிகிறோம்னு சொல்லுங்க'' என்று சிரித்த சாரதா, அவர்கள் மூவரும் சாப்பிட தட்டுகளை எடுத்து பரபரப்புடன் மேஜைமீது வைத்தாள்.

''நான் தேன்குழலும் மிக்ஸரும், மைசூர்பாகும் பாதாம் அல்வாவும் செய்திருக்கிறேன். நீ என்ன செய்திருக்கே பார்க்கலாமா?'' என்று விளையாட்டாகப் பேசியபடி, தட்டின் மேலிருந்த வெள்ளைத் துணியை நீக்கிப் பார்த்தாள். ரவா லட்டும், லட்டுகளும் ஒரு பிளாஸ்டிக் பையில் ஒரு புறம் வைக்கப்பட்டிருந்தன. இன்னொரு ஸ்டீல் கிண்ணத்தில் கணிசமான அளவு காராபூந்தியும் ஓமப்பொடியும் இருந்தன.

''காலை காப்பி, டிபனுக்கு இட்டலி வெங்காய சாம்பார் வைத்திருக்கிறேன். இனிப்புடன் சேர்த்து சாப்பிடலாம்'' என்று சாரதா அழைத்தபோது அவர்கள் ஆவலுடன் வந்து அமர்ந்து கொண்டனர்.

கணவனை இழந்த பின்னர் அவள் தீபாவளி பண்டிகையையோ, பொங்கல் பெருநாளையோ இத்தனை மகிழ்ச்சியாக மற்றவர்களுடன் கழித்ததே யில்லை.

விடிந்த பின்னர் பட்டாஸ் சத்தங்கள் ஓரளவு அடங்கிய பின்னர், வெற்றிலை பாக்கு, குங்குமம் வாங்கிக் கொண்டு, சிவந்த கன்னத்திலே சாரதாவின் அன்பு முத்தத்தையும் வாங்கிக்கொண்டு சீதா கணவனுடன் வெளியேறினாள். அதற்குப் பின்னர் சீதாவை அவள் அதே

ஆனந்த நிலையில் பார்க்கமாட்டாள் என்பதை முன் கூட்டியே சிறிதளவும் அவள் எதிர்பார்க்கவேயில்லை.

விடிந்த பின்னர் மருதாயி புதுப்புடவையும், தலையில் பூவும், வாய் நிறைய வெற்றிலை பாக்கும், புன்னகையில் உப்பிய கன்னமுமாக வேலைக்கு வந்தாள்.

வீட்டு வேலைகளை அவசரமாக செய்து முடித்து விட்டுத் தன் பங்குக்குண்டான பலகாரங்களை வாங்கிப் பொட்டலம் கட்டிக் கொண்டு புறப்பட்டாள்.

அதற்குப்பின்... ஓயாது அவள் வீட்டு வாயில் அழைப்பு மணி தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்தது.

சகோதரி சாவித்திரி தன் குடும்பத்துடன், புதிதாகத் தாங்கள் வாங்கியிருந்த நீல அம்பாசிடர் காரில் வந்து இறங்கினாள்.

அவளது பேரக் குழந்தைகள் வழக்கம்போல ஒரு இடத்திலும் நிற்காமல் மேஜை, நாற்காலிகள் மீது தாவிக் கொண்டிருந்தனர். வந்தவர்களுக்கு காப்பியும், தின்பண்டங்களும் கொடுத்து உபசரித்து அனுப்பிவிட்டு கதவைத் தாளிட்டுக்கொண்டு உட்கார்ந்தாள். மறுபடியும் அழைப்பு மணி கிணுகிணுத்தது. இப்போது தம்பி தன் மனைவி மக்களுடன் தீபாவளி வாழ்த்துத் தெரிவிக்க வந்திருந்தான். மறுபடியும் அவள் அவர்களுக்குக் காப்பி தயாரித்து இனிப்புடன் வழங்கிவிட்டு, சிறிது நேரம் பேசி இருந்து அவர்களை அனுப்பிவிட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டு உட்கார்ந்தபோது மீண்டும் அழைப்பு மணி கிணுகிணுத்தது.

இப்போது தீபாவளி இனாம் வாங்க... தெருவைக் கூட்டிச் சுத்தம் செய்பவர்களிலிருந்து... தபால்காரர் வரை ஒருவர்பின் ஒருவராக வந்தனர்.



அவள் சில சமயம் நடக்க முடியாது ரிக்ஷாவிலே செல்வதும் உண்டு. அந்தப் பகுதியிலிருந்த ரிக்ஷாக் காரர்கள் சிலர் தீபாவளி இனாம் வாங்க அடுத்தபடியாக வந்து நின்றனர்.

எல்லோருக்கும் இருந்த பலகாரம், இனாம் முதலிய வற்றை வழங்கிவிட்டு, அவள் பகல் சாப்பாட்டை அவசரமாகத் தயாரித்து சாப்பிட்டுவிட்டு அயர்ச்சி தாளாது படுத்து விட்டாள்.

வெகுநேரம் உறங்கிவிட்டிருந்தாள். தொலைபேசி கிணுகிணுத்தது. சீதாதான் பேசினாள்! ''நேரே வந்து சொல்லிக் கொண்டு போக நேரம் இல்லை. இன்று இரவு விமானத்திலேயே நான் இவருடன் பம்பாய் போய்ப் பத்து நாட்கள் தங்கிவிட்டு வரப்போகிறேன்... வரட்டுமா.''

''சுகமாகப் போய் வா!''

''உங்களுக்கு அங்கிருந்து என்ன வாங்கிக்கொண்டு வரணும்!''

''என் பேரனையோ - பேத்தியையோ பத்திரமாகத் திருப்பி எடுத்துக் கொண்டுவா. அது போதும்.''

''ஓ! யூ நாட்டி லேடி'' சிரித்தாள் சீதா மறு பக்கத்தில்.

அந்த சிரிப்பைக் கேட்க எத்தனை இனிமையாக இருந்தது. அன்று அவள் வினியோகித்த அத்தனை இனிப்புகளையும் சேர்த்துச் சாப்பிட்டு விட்டதுபோல் மனம் இனித்தது.

பத்து நாட்கள் சீதாவைப் பாராது - அவளது குரலைக் கேட்காது - அவள் அவ்வப்போது தயாரித்து அனுப்பும் - துவையல் குழம்புகளை ருசி பார்க்காது...

வீடும் கடைத்தெருவுமாகக் காலங்கழிக்க வேண்டுமே. சாரதாவுக்கு அந்தப் பிரிவு மனதை உறுத்தியது.

பத்து நாட்கள்தானே - திரும்பிப் பார்த்தால் நாட்கள் ஓடிவிடும்... சுவற்றில் தொங்கிய காலண்டரில் தேதிகளைக் கண்களால் கணக்கிட்டுக் கொண்டு எழுந்தாள்.

அடுத்தநாள் பொழுது விடிந்ததுமே - சாத்தப்பட்டிருந்த ஃபிளாட் ஜன்னல்களைப் பார்த்ததுமே மீண்டும் தனிமை, பாறாங்கல்லாக மனதை இறுக்குவதை உணர்ந்தாள்.

புதிதாக அந்தக் கட்டடத்தில் வந்து குடியேறியவர்கள் பலரில் அவர்களும் ஒரு பிளாட்டை வாடகைக்கு எடுத்து வசிப்பவர்கள்.

அங்கே அவர்கள் குடியேறி ஆறு மாத காலத்திற்கு மேலாகியும் சில மாதங்களுக்கு முன்தான் நெருங்கிப் பழக வாய்ப்பு ஏற்பட்டது. அந்தக் குறுகிய காலத்திற்குள் சீதா இப்படி இவளது அன்பைக் கவர்ந்து கொண்டு விட்டாளே...

உறவினர்களை ஒதுக்கிவிட்டு, தனியே வசிக்கத் துணிவாக இருந்த அவளால் இந்தச் சிறு பிரிவைத் தாங்க இயலவில்லையே?...

பல தடவை அன்று அவள் ஜன்னல் திரையை விலக்கி விலக்கி அடுத்த கட்டடத்து அவர்கள் வீட்டு - ஜன்னலை, சிட் அவுட்டின் மூடிய கதவை வெறித்தாள்.

அதற்குப்பின் நாட்கள் மிகவும் தாமதமாக நகர்வது போன்ற பிரமையில் வீட்டு வேலைகளைக் கவனிப்பதும் - தனிமை தாங்க முடியாது வேதனை செய்தால்... பிளாஸ்டிக் கூடையுடன் கடைக்குப் போவதுமாகக் காலத்தை ஓட்டினாள்.



## 3

**வ**ண்ணாரப் பேட்டை வரதப்பன் தெரு எட்டாம் எண்ணில் வசித்த சங்கநாதன் அக்கம் பக்கத்தவர்களுக்கு ஓர் அடக்கமான மனிதனாகத் தெரிந்தான்.

மண்ணடியில் ஏதோ கடையில் வேலை பார்க்கிறான். மனைவியை இழந்தவன். தானே சமைத்துச் சாப்பிடுகிறான். வெற்றிலை பாக்குகூட போடாத நல்ல குணமுடைய மனிதன். யார் வம்புக்கும் போகாதவன் என்ற சான்றிதழ்களைத் தெரு மக்களிடம் பெற்றிருந்தான்.

சனிக்கிழமை அந்தி வேளைகளில் அவன் வீட்டுக் கூடத்திலே சுவற்றில் தொங்கிய தெய்வப் படங்களுக்குப் பூஜை போடுவது அவன் வழக்கம். அப்போது நடக்கும் பஜனை தெருக்கோடி வரை காதைப் பிளக்கும்.

அதிலே கலந்து கொள்ள பல இளைஞர்கள் வெள்ளை வேட்டி - சட்டை, சுத்தமான பாண்ட் - ஸ்போர்ட்ஸ் ஷர்ட் என்ற அலங்காரத்திலே சைக்கிளிலும், ஸ்கூட்டரிலும் கலந்து கொள்வார்கள்.

சிலசமயம் அவன் தெரு மனிதர்களுக்குப் பூப்போட்டு கல்யாணங்களுக்குப் பொருத்தம் பார்த்துச் சொல்வது வழக்கம்.

சோழிபோட்டு ஜோசியமும் சொல்வதுண்டு.

ஆனால் மனிதன் யாரிடமும் ஒரு செல்லாத காசைக் கூட கை நீட்டி வாங்கியதில்லை.

அவன் உள்ளத்திலே பிறக்கும் வாக்குகளை, உலகத்தில் உள்ளவர்களுக்கு இனாமாக வழங்க

வேண்டும் என்பது அவன் பயபக்தியுடன் வணங்கும் காளிமாதாவின் ஆணை... என்று, தெரு மக்கள் அன்போடு கொடுக்கவரும் எந்தக் காணிக்கையையும் அவன் வேண்டாம் என்று ஏற்க மறுத்து விடுவது வழக்கம்.

தெரு மக்களுக்கு சங்கநாத ஐயாவாக மதிப்புக் குகந்ததொரு துறவியாகத் தெரிந்த அவன் காவல்துறை இலாகாவிற்கு சங்கன் என்றதொரு ஜேப்படித் திருடனாக இருந்தான். காவல்துறை கண்களில் மிளகாய் பொடி போட்டு விட்டுத் தன் தொழிலை இங்குமங்கும் மின்னல் வேகத்தில் செய்து கொண்டிருந்த அவன் வெகுகாலம் பிடிக்கப்படாது நழுவிக் கொண்டேயிருந்தான்.

அப்படிப்பட்டவனுக்கும் ஒரு வீழ்ச்சி ஏற்படத்தான் செய்தது.

எதிர்பாராத விபத்து அது. ஒரு சமயம் அவன் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் தெருக்கூட்டத்திலே, பம்பாய் சேட் ஒருவரின் பையில் பிதுங்கிக் கொண்டிருந்த மணிப்பர்சைத் தொடப் போய், சேட் இந்தியிலும், தமக்குத் தெரிந்த தமிழிலும் அலற, மின்னலாகக் கூட்டத் திலிருந்து பஸ் ஒன்றில் தாவியவன், நழுவி அதன் அடியில் அகப்பட்டுப் பலத்த காயத்துடன் ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டான்.

அப்பொழுது அவன் தனது ஆசை நாயகி தாரணியின் வீட்டு முகவரியைக் கொடுத்துவிட்டுக் காவல் துறையினரது பார்வையினின்று தப்பி விட்டிருந்தான்.

சேதியைக் கேட்டு தாரணியும் தாலி கட்டிய மனைவி போல ஆஸ்பத்திரிக்கு வந்து அலறித் துடித்து ஓர் ஆர்ப்பாட்டமான நாடகத்தையே போட்டு விட்டாள்.



கொஞ்ச காலம் தெருவுக்குள் சங்கநாதன் எங்கேயோ புனித யாத்திரைக்குப் போயிருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தபோது, ஆஸ்பத்திரியிலிருந்து வெளிப்பட்ட அவன் சிறிது நாட்கள் தாரிணியின் வீட்டிலிருந்து தன் உடலைத் தேற்றிக் கொண்டு, மீண்டும் வண்ணாரப்பேட்டை வரதப்பன் தெருவிலிருந்த தன் வீட்டுக்குத் திரும்பினான். பலத்த காயத்தினால் அவனது இடது கை தன் சக்தியை இழந்து கொஞ்சம் ஊனமாகிவிட்டிருந்தது. முன்போல அவன் ஜேப்படித் திருட்டிலே வேகமாகச் செயல்பட முடியவில்லை. அதனால் என்ன? அவன் கண்காணிப்பில் அவன் உருவாக்கிவிட்ட சிஷ்ய கோடிகள் அவனுக்கு ஏராளமாக இருந்தனர்.

சுலபமானதொரு வேலைக்குத் தங்களைப் பயிற்சி செய்து, சமுதாயத்தில் உலவவிட்ட தங்களது குருநாதனை அவர்கள் நன்றியோடு நினைத்துக் கொண்டிருந்தனர். நன்றியென்பதை விட ஓரளவு அவனிடம் பயந்து கொண்டு நடந்தனர் என்றே சொல்ல வேண்டும். குருவை எதிர்த்துக் கொண்டால் சிஷ்யர்களின் முகவரி, அவர்கள் செய்த ஜேப்படித் திருட்டின் விவரம் இத்யாதிகள் காவல் துறை அதிகாரிகளுக்கு கையெழுத்தில்லா கடிதங்களாகப் போய்ச் சேர்ந்துவிடும்.

ஒரு தடவை இல்லாவிட்டால் ஒரு தடவை கட்டாயம் சிக்கிக் கொண்டு விடுவார்கள். காவல்துறை அதிகாரியிடம் சிக்கிக் கஷ்டப்படுவதைவிட அந்த தொழிலில் பயிற்சி கொடுத்த 'ஆசிரியருக்கு' அன்றாடம் தாங்கள் தேடிக் கொண்ட ஊதியத்தில் ஒரு சதவிகிதத்தைக் கொடுத்து விடுவது மேல் என்ற எண்ணம் அவர்கள் அனைவருக்கும் உறுதியாக ஏற்பட்டிருந்தது. சங்கநாதன்

முன் போலவே தெருவில் மிகுந்த அடக்கமான மனிதனாக வாழத் தொடங்கி விட்டிருந்தான்.

காலை வேளையில் வெள்ளை வேட்டியும் சட்டையும், நெற்றியில் பட்டையான திருநீறும், அதன் நடுவே குங்குமப் பொட்டுமாக அவன் மெள்ள நடந்து எதிர்ப்பட்ட பெண்களைக் கண்டால் தலைகுனிந்தபடி ஒதுங்கிக்கொண்டு வேலைக்குப் போய் வந்தான்.

தெரு மனிதர்கள் வேலை என்று எண்ணியது அவன் தாரணியைப் போய்ப் பார்த்துவிட்டு அவளுடன் காப்பி, பலகாரம் சாப்பிட்டு நாளின் பொழுதை அவளது கணவனாக அந்த வீட்டில் கழித்துவிட்டு, மாலை மிகவும் சோர்ந்து களைத்துப் போன உழைப்பாளியாக வீடு திரும்புவதைத்தான். இவை அவனது நித்யபடி அலுவல்கள்.

தினமும் ஒன்று அல்லது இரண்டு சிஷ்யர்கள் அந்தி வேளையில் அவனைப் பார்க்க வருவார்கள். தங்களது காணிக்கையைச் செலுத்திவிட்டுப் போவார்கள். வார முழுவதும் திரட்டிய பணத்தை அவன் தன் சொந்த செலவுக்குக் கொஞ்சம் ஒதுக்கிக்கொண்டு மீதியை வங்கி ஒன்றில் தாரணியுடன் கூட்டுக் கணக்கில் வேறு ஒரு பெயரில் சேமித்துக் கொண்டிருந்தான்.

அந்த வகையில் அவன் ஒரு இலட்சாதிபதியாகவே இருந்தான்.

ஆனால் வரதப்பன் தெருவில் அடக்கமானதொரு உழைப்பாளியாக, வாடகையை முதல் தேதியே வீட்டுக்காரரிடம் கொடுத்து விட்டு மிகவும் நல்ல மனிதனாக வாழ்ந்துகொண்டிருந்தான்.



சனிக்கிழமைகளில் நடக்கும் பஜனைக்குப்பின், தெருக் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கிவிட்டு அவன் தெருக்கதவை அடைத்துக் கொண்டு, பஜனையில் கலந்து கொள்ள வந்த சிஷ்ய கோடிகளுக்கு அறிவுரை வழங்குவது வழக்கம்.

வெளியில் நீங்க வேலைக்கு கிளம்பும்போது நல்லா உடுத்திக்கொண்டு பார்வைக்குப் படிச்ச பசங்க போலத் தெரியணும். அது முக்கியம்.

சினிமாவில் க்யூவில் நிற்கின்றவர்கள் பக்கம் உங்க பார்வை திரும்புகிறதா. நீங்களும் க்யூவில் போய் நில்லுங்கள். மணிபர்சை ஷர்ட் பையில் போட்டுக் கொண்டிருப்பவன், பாண்ட் பின் பையில் பணத்தைச் சொருகிக் கொள்கிறவன் பின்னால் நிற்பது நல்லது.

உங்கள் குறியைத் தேடிக் கொண்டபின் மெல்ல அந்த ஆள் தோள் பட்டையில் கையை வையுங்கள்.

தோளைக் குலுக்கினாலோ, அவன் முகத்தில் இறுக்கம் தெரிந்தாலோ உடனே நகர்ந்து கொண்டு விடுங்கள். ஆள் உஷாராக இருக்கிறான் என்று அர்த்தம்.

உங்கள் கை தோள்பட்டை மீது பட்டும், எருமை மாட்டு மேல் தண்ணி விழுந்தாற்போல ஆசாமி அசட்டையாக இருந்தால், நான் முன்னமே சொல்லிக் கொடுத்திருக்கிறபடி பிளேடினால் மெல்ல, பாண்டின் முன் பின் பாக்கெட்டைக் கீறிவிட்டு சட்டென்று அவன்மீது மோதுவது போலப் பாவனை காட்டி, பணத்தைக் கொத்திக் கொண்டு விடுங்கள். பிறகு கூட்டத்தின் இறுக்கம் தாங்காதது போல விரைவில் க்யூவிலிருந்து நகர்ந்து மறைந்து விடுங்கள்.

பஸ்ஸிலும் இதே முறையைக் கையாள வேண்டும்.

ஆண்களைவிடப் பெண்கள்தான் மிகவும் ஏமாந்தவர்கள்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு தோள் பட்டையில் பையுடன் கடைத்தெருவில் சாமான் வாங்க வருகிறவர்களைக் கண்ணி வையுங்கள்.

அதுவும் பண்டிகைக் கூட்டத்திலே உங்கள் வேலை மிகவும் வெற்றி தரும்.

''கண்ணாடியில் புடவை கட்டியிருந்த பொம்மையைக் கொஞ்ச நேரம் வேடிக்கை பார்க்கிறதுக்குள்ளே எந்தப் பாவியோ என் தோள் பையை பிளேடால் கீறி, பண்டிகைக்குத் துணி வாங்க வச்ச பணத்தையெல்லாம் எடுத்துகிட்டு போயிட்டானே'' என்று பெண்கள் ஓல மிடும்போதுதான் உங்கள் தொழில் திறமை பளிச்சிடு கிறது. இப்படியெல்லாம் உபதேசித்த குரு, சில நாட்களுக்குப் பின் தனது சிஷ்யர்களுக்கு வேறு ஒரு வகைத் திருட்டையும் பற்றி போதித்தான்.

பெண்கள் கழுத்து சங்கிலியைப் பறிக்கும் வித்தை தான் அது. ஜேப்படி திருட்டில் சில சமயம் சில கருமிகளின் மணிபர்சில் காசுகள் அதிகம் வைப்ப தில்லை. வர வரக் கூட்டத்திலே பயணப்பட நேரும் ஆசாமிகள் ரொம்பவும் ஜாக்கிரதையாகிக் கொண்டு வருகிறார்கள்.

வேலைக்குப் போகும் பெண்கள் அதிகமாகிக் கொண்டு வரும் இந்நாளில் இனி நமது திறமையை அவர்கள் பக்கம்தான் திருப்பவேண்டும்.



ஒரு பெண் எத்தனை மணிக்கு வேலைக்குப் புறப் படுகிறாள்; எங்கே செல்கிறாள்; எப்பொழுது திரும்பு கிறாள்; அவள் எந்த வழியாக வீட்டுக்கு வருகிறாள் என்பதை சில நாட்கள் கூர்மையாகக் கவனியுங்கள்!

ஏன் என்றால் வீட்டுக்குப்போய் அவர்கள்தானே இரவு சாப்பாட்டைத் தயாரிக்கணும்? அப்படி அவசரப் படும் பெண்கள்தான் உங்கள் குறியாக இருக்கவேண்டும். இருட்டு நேரத்திலே, தன்னந்தனியே திடலில் குறுக்காகப் போகும் பெண்ணைப் பின் தொடர்ந்து சென்று சட்டென்று கழுத்தில் உள்ள மாங்கல்யத்தைப் பிடித்து இழுங்கள். சங்கிலியாக இருந்தால் உங்கள் வசம் உள்ள கிடுக்கு கத்திரியால் பொட்டென்று கத்தரித்து இழுத்துக் கொள்ளுங்கள். இந்தவிதத் திருட்டில் நீங்கள் அடையப் போகும் லாபம் என்ன என்பதை மறக்காதீர்கள். குறைந்த பட்சம் மூவாயிரம் ரூபாயாவது ஒரு தடவைக்கு கிட்டும். ஏழைப்பெண் கூட கழுத்திலே மஞ்சள் கயிற்றில் ஒரு தங்கத்தாலி அணிந்து கொண்டு இருப்பாள் என்று உபதேசித்து, சைக்கிளிலும், ஸ்கூட்டரிலும் அவர்களை இந்தத் திருட்டில் படையெடுக்க அனுப்பி, அந்த வகையில் சங்கநாதன் தன் பங்குக்கு வீட்டில் உட்கார்ந்த படியே நிறைய சம்பாதித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் இயற்கை அவனைக் கண்டு கோபித்துக் கொண்டு விட்டது.

ஒரு நாள் தாங்க முடியாத மாரடைப்பால் சிஷ்யர் யாரும் அருகில் வந்து உதவுமுன் அவன் இறந்து போனான்.

அனாதையாகிவிட்ட அவனைக் கண்டு தெரு மக்கள் பரிதாபப்பட்டு அவனுக்கு தரும கொள்ளி போட்டு காரியத்தை முடித்து விட்டனர்.

அதுசமயம் அவனது வீட்டின் பக்கம் தாரணி எட்டிப் பார்க்கவில்லை. சிஷ்யர்கள் யாரும் தலை காட்டவில்லை.

ஆனால் அவன் சொல்லிக் கொடுத்த பிழைப்பை இப்போது சுதந்திரமாக நடத்திக்கொண்டு ஒரு கூட்டமே நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தது.

அதைச் சேர்ந்தவன்தான் ஆனந்தன். அந்தப் பெயர் பெற்றோர்கள் வைத்தது. ஆனால் திருட்டுப் பொருட் களை விற்கும் சமயத்தில் அவன் அங்கங்கே வைத்துக் கொள்ளும் பெயர்கள் ஏராளம்.

பெற்றோர்களைக் கிராமத்தில் விட்டுவிட்டுப் பட்டணத்திற்கு வந்தவன் சங்கநாதனின் குழுவிலே எப்படியோ வந்து சேர்ந்து விட்டான்.

பதினெட்டு வயதில் ஆரம்பித்த தொழில் இப்போது வயது முப்பதை எட்டிக் கொண்டிருந்த போதும் விட மனமின்றி தொடர்ந்து கொண்டிருந்தான். சொந்தமாக சம்பாதித்ததில் ஒரு ஸ்கூட்டர், தங்க ஒரு தனி ஃபிளாட், வெளிநாட்டு சிகரெட்டுகள் - குடி வகைகள் - பொழுதை இன்பமாகப் போக்க பெண்களின் உறவு என்று, அவன் வாழ்க்கை மிகவும் வேகமாக சுவாரஸ்யமாகப் போய்க் கொண்டிருந்தது.

ஆனந்தன் பத்து வகுப்புவரை படித்தவன். போதாத திற்குப் பட்டண வாசத்திலே அங்குமிங்கும் ஆங்கிலத்தை யும், இந்தியையும் பொறுக்கிக் கொண்டவன். யாரிடம்



எப்படிப் பேச வேண்டும். எந்தச் சமயத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று தெரிந்திருந்தான். தொழிலில் மிகவும் திறமைசாலி.

''மதுரா அபார்ட்மெண்ட்'' எதிரே சாலையி லிருந்ததொரு கடையில் குளிர்பானம் சாப்பிட்டுக் கொண்டு கண்களை ஓட்டியபடி நின்றபடி, பிளாஸ்டிக் கூடையில் காய்கறிகளுடன் அந்த வழியாக ஃபிளாட்டின் பக்கம் திரும்பிய சீதா அவன் பார்வையில் பட்டு விட்டாள்.

மாலை வேளையின் மஞ்சள் வெய்யிலில் கொஞ்ச தூரத்திலே நடந்து வந்த அவளைக் கண்டு அவன் திகைத்துப் போனான்.

திரைப்படங்களில் கூட அப்படிப்பட்டதொரு கனவுக் கன்னியைக் கண்டதில்லை.

அருகே வர வர, அவளைக் காலோடு தலை வெறித் தான். மனதிலே ஒரு போதை உருவாவதை உணர்ந் தான். சங்கு போன்ற அவள் கழுத்திலே பொன்னால் ஆன தாலிச்சரடு. கைகளில் பொன் வளையல்கள், காதுகளில் வைரத்தோடு.

சரியான வேட்டைதான். அத்துடன் அவளது அழகு அவனது வெறிக்கு பெரிய விருந்தாகும் போல அல்லவா உணர்ச்சிகளைத் தூண்டுகிறது. குளிர்பானத்தைக் குடித்துக் கொண்டே அவளை வெறித்தான் - வெறித் தான்.

வெறியை அடக்கமாட்டாது வெறித்தான்.

அடுத்த நாள் காலை மறுபடியும் அவன் அந்தக் குளிர்பானக் கடையின் முன் தன் ஸ்கூட்டரை நிறுத்தி

விட்டு, சட்டைப் பையிலிருந்த கறுப்புக் கண்ணாடியை எடுத்து அணிந்துகொண்டு மெல்ல குளிர்பானத்தை உறிஞ்சியபடி நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான்.

அவனுடைய அதிர்ஷ்டம் சீதா தன் வீட்டில் வேலை செய்த வேலைக்காரியின் மகள் பனிரெண்டு வயது சிறுமி பாக்யத்துடன் மளிகைக் கடைக்குப் புறப்பட்டிருந்தாள்.

நின்ற இடத்திலிருந்து அசையாது கண்களால் அவளைத் தொடர்ந்து கொண்டிருந்தான் ஆனந்தன்.

வீட்டுக்குத் தேவையான சில சாமான்களை வாங்கி சிலவற்றைத் தனது துணிப்பையில் போட்டுக் கொண்டு, சில பொட்டலங்களை இன்னொரு பையில் போட்டு பாக்கியத்தின் கையில் கொடுத்து அவளுடன் திரும்பிக் கொண்டிருந்தாள் சீதா. சிறிது தூரத்தில் வழியில் ஒரு பத்திரிகைக் கடை. அந்த வாரம் அவள் வாங்க மறந்து போன சில வாரப் பத்திரிகைகளை ஆவலுடன் வாங்கி அவைகளை பாக்கியத்திடம் கொடுத்து எடுத்துவரச் சொல்லி அவள் முன்னே நடந்தாள்.

பாக்கியம் எங்கேயோ பராக்குப் பார்த்த வண்ணம் வந்தவள் ஒரு சைக்கிள் ஓட்டி மீது முட்டிக்கொண்டு நல்ல வேளை காயம்படாது சாமான் பையையும், பத்திரிகைகளையும் போட்டுக்கொண்டு தெருவில் விழுந்து விட்டாள்.

இது மாதிரி சந்தர்ப்பங்களில் ஆனந்தன் கதாநாயகனாக மாறிவிடுவது வழக்கம். அடடா? பாவம் குழந்தை! என்று கூவிக்கொண்டு குளிர்பான பாட்டிலை சட்டென வைத்துவிட்டு ஓடிவந்தான். பாவாடையைத் தட்டிவிட்டுச் சாமான் பையைத் தூக்கிக் கொடுத்துவிட்டு, தெருவோரத்தில் விழுந்துவிட்ட பத்திரிகைகளைப் பொருக்கி எடுத்து அவளிடம் கொடுத்தான்.



''உங்களைத்தானே அம்மா. குழந்தையைப் பார்த்துக் கூட்டிக்கொண்டு போகாம இப்படித் தவிக்க விட்டுட்டீங்களே'' என்று கேட்டபடி சீதாவின் எதிரில் வந்து நின்றான்.

ஆனந்தன் பார்ப்பதற்குக் கொஞ்சம் நன்றாகவே இருப்பான். பட்டணத்து வாசத்தில் அதை மிகைப் படுத்திக் கொள்ளும் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டிருந்தான்.

சாதாரணமாக அவனைப் பார்க்கும் எந்தப் பெண்ணும் அவனை ஒரு சங்கிலி அறுக்கும் திருடன் என்றே இனம் கண்டு கொள்ள மாட்டார்கள். ஏதோ ஒரு நல்ல உத்தியோகத்தில் இருக்கும் படித்த, இலட்சணமான வாலிபன் என்றுதான் கணிப்பார்கள்.

அதையே தனது வியாபார சரக்காக வைத்துக் கொண்டு அவன் சில பெண்களையும் காதலில் மோசடி செய்தவன் என்ற பெருமைக்கும் உரியவன்.

சீதா அவனை நிமிர்ந்து பார்த்தாள். அலைகளால் நெளிந்த அவனது கிராப்பு சிகையோ, கோதுமை நிறத்தில் தெரிந்த அவனது வசீகரமான முகமோ அவள் கண்களில் படவில்லை.

விஷமம் பொங்கிய அவனது புன்சிரிப்பை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

கருப்புக் கண்ணாடியை கழற்றிவிட்டு உல்லாசமாக அதை சட்டைப் பையில் போட்டுக் கொண்டு, அவன்

அவளைப் பார்த்த பார்வையைக் கண்டு அவளது மேனி பயத்தில் நடுங்கிப் போனது.

உகும்! இவன் நல்லவன் இல்லை. உதவுகிறவன் போல நடிக்கிறான் என்று விரைவில் புரிந்துகொண்டவள், 'தாங்க்யூ' என்று கூறிவிட்டு அந்தப் பெண்ணைத் தன் கரத்தில் பற்றிக்கொண்டு மதுரா அப்பார்ட்மெண்டின் வாசல் வழியே சட்டென்று நடந்தாள்.

வெகுநேரம் அவளுக்கு அவனை நினைத்து பயமாக இருந்தது. மனம் சஞ்சலத்தில் குழம்பியது.

அடுத்த நாள் வெளியே சென்றபோது அவனைக் காணவில்லை.

விட்டது சனியன் என்று அவள் நிம்மதியாக இருந்த போது, ஒரு நாள் காலை அவள் விநாயகர் கோவிலுக்குப் போனபோது அர்ச்சனையை முடித்துக்கொண்டு பிரகாரத்தைச் சுற்றியவள் திடுக்கிட்டுப் போனாள்.

தன் பின்னால் இடித்துவிடும் நெருக்கத்தில் அவனும் பிரகாரத்தைச் சுற்றிக் கொண்டிருந்தான்.

வேகமாக பிரார்த்தனையை முடித்துக்கொண்டு அவள் பிரசாதக் கூடையுடன் தெருவில் நடந்தாள்.

நெஞ்சு பட்பட்டென்று அடித்துக் கொண்டது.

எதேச்சையாக அவனும் அந்தக் கோவிலுக்கு வந்திருக்கக் கூடும். அதையேன் தப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும். அவனும் அந்தப் பக்கத்தில் அருகில் எங்கேயோ வசிக்கிறான் போலிருக்கிறது. சில ஆண்களுக்குப் புத்தியேயிருப்பதில்லை. தாங்கள் கொஞ்சம்



இலக்ஷணமாக இருந்து விட்டால் எதிரில் தென்பட்ட பெண்களைப் பார்த்து அசடு வழிவதுண்டு... அந்த வகையைச் சேர்ந்த ஒரு முட்டாள் இவன் போலும்!

தனக்குள்ளேயே சமாதானம் சொல்லிக் கொண்டு வீட்டை வேகமாக அடைந்துவிட்டாள். ஆனாலும் மனதிலே ஒரு உறுத்தல், அவளை நாள் முழுவதும் வருத்திக் கொண்டிருந்தது.

இரண்டு தினங்களுக்குப் பின்னர் ஒரு நாள் மாலை அவள் மறுபடியும் பாக்கியத்தின் துணையுடன் தையல் கடை வரை போக நேர்ந்தது. பாக்கியம் கொஞ்சம் புத்தி மட்டமான பெண். சட்டென்று தன் சூழ்நிலையைக் கண்டு கொள்ளவோ புரிந்து கொள்ளவோ தெரியாத ஒரு மக்குப் பெண்.

தெருவில் விழுந்த தன்னைத் தூக்கி எடுத்து விட்டவன் தான் எதிர்க்கடையிலே பத்திரிகையை வாங்கி புரட்டிக் கொண்டு சிகரெட்டை ஊதிக்கொண்டு அவர்களை வெறித்தபடி நிற்கிறான் என்பதை அவள் உணரவில்லை.

அவளைப் போன்ற பத்தாம்பசலிச் சிறுமி சட்டென்று அடையாளம் கண்டு கொள்ள முடியாதவாறு அன்று மாலை அவன் கோட்டும் சூட்டும் டையுமாக நின்று கொண்டிருந்தான்.

சீதாவை நேருக்கு நேர் பார்த்த போது அதே விஷமச் சிரிப்பு அவன் உதடுகளில் தவழ்ந்து கொண்டிருந்தது.

அருகில் அவள் வந்ததும், ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டு மெல்ல பின்னால் துணிவுடன் அவன் வந்த போது சீதாவின் நெஞ்சு பயத்தில் வெடித்து விடும்போல் இருந்தது.

தனது கலவரத்தை அவள் வெளியே காட்டிக் கொள்ளாது வேகமாக நடந்தாள்.

இந்த மூன்று தடவைகளும் அவன் அவளைச் சந்தித்தது எதேச்சையான சம்பவங்களே இல்லை... ஏதோ கெட்ட எண்ணத்துடன் அவளை அவன் குறி வைத்துக் கொண்டு தொடருகிறான். இவனால் அவளுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்து விடுமோ!

இவனைப் பற்றிக் கணவனிடம் சொன்னால்?

கை, கால்கள் பதற எப்படியோ அவள் கீழே விழுந்து விடாது தன் ஃபிளாட்டை அடைந்தாள்.

அன்று இரவு சாப்பாட்டிற்குப் பின்னர் அவள் கணவனிடம் அதைப்பற்றிப் பேச நினைத்தாள்.

சட்டென்று ஒரு நினைவு வர, அவளது எண்ணங்கள் உள்ளே அமுங்கிக் கொண்டன.

சில தினங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தை அவன் அவளிடம் சொல்லியிருந்தான்.

அவனது அலுவலகத்தில் ஒரு ஸ்டெனோ தன்னை ஓர் அலுவலக ஊழியர் முறைத்துப் பார்ப்பதாக எண்ணிக் கொண்டு அதை மேனேஜர் வரை கொண்டு போக. முடிவில் அது வேடிக்கையானதொரு கதையாகி அலுவலகம் முழுவதும் சிரிக்கும்படி நேர்ந்துவிட்டது.

அந்த அலுவலரிடம், வேலையைப்பற்றிச் சிந்திக்கும் போது எதையாவது வெறித்துப் பார்க்கும் வழக்கமும், தமக்குள்ளே புன்முறுவலித்துக் கொள்ளும் இன்னொரு அசட்டுப் பழக்கமும் இருந்தது. குறிப்பிட்ட ஸ்டெனோ அவர் எதிரே உட்கார்ந்திருக்க நேர்ந்ததால் அவர் வெளியே



எதையோ வெறித்தது அவளை வெறித்தது போலவும், தமக்குள்ளே சிரித்துக் கொண்டது அவளைப் பார்த்து சிரித்தது போலவும் கற்பனை எழ, அது ஒரு வேடிக்கையான கதையாகிவிட்டது.

அந்த ஸ்டெனோ அந்த இடத்திலிருந்து வேறு ஒரு பகுதிக்கு மாற்றப்பட்டு விட்டதாகவும், அதற்குப் பின்னர் அந்தக் கதை அடங்க சில நாளாயிற்று என்றும் கோதண்டராமன் சொல்லி குலுங்கிச் சிரித்தான்.

சில பெண்கள் அழகாக இருந்துவிட்டால் உலகத்தில் உள்ள ஆண் பிள்ளைகள் எல்லாம் தம்மையே பார்ப்பதாகக் கற்பனை உலகில் திரிவார்கள். அந்த ஸ்டெனோ பார்க்க கொஞ்சம் நல்லா இருப்பாள். அந்தத் திமிரில் அவள் எப்படிப்பட்ட கதையைக் கட்டி ஆபீசைக் கலக்கி விட்டாள்? என்று கொஞ்சம் கோபமும் சிரிப்புமாகச் சொல்லியிருந்தான்.

இப்போது அவள், அந்த ஸ்கூட்டர்காரன் தன்னை வெறிப்பதாகவும், பின் தொடர்வதாகவும் சொன்னால் அவள் கணவன் அதை ஏற்காது கேலி செய்தால்?

உன் அழகைப் பற்றி நீ ரொம்பவும் கர்வப்பட்டுக் கொள்கிறாய். அதனால்தான் அவன் வெறிப்பதுபோல உனக்குப் பிரமை ஏற்பட்டிருக்கிறது. ஆமாம், அவன் உன்னை வெறித்து வேறுவிதமாகப் பார்க்கிறான் என்பது உனக்கு எப்படித் தெரியும். நீயும் அவனைத் திரும்பிப் பார்த்திருக்கிறாய் இல்லையா? என்று குதர்க்கமாகக் கேட்டு விட்டால்?

அந்தப் பழியை அவளால் தாங்கிக்கொள்ள முடியாதே. அவளது மென்மையான உள்ளம் எத்தனை சங்கடப்படும்.

அன்பான கணவன் என்றாலும் அவள் கோதண்டராமனை அணு அணுவாகப் புரிந்து கொண்டு விட்டிருக்கிறாள் என்று சொல்ல முடியாதே.

இந்த விஷயத்தைப் பற்றி ஆலோசனை கேட்பதற்கு அவள் சாரதா அம்மாளைத்தான் நாட வேண்டும்.

அவளைவிட வாழ்க்கையில் அனுபவம் அதிகம் பெற்ற ஒரு புத்திசாலியான பெண்மணி சாரதா. அந்தம்மாவிடம் மனம் விட்டுப் பேசி தன் பயத்தை விளக்கினால்?

அதற்குச் சந்தர்ப்பமே வரவில்லை. இடையே தீபாவளிப் பண்டிகை வந்துவிட்டது. அதிலே அவள் மும்முரமாக ஈடுபட்டு விட்டிருந்தாள். வெளியே கடைகளுக்குப் போகும் போது சாரதா அம்மா கூடவே வந்தாள். திடீரென்று என்ன காரணமோ அந்த அயோக்கியனை அந்தப் பக்கம் எங்குமே காணவில்லை.

எதற்கும் தன் மனதில் ஏற்பட்ட சஞ்சலத்தை அவள் கட்டாயம் சாரதா அம்மாவுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தபோது, அன்று உடனடியாக பம்பாய்க்குப் புறப்பட வேண்டியிருந்தது. தொலைபேசியில் தெரிவிக்க இயலாது என்று உணர்ந்து கொண்டு அவள் தன் மனதை சஞ்சலப்படுத்தும் அந்த நிகழ்ச்சியை விளக்கமாக எழுதி, அந்த அயோக்கியனது தோற்றத்தையும், அவன் உபயோகித்த ஸ்கூட்டரின் எண்ணையும் தான் கவனித்தவரை தெரியப்படுத்தி, அவளது ஆலோசனையைக் கேட்டு ஒரு கடிதத்தை எழுதி முடித்தாள்.



கணவன் வருவதற்கு முன் அதை ஒரு கடித உறையிலிட்டு சாரதா அம்மாளின் முகவரியை எழுதி பாக்கியத்திடம் கொடுத்தாள். ''வீட்டுக்குப் போகுமுன் நீ சாரதா அம்மாகிட்டே இந்தக் கடுதாசியை பத்திரமா கொடுத்துட்டுப் போகணும்'' என்று உத்திரவிட்டு, அதற்கு லஞ்சமாக இரண்டு லட்டு உருண்டைகளைத் தந்து விட்டிருந்தாள்.

அவள் அதற்குப் பின் நிம்மதியாகத் தன் பெட்டியில் சாமான்களை அடுக்கி வைத்துக்கொண்டு கணவன் வருகைக்குத் தயாராக இருந்தாள்.

அதற்கு முன்னதாக நடந்ததொரு சங்கதியை சீதா அறியமாட்டாள். தீபாவளிக்கு முதல் நாள் திடீரென்று மழை கொட்டத் தொடங்கியது. பாக்கியத்திற்கு இந்த வயதிலும் காலை வந்தபோது கையை சூப்பும் வழக்கம் விட்டபாடில்லை. மழைக்கு ஒதுங்க அவள் சாப் பாவாடையும், நனைந்த தலையுமாக இடியோசைக்குப் பயந்து கையைச் சூப்பிக்கொண்டு பக்கத்திலிருந்த ஷாப்பிங் சென்டரின் வாயிலில் ஓரமாக நின்றாள்.

அவளை அடையாளம் கண்டு கொண்டுவிட்ட ஆனந்தன் அங்கிருந்த கடை ஒன்றில் ஒரு சாக்லெட் துண்டத்தை வாங்கிக்கொண்டு வேகமாக நெருங்கினான்.

''அடாடா நீ மழையில் நனைஞ்சுட்டியே. அன்னிக்கு கீழே விழுந்த பெண் நீதானே,'' புன்முறுவலுடன் அன்பாகக் கேட்டபடி சாக்லெட் துண்டை நீட்டியதும் பாக்கியம் மனம் நன்றியில் குழைந்தது.

வாலை ஆட்டும் சின்னஞ்சிறு நாய்க்குட்டி போல ஒரே கணத்தில் அவள் மகிழ்ச்சியில் மூழ்கிப் போனாள்.

''ஆமாங்க ஐயா'' என்றபோது கடபுடா என்று கட்டடமே அதிரும்படி இடியோசை கேட்க அவள் 'ஆங்' என்று கத்திக்கொண்டு காதைப் பொத்திக்கொண்டாள்.

''இடின்னா உனக்குப் பயமா? அப்போ நீ ஏன் வீட்டை விட்டு வந்தே'' சிரித்தபடி கேட்டான்.

''சாயங்கால வேலையைச் செய்துட்டு அம்மா போயிட்டாங்க... கொஞ்சம் பாத்திரமிருக்கு விளக்கிக் குடுன்னாங்க சீதா அம்மா. அதுக்குள்ளார மழை வந்துட்டது'' காரணத்தை விளக்கினாள்.

''சீதா அம்மா மாமியார் கூடவா உன்னை வெளியே போக அனுமதிச்சாங்க'' சாக்லெட்டை உரித்து துண்டத்தை மெல்ல கடித்து அதன் இனிப்பிலே மயங்கிப்போன பாக்கியம் பற்களைக் காட்டி சிரித்தாள்.

''சீதா அம்மாவுக்கு மாமியார், மச்சான் யாரும் கிடையாது. புருசனும் பெண்டாட்டியுமாக இருக்காங்க.''

''அட அப்பிடியா. அவங்க நாலாம் நம்பரிலே தானே இருக்காங்க?''

''போய்யா நீ சொல்வது அத்தனையும் தப்பு. பதினாலாம் நம்பரிலே இருக்காங்க. காலையிலே அவங்க வீட்டு ஐயா வேலைக்குப் போனா - பொழுது போற வேளைதான் வீட்டுக்குத் திரும்புவார் - ஐயா கார் கூட வச்சிருக்கார். ஒரு நாளைக்கு அம்மா என்னை மகாபலிபுரத்துக்கு அவங்களோடு காரில் கூட்டிக்கிட்டு போனாங்க.''



''அட! பாவம் ரொம்ப நல்லவங்க போலிருக்கு - உனக்குத் தீபாவளிக்கு துணி எடுத்துக்கொடுத்தாங்களா?''

''ஓ! பாவாடை சட்டை எல்லாத்துக்கும் துணி எடுத்துத் தந்தாங்க... எங்க அம்மாவுக்கு சேலை, ரவிக்கை எல்லாம் வாங்கித் தந்துட்டாங்க... சீதா அம்மாகூட பட்டு சேலை எடுத்திருக்காங்க.''

''அடி சக்கை - பலகாரம் எல்லாம் தயாரிச் சுட்டாங்களா.''

''இப்பத்தான் ஆரம்பிச்சிருக்காங்க... லட்டு செய்யப் போறாங்க.''

''எனக்கு ரெண்டு லட்டு வாங்கிக் கொண்டு வந்து தருவியா?'' வேடிக்கையாகக் கேட்பது போலக் கேட்டுவிட்டு சிரித்தான்.

''ஆசை - ஆசை - அம்மா வீட்டுத் தோசை... நான் அவங்களுக்கு வேலை செய்யறேன்... எனக்குத் தராங்க. நீங்க என்ன செய்யிறீங்க.''

'நான் சில காரியங்கள் செய்யத்தானே இந்தப் பக்கம் பத்துநாளா அலைஞ்சிக்கிட்டிருக்கேன் - முட்டாள் கழுதை' மனதிற்குள்ளே சொல்லிக் கொண்டான். மழையும் நின்றது. பாக்கியம் துள்ளிக்கொண்டு அங்கிருந்து சாலை பக்கம் ஓடி - எதிர்ப்புறமாக நடந்து சென்று இருளில் எங்கேயோ மறைந்து விட்டாள்.

ஆனாலும் ஆனந்தன் தன் முயற்சியைக் கைவிட வில்லை.

தீபாவளி அன்று காலை அவனும் புதுத்துணிகள் அணிந்து கொண்டு வேறு ஒரு கடைமுன் புகைத்த

வண்ணம் நின்று கொண்டிருந்தான். வேலைக்காரப் பெண் பாக்கியம் புதிய பாவாடையும் சட்டையும் தலைப் பின்னலும் பூவுமாக முகமெல்லாம் புன்னகையுடன் ஒரு ஸ்டீல் டிபன் செட்டுடன் மதுரா அபார்ட்மெண்ட் வாசலிலிருந்து வெளிவருவதைக் கண்டான்.

சட்டென்று ஸ்கூட்டரைத் தள்ளிக் கொண்டு அவளைப் பின் தொடர்ந்தான்... வேறு ஒரு பகுதியை அடைந்ததும் ''இந்தாம்மா பொண்ணு. உன்பேர் என்ன சொன்னே?'' என்று கூப்பிட்டதும் அவள் திரும்பிப் பார்த்தாள் - அன்று சாக்லெட் வாங்கிக் கொடுத்தவர் என்ற மகிழ்ச்சியில்... ''என்னத்துக்கு கூப்பிடறீங்க'' விரைப் பாகக் கேட்டாள்.

''உன் பேர் என்ன சொன்னே...'' என்று அவன் கேட்டு விட்டு முறுவலித்தான். ''நான் என் பேரே சொல்லலியே...''

''இல்லே சொன்னே... கமலின்னு சொன்னே. இந்தா தீபாவளிக்கு இனாம் வச்சுக்கோ. உங்க வீட்டு அம்மா கிட்டே சொல்லாதே. விவரம் தெரியாதவங்ககிட்டே எல்லாம் ஏன் காசு வாங்கினேன்னு திட்டினாலும் திட்டு வாங்க... நான் ஏழை பாழைகளுக்கு உதவி செய்ற சங்கத்தை சேர்ந்தவன். உன்னைப் பார்த்ததும் ஏனோ என் மனம் கஷ்டப்படுகிறது. ஆமாம்... கமலி நீ பள்ளிக் கூடம் போறதில்லையா?''

''நான் கமலி இல்லீங்க; என் பேர் பாக்கியம். மாரிமுத்து குப்பத்திலேதான் நானும் அம்மா - அப்பா - தங்கச்சி தேவமணி - தம்பி குமார் எல்லாரும் இருக்கோம். பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்திட்டு, அம்மா என்னை வீட்டு வேலைக்கு கூட உதவி செய்யப் போட்டுட்டாங்க. எனக்குப் படிக்க ரொம்ப ஆசையாத்தானிருக்கு.''



''அட பாவமே... இந்தா இன்னும் அஞ்சு ரூபா சேர்த்துத் தரேன். பதினைஞ்சு ரூபாய்க்கு நீ ஏதாச்சும் புத்தகம், சிலேட்டு வாங்கி வச்சிக்கிட்டு எழுத படிக்க... நீ வேலை செய்ற அந்த படிச்ச அம்மாகிட்டயே கத்துக்கோ. உன்னைப் போல குழந்தைகள் படிக்கணும். வீட்டு வேலைக்குப் போகக்கூடாது.'' அனுதாபத்துடன் பேசி அவளிடம் புத்தம் புதிதான மூன்று ஐந்து ரூபாய் நோட்டுகளை நீட்டினான்.

பாக்கியத்திற்கு மகிழ்ச்சி கட்டுக்கொள்ளவில்லை. வீட்டிற்கு போய் அம்மாவிடம் சொன்னால் கட்டாயம் அந்தப் பணத்தை வீட்டு செலவுக்குப் பிடுங்கிக் கொண்டு விடுவாள். அதனால் அதைப் பத்தி மூச்சுவிடக் கூடாது. ''அம்மாதான் ஊருக்குப் போகப் போறாங்களே, அவங்களுக்கு எனக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்க போது ஏது'' முகத்தை சுளித்தாள்.

''அடப் பாவமே... எந்த ஊருக்கு... திரும்பி வரமாட்டாங்களா!''

''வருவாங்க, வராம எங்கே போயிடுவாங்க. பத்து நாள் ஆகும். நீ வேலைக்கு வரத் தேவையில்லைன்னு சொல்லிட்டாங்க. பம்பாய் போறாங்க. ஐயாவும் கூடத்தான் போறாங்க. இந்த மாதம் கடைசி தேதிக்கு வராங்களாம். நான் முதல் தேதி அன்னிக்கு வந்தா போதுமாம். எங்கம்மா கிட்டேயும் சொல்லச் சொன்னாங்க.''

''அட கஷ்டமே! உன் சம்பளத்தை பத்தி நாள் கணக்குப் பார்த்து பிடிச்சுக்குவாங்களா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே - என் அம்மாதான் அவங்க வீட்டுக்கு வேலை செய்யறாங்க. நான் சீதா அம்மா கூப்பிட்டா சமயத்துக்கு வந்து உதவிசெய்யறேன். ஆனால் எங்கம்மா இப்போதெல்லாம் நிதக்கும் என்னைப் பாத்திரம் கழுவ விட்டுட்டு அடுத்ததொரு வீட்டு வேலைக்குப் போயிடறாங்க.''

''ச்சோ! ச்சோ!... நீ ரொம்ப சின்னக் குழந்தை யாச்சே. உன்னையா போட்டு இப்படி வேலை செய்ய வைச்சி வதைக்கறாங்க அந்த சீதா அம்மா.''

''ரொம்ப பாத்திரம் கிடையாது. பாதியை அவங்களே விளக்கிக்கிறாங்க.''

''கொஞ்சம் வேலை செய்தாலும் காப்பி, பலகாரம் நிறைய தராங்களே. கையிலே எடுத்துப் போக சோறுகூட தராங்க.''

''ரொம்ப நல்லவங்க போலிருக்கு அந்த அம்மா அவங்களுக்கு எத்தனை குழந்தைகள்?''

''குழந்தை ஏதும் கிடையாது. அவங்க இங்க குடிவந்து ஆறு ஏழு மாசந்தான் ஆகுது. எங்கம்மா சொன்னாங்க, அவங்க கல்யாணம் கட்டிகிட்டு ரெண்டு வருசமாகுதாம்.

''பலே பலே - இத்தனை விஷயம் தெரிஞ்சி வச்சிருக்கியே. கெட்டிக்காரப் பெண்தான். அந்தய்யா பகல் வேலைக்கு வீட்டுக்கு சாப்பிட வருவாரே - அப்போ பாத்திரங்களை யார் துலக்குவாங்களாம்.



''போய்யா நீ ஒண்ணு. அந்தய்யா காலையிலே போனா பொழுது அமிங்கினதும்தான் வருவார்னு சொன்னேன்.'' சிரித்தபடி பாக்கியம் நடந்தாள்.

பதினைந்து ரூபாய் அவன் தந்து விட்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சியால் அவள் அந்தக் கடிதத்தைச் சாரதா அம்மாவிடம் கொடுக்க மறந்து நேரே தங்கள் குடும்பத்திற்குப் போய் விட்டாள்.

பகல் வேளை பசித்தபோது அம்மா, வருவதற்குக் காத்திராது அவள் அந்த சோற்றை அலுமினிய டிபன் செட்டிலிருந்து எடுத்துப் போட்டு குழம்புடன் கலந்து தின்றபோதுதான் கடிதம் ஞாபகம் வந்தது.

மறுபடி யார் அத்தனை தூரம் நடக்கிறது? நாளைக்குக் கொண்டுபோய் கொடுத்துடலாம் என்று அதைப் பத்திரமாகத் தன் பாவாடை மடிப்பில் மறைத்து வைத்து வீட்டில் எல்லாருடைய புதிய துணிகள் பத்திரப் படுத்தப்பட்டிருக்கும் தகரப் பெட்டியில் வைத்தாள். அத்துடன் அதை அவள் மறந்து போனாள்.

தேவைப்பட்ட சங்கதிகளை மெல்ல தூண்டித் துருவி அந்த மக்குப் பெண்ணிடமிருந்து கிரகித்துக் கொண்டு விட்ட ஆனந்தன் தன் வேட்டைக்கு நாள் வைத்து... மிகவும் ஆவலுடன் காத்திருந்தான்.

சிறுமி பாக்கியம் சொன்னது உண்மைதானா என்று துப்பறிய மறுநாள் காலையில் அவன் தன் ஸ்கூட்டரை எதிர்ப்பக்கமிருந்த இன்னொரு கடையின் அருகே நிறுத்திவிட்டு, மதுரா அப்பார்ட்மென்டின் வாசலில் நகர்ந்தான்.

லக்னோ குர்த்தாவும், பட்டுக்கரை வேஷ்டியும், கண்களை மறைத்த கறுப்புக் கண்ணாடியும், கையில் பாதி

புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டுமாக வந்தவனைக் கண்டு காவலாளி ஒதுங்கி விட்டான்.

லிஃப்டில் ஏறிக் கொண்டபோது வேறு சிலர் அவனுடன் அதில் இருந்தனர். பட்டணவாசத்தின் இறுக்கத்திலே பிளாட்டில் வசிப்பவர்கள் லிஃப்டில் அடைக்கப்பட்டாலும் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டுகொள்ள மாட்டார்கள் என்று அவனுக்குத் தெரியும்.

அதில் அடைக்கப்பட்ட அந்தச் சிலரும், அந்தச் சில நிமிடங்கள் கூட ஒருவர் முகத்தை ஒருவர் பாராது நவக்கிரகங்கள் போல் கூரையை முறைப்பதும் லிஃப்டின் கதவைப் பார்ப்பதுமாக நின்று கொண்டிருந்தனர்.

ஆனந்தன் யார்? அவனுக்கு அவர்கள் வசித்த குடியிருப்பில் என்ன வேலை? யாருக்கும் அக்கறை இருக்கவில்லை.

சொந்தக்காரர்களைப் பார்க்கப் போகின்றவன் போல இரண்டாவது தளத்தில் இறங்கி நடை வழியில் மெல்ல நடந்தான்.

உண்மைதான்! பதினான்காவது ஃபிளாட்டின் கதவு பூட்டியிருந்தது. இழுத்தால் பூட்டிக் கொள்ளும் காட்ரிஜ் பூட்டைத் தவிர்த்து வாசலில் தொங்கிய நாதாங்கியில் ஒரு பெரிய பூட்டும் காணப்பட்டது.

அதற்குப் பின் அவன் இரண்டு நாளுக்கொரு தடவை பஸ்ஸிலும் ஆட்டோவிலும் அங்கு வந்து வெவ்வேறு உடைகளில் வெவ்வேறு கடைமுன் நின்று அந்தக் குடியிருப்புப் பகுதியை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான்.



கடைக்காரரோ, அங்கு நடைபாதையில் ஒரு பக்கமாக சோற்றுக் கடை வைத்திருந்த பெண்மணியோ அவனைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை.

மாதக் கடைசியன்று பாக்கியம் கூறியபடி சீதாவும் அவளது கணவனும் காலையிலேயே டாக்ஸியில் வந்து இறங்கியதை அவன் நேரிடையாகப் பார்த்து விட்டான்.

கணவன் கொஞ்ச நேரத்திற்குப் பின் அலுவலகம் புறப்பட்டதையும் கவனித்துக்கொண்டான்.

பாக்கியத்தையாவது வரச் சொல்லாது போனோமே என்று சீதா நொந்து கொண்டாள். பந்து நாட்களாகப் பூட்டி வைக்கப்பட்டிருந்த வீடு மக்கல் வாசனையுடன் சாத்தப் பட்ட ஜன்னல்களையும் மீறி தூசி படிந்திருந்தது.

பயணக் களைப்புப் போக முதலில் குளித்து மாற்றுடை அணிந்து கொண்டாள். கோதண்டராமன் தன் காலை உணவை வழியில் ஹோட்டலில் முடித்துக் கொண்டு அலுவலகம் போவதாகவும் அவள் அதிகம் சிரமப்படத் தேவையில்லை என்றும் கூறிவிட்டுப் போயிருந்தான்.

மறுநாள் காலையில்தான் வேலைக்காரியும் மகளும் வருவார்கள்.

அதுவரை அவள்தான் வீட்டைக் கூட்டி சுத்தப் படுத்தி கையோடு கொண்டு வந்த அழுக்குத் துணிகளைத் துவைத்துக் காயவைத்து கார்ப்பரேஷன் குடிநீரை பம்பு செட்டில் அடித்துப் பிடித்துக் காய்ச்சி ஆறவைத்து, ப்ரிஜ்ஜைத் துடைத்து, அதில் தண்ணீர் பாட்டில்களை வைத்து, அவளால் தொடர்ந்து சிந்திக்க முடியாது வேலை தொடர் சங்கிலிபோல் முன்னின்று பயமுறுத்திக் கொண்டிருந்தது.

நல்ல வேளை, அவள் புறப்படுமுன் சொல்லியபடி வழக்கமாகக் கொண்டு வந்து பால் பொட்டலங்களை விநியோகம் செய்து சம்பளம் பெற்றுக் கொள்ளும் கிழவி கதவைத் தட்டி பால் பொட்டலங்களைக் கொண்டு தந்து விட்டுப் போனாள்.

சிறிது நேரம் சென்றதும் கீரைக் கூடைக்காரி - வழக்கமாக இரண்டு நாளைக்கு ஒரு தடவை ஃபிளாட்டுக் காரர்களுக்கு நேரிடையாக வந்து விற்கும் பெண்மணி வந்து அழைப்பு மணியை அழுத்தினாள்.

அவளைக் கண்டதும் அப்பாடா என்ற நிம்மதி சீதாவுக்கு. இரவு சமையலுக்கு காய்கள் வாங்க வந்ததும் வராததுமாக ஓடத் தேவையில்லை.

தேவையான அரைக் கீரைக் கட்டுகளை வாங்கி வைத்துக்கொண்டு மற்ற வேளைகளைக் கவனித்தாள்.

பத்து நாட்கள் விடுப்பு என்றாலும் கோதண்டராமன் மனைவியுடன் ஊரைச் சுற்றியதாலும், பயணத்தினாலும் மிகவும் களைப்படைந்து விட்டிருந்தான்.

அன்று பகல் கொஞ்ச நேரம் வேலை பார்த்துவிட்டு, அலுவலகத்து மானேஜரிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுத் தூங்கப் போவதாக மனைவியிடம் எச்சரித்துவிட்டுப் போயிருந்தான்.

கணவனுக்குப் பிடித்த பருப்புக் கீரை மசியலும், வத்தல் குழம்பும் ரசமும் செய்து ஒரு பக்கம் வைத்து விட்டு, மற்ற வேளைகளை அவள் கவனித்துக் கொண் டிருந்தாள். நடமாடும் இஸ்திரிக்காரரிடம் அவள் ஊருக்குப் போகு முன்பே சொல்லியிருந்தாள்.



சரியாகப் பதினோரு மணி அளவில் அவர் வந்து கதவைத் தட்டினார்.

உடுத்திக் கசங்கியிருந்த கணவனது உடைகளையும், கசங்கி விட்டிருந்த தன் பட்டு சேலைகளையும் அவரிடம் கொடுத்து விரைவாகப் பெட்டி போட்டு எடுத்து வரச் சொல்லியிருந்தாள்.

அரை மணியில் அவர் திரும்பி விட்டார். கூலியைக் கொடுத்து, பெட்டிபோட்ட துணிகளைப் பீரோவில் அடுக்கி விட்டு, சிட்அவுட் கதவைத் திறந்து சாரதா அம்மாவைக் கூப்பிட்டுப் பார்த்தாள். ஒதுங்கியிருந்த திரைச் சீலை அந்தப் பக்கத்து ஜன்னல்கள் மூடப்பட்டிருப்பதை அறிவித்தன.

மாத முடிவு தோறும் சாரதா அம்மா நுங்கம் பாக்கத்திலிருந்த நூலகத்திற்குப் போவது வழக்கம். பஸ்ஸில் போய் வருவதற்குள் உச்சிப் பொழுதாகி விடும். கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார்கள்.

பம்பாயிலிருந்து அவளுக்காக வாங்கி வந்த சைனா சில்க் புடவையை நேரில் கொண்டு தர வேண்டும்.

சாரதா அம்மாவைப் பற்றித் தன் பெற்றோர்களிடம் சொல்லி, பேசி மகிழ்ந்த விவரத்தையும் சொல்ல வேண்டும்.

வீட்டுக்குத் திரும்பி வரும் கணவனுக்கு சாப்பாடு போட்டு அவர் உறங்கத் தொடங்கியதும் வாசல் கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு காவேரி - நர்மதா மான்ஷ னுக்கு பின்வாயில் வழியாகப் போய் அந்தம்மாளைக் கட்டாயம் பார்க்க வேண்டும்.

இந்தப் பத்து நாள் அவளைப் பாராது பத்து யுகம் போல அல்லவா தெரிந்தது.

சாப்பாட்டறை சுவற்றிலே மாட்டியிருந்த கடிகாரம் பகல் பனிரெண்டு மணியென்று காட்டியது. இன்னும் ஒரு மணிநேரத்தில் அவள் கணவன் அலுவலகத்திலிருந்து திரும்பி விடுவார். ஒரு சமயம் சற்று முன்னதாகவேகூட வரக்கூடும்.

அவளைவிட கோதண்டராமன்தான் இந்தப் பயணத்தில் ரொம்பவும் களைத்துப் போயிருந்தான்.

முதல் நாள் இரவு பனிரெண்டு மணி வரை நண்பர் ஒருவர் வீட்டில் அவர்களுக்கு விருந்து. அதன் பின்னர் தூக்கம் வராது அவள் கணவன் வெகுநேரம் ஏதோ படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். விடியற்காலை வேளை அவசரமாக எழுந்து விமான நிலையத்திற்கு விரைய வேண்டியிருந்தது.

இந்தப் பத்து நாட்களும் பம்பாயில் அவர்களிருவரும் அப்பொழுதுதான் தேனிலவு கொண்டாடும் தம்பதிகள் போல ஊரைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு, அவள் ஆசைப்பட்டதையெல்லாம் வாங்கிக் குவித்துக் கொண்டு, ஜுகு கடற்கரையில் பேல் பூரி வாங்கிச் சாப்பிட்டு, ஃபைவ் ஸ்டார் ஓட்டல் ஒன்றில் பூஃபே சாப்பாட்டை நண்பர்களுடன் சேர்ந்து அரட்டை அடித்துக் கொண்டு உண்டு மகிழ்ந்து, காந்தி மார்க்கெட்டில் புகுந்து தான் வாங்கிய அமெரிக்கன் ஜார்ஜ்ஜெட்டிற்கு அவசரமாக எம்பிராய்டரி வேலை செய்து தரச் செய்து, மகாலட்சுமி கோவிலுக்குச் சென்று வணங்கி, சோர்பஜாரில் புகுந்து வளைய வந்ததும் போதும் என்றபடி சுற்றிக் களைத்துப் போயிருந்தனர்.



பகல் சாப்பாட்டுக்குக் கணவர் வரும் முன்ன தாகவே ஒரு குட்டித் தூக்கம் போடவேண்டுமென்று அவளுக்கும் கொஞ்சம் உடல் அலுப்பாகத்தானிருந்தது.

படுக்கையறை ஜன்னல்களை நன்றாகத் திறந்து விட்டுக்கொண்டு படுக்கையைத் தட்டி தூசி போக்கிப் புது விரிப்பைப் போட்டுக் கொண்டு அப்பாடி என்று படுத்தாள். கண்களை சொருகிக்கொண்டு இன்பமான தொரு தூக்கம் அவளை ஈர்த்துக் கொண்டது.

எங்கேயோ கனவில் கேட்பது போல வாசல்மணி கிணு கிணுத்தது... திடுக்கிட்டு எழுந்தாள். தூக்கக் கலக்கம் கண்களைக் கவிந்து கொண்டிருந்தது.

அதற்குள் வந்து விட்டாரா? என்று தன்னையே கேட்டுக்கொண்டு அவள் வாயிற்கதவு அருகில் விரைந்தாள்.

அவள் கணவன் அந்த ஃபிளாட்டை வாடகைக்கு எடுத்து அவளுக்கு அதை முதல்நாள் சுற்றிக் காட்டிய போதே சொன்னான்.

பட்டணத்து ஃபிளாட் வாழ்க்கையில் தனிமை அதிகமாக இருக்கும். திருடர்களும் கொள்ளையடிப்பவர் களுக்கும் இந்தத் தனிமை மிகவும் பயனுள்ளதாகி விட்டிருக்கிறது. வேலைக்காரியோ, பால் பொட்டலம் கொண்டு வரும் கிழவியோ, இன்னும் யாரோ கதவைத் தட்டினால் சட்டென்று திறந்து விடாதே. திறக்குமுன் கதவில் பொருத்தியிருக்கும் பார்வைக் கண்ணாடி மூலம் நன்றாகப் பார்த்துத் தெரிந்துகொள்.

சோப்பு, சீப்பு இத்யாதிகளைக் கொண்டு வந்து விற்பனை செய்கிறவர்கள் என்றாலும் உடனடியாகக் கதவைத் திறக்காதே.

இப்படி விற்பனை செய்வது போல, திருடர்கள் தங்களுக்குத் துணையாக பெண் திருடர்களையும் கூட்டுச் சேர்த்துக்கொண்டு செயல்பட முயலலாம்.

உன் கணவன் ஆபத்தில் இருக்கிறான். உடனே ஆஸ்பத்திரிக்குப் புறப்படு என்று முன்பின் தெரியாதவன் அலுவலகத்திலிருந்து வந்து தகவல் கொடுப்பது போல சொன்னால் நம்பி விடாதே... அலுவலகத்துக்குப் போன் செய்து உண்மையை விசாரித்துக்கொள்.

அவர்கள் உள்ளே நுழைய முடியாதபடி முதலில் பாதுகாப்பு சங்கிலியைப் பொருத்திக்கொண்டு யாருக்கும் கதவைத்திற. நீ தனியாக இருப்பதை யாராவது கவனித்து வைத்துக்கொண்டு, உள்ளே புகுந்து உன்னைத் தாக்கித் திருட முயலலாம் - மறக்காதே என்று ஒரு நீண்ட உபதேசம் செய்திருந்தான்.

அதன்படியேதான் அவள் நடந்துகொண்டு வந்தாள்.

ஆனால் அன்று ஏனோ அவள் கணவன் வெளியே போனதும் கதவைத் தாளிட்டபோது அந்தப் பாதுகாப்பு சங்கிலியைப் பிணைக்க மறந்து போனாள்.

மலையாக வீட்டு வேலை பயமுறுத்துகிறதே என்ற நிலையில் ஏற்பட்ட மறதி அது.

தூக்கக் கலக்கத்தில் அவள் ஒரு மாபெரும் பிழை செய்து விட்டாள். வழக்கமாக பாதுகாப்புக் கண்ணாடி வழியே பார்த்துவிட்டுக் கதவைத் திறக்கும் பழக்க முடையவள் கணவன்தானே வருவார் என்ற நினைவில் சட்டென்று கதவைத் திறந்து விட்டாள்.



பாதுகாப்புக் கண்ணாடியைக் கதவில் பார்த்த ஆனந்தன் அவளைக் கதவைத் திறக்கச் செய்ய என்ன உபாயத்தைக் கையாளலாம் என்று யோசித்து முடிக்கு முன் அவனது காரியம் எளிதாகி விட்டது.

சட்டென்று உள்ளே பாய்ந்து வந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான். கதவின் மீது சாய்ந்தபடி பாண்டு பையிலிருந்த மடக்குக் கத்தியை எடுத்து, கண் இமைக்கும் பொழுதில் அவள் முன் நீட்டினான்.

''சத்தம் போட்டியோ ஒரே குத்து! வாயை மூடிக் கொண்டு நான் சொல்றதைக் கேட்டியோ பிழைச்சுப் போவே'' அடிக்குரலில் அதட்டினான்.

கருப்புச் சட்டையும் கருப்புப் பாண்டுமான உடையில் அசுரக் கண்களை உருட்டிக் கொண்டு நின்ற அவனைக் கண்டு நடுநடுங்கிப் போனாள் சீதா.

ஐயோ! என்ன தவறு செய்துவிட்டாள்? சில நாட்களாகக் கண்காணித்துக் கொண்டு வந்த அந்த அயோக்கியனிடம் வசமாக அகப்பட்டுக் கொண்டு விட்டாளே? நெஞ்சு வெடித்து விடும்படி துடிக்க உடம்பெல்லாம் வியர்வை பொடிக்க, நா வரண்டுபோய் அசைய முடியாது சுவற்றோடு ஒட்டிக் கொண்டு நின்றாள்.

''ஜாலம் செய்யாதே, கழுத்தில் போட்டுக் கொண்டிருக்கிற தாலிச்சரட்டைக் கழற்று. மளமளன்னு கை வளையல்களைக் கழற்றிக்கொடு'' உத்தரவிட்டான் அந்த அயோக்கியன்.

எச்சிலை விழுங்கிக் கொண்டு அவள் முதலில் தன் கை வளைகளைக் கழற்றி அவனிடம் கொடுத்தாள்.

''பெரிய பத்தினி! எடுடி தாலிச் சரட்டை'' என்று அவன் மிரட்டிக் கொண்டு அருகில் வந்தபோது அவளுள் இன்னொரு கிலி ஏற்பட்டது.

மூன்று தினங்களாக அவளை மேலும் கீழுமாகப் பார்த்து முறைத்த அந்தப் பாவிக்கு வேறுவிதமான எண்ணமும் இருந்தால்...

அவளது நகைகளை எடுத்துக்கொண்டு ஒழியட்டும்.

அவளது பெண்மையைச் சூறையாடி விட்டால்... அய்யோ சமயத்துக்கு சாரதா அம்மா கூட பக்கத்தில் இல்லை போலிருக்கே...

உயிர் போகட்டும் என்று அலறிக் கூச்சலிட்டால்? மற்ற ஃபிளாட்டு மனிதர்கள் அதைக் காதிலே போட்டுக் கொள்ள மாட்டார்களே. தெருவிலே யாரோ கத்துவதாக அசட்டையாக இருந்து விடுவாங்களே...

கணப்பொழுதில் ஆயிரம் எண்ணங்கள் அவள் மனதில் மின்னலடித்தது.

''சீக்கிரம் தாலிச் சரட்டை எடு. வைரத்தோட்டைக் கழற்று - பிறகு... உன் படுக்கையறைப் பக்கம் நகரு.''

உற்றார் உறவினர் முன்னர்... முப்பது முக்கோடி தேவதைகள் சாட்சியாக - அக்னி பகவான் சாட்சியாக... திருமூர்த்திகளின் ஆசியுடன் மங்கள வாத்தியம் முழங்க, அவளது அன்புக் கணவன் அவள் கழுத்திலே கட்டிய தாலியைக் கேட்கிறானே பாவி - அழுகை பொங்கிக் கொண்டு வர - அவள் கரங்கள் தடுமாற கழுத்தில் இந்த பொன் தாலிச் சரட்டைக் கழற்றி அவனிடம் கொடுத்தாள்.

அதற்குள் எங்கேயோ மனிதர்கள் பேசும் அரவம் கேட்க ஆனந்தன் எச்சரிக்கையானான்.



''வைரத் தோட்டை பிறகு கழற்றுகிறேன்... வா... படுக்கை அறைக்கு... எனக்கு நகைகள் மட்டும் போதாது... நீயும் வேண்டும். பிணக்கு பண்ணாமல் உடன் பட்டியோ - உன்னைக் காயப்படுத்த மாட்டேன். இடக்கு பண்ணினியோ உன்னை விட மாட்டேன். வீண் பலவந்தம் வேணாம்னா நீ... வந்துடு'' அவள் அருகில் நெருங்கி முந்தானையை இழுத்தபோது... அவளையும் அறியாது அவள் கிரீச்சிட்டு அலறி விட்டாள்.

ஒரே பாய்ச்சலாக அவள் சமையலறைப் பக்கம் நகர்வதைக் கண்ட ஆனந்தன் விடாது அவளைத் தொடர்ந்தான்.

''உன்னைப்போல எத்தனை பேரை நான் பார்த்திருப்பேன். நீ அலறித் துடிச்சா கூட இங்கே யாரும் உதவிக்கு வரமாட்டாங்க. அதனாலே...'' மிருக வெறியோடு அணுகினான்.

இரவு சாப்பாட்டிற்கு சப்பாத்தி செய்ய அவள் குழவியைத் தேடி எடுத்துக் கழுவி - பாத்திரம் கவிழ்க்கும் மேடை மீது தயாராக வைத்திருந்தாள். பின்னால் நகர்ந்தாள். கையில் அது தட்டுப்பட்டதும் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள்.

''போடா அயோக்கிய நாயே - போ... இல்லாட்டா'' என்று கூச்சலிட்டுக் கொண்டு அந்தக் குழவியால் ஓங்கி அவன் முதுகில் அடித்தாள்.

கோபத்துடன் அவன் அவளை கிழே தள்ளி மேல் புடவையை உருவி அப்பால் போட்டு விட்டு நெருங்கிய போது, அவள் சுருண்டு கொண்டு எழுந்து தன் பலத்தை எல்லாம் உபயோகித்து அவனைப் பின்னே தள்ளினாள்.

தலைமுடியை ஆத்திரத்துடன் பற்றி அவளது முகத்திலே நகங்களால் அவன் கீறி விடவே ஆத்திரத்துடன் அவன் கரத்தை வெடுக்கென்று கடித்தாள்.

வேதனை தாங்க முடியாத அவன் தன் கத்தியால் ஓங்கி அவளது கழுத்தை நோக்கிக் குத்தியது தாடை மீது பட்டு இரத்தம் குபுகுபு வென்று சொட்டுவதைக் கண்டதும் ஆனந்தன் உஷாராகிப் போனான்.

வெள்ளை உடை அணிந்து வந்தால் இந்த மாதிரிப் போராட்டத்திலே இரத்தம் வெளிப்பட்டால் உடையில் தெரிந்து வெளியே ஓட ஆபத்தாகிவிடும் என்றுதான் அவன் முன் கூட்டியே கறுப்பு உடை அணிந்து வந்தான்.

இத்தனை போராட்டம் ஏற்படும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஒரே அமுக்காக எலியைப் பிடித்து கசக்கி விடுவதைப் போல அவளைக் கசக்கி முகர்ந்து விடலாம் என்ற துணிச்சலில் வந்தான். பாவி, கையை அமுத்தமாகவே கடித்து விட்டாளே! ஷர்ட்டின் முழுக்கையை இழுத்து மூடிக் கொண்டான்.

வலி தந்த வெறியால் அந்த அப்பளக் குழவியை எடுத்துக்கொண்டு ஆத்திரம் தீருமட்டும் அவள் முகத்திலும் மண்டையிலும் ஓங்கிப் பலமுறை அடிக்க அவள் வீடே அதிரும்படி அலற... இனி அங்கே நின்றால் ஆபத்து என்ற உணர்வுடன் கதவைத் திறந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்து விட்டுக் கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு மாடிப்படிகள் வழியே வேகமாக இறங்கி முன் வாசலை நிதானமாகக் கடந்து, கொஞ்ச தூரத்தில் நடை பாதை ஓரம் வைக்கப்பட்டிருந்த தனது ஸ்கூட்டரை கிளப்பிக் கொண்டு வேகமாக மறைந்தான்.



கீழ்த் தளத்தில் அவனுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஷெட்டில் காரை வைத்துப் பூட்டி விட்டு - கோதண்டராமன் அலுவலகத்தில் கவனிக்க வேண்டிய ஃபைல்களை ஒரு கட்டாக கை மடக்கில் தூக்கிக்கொண்டு லிஃப்ட்டில் ஏறினான்.

வாயில் அழைப்பு மணியை இரண்டு முறை அடித்தும் பதில் இருக்கவில்லை. ஒரு சமயம் அலுப்பினால் சீதா நன்றாக உறங்கிப் போய் விட்டாளோ? மூன்றாம் முறையாக அவன் அழைப்பு மணியை அழுத்தினான். பதிலே இல்லை. திகைப்பும் திகிலுமாக, பாண்ட் பையிலிருந்த தன் சொந்த சாவியை எடுத்துத் திறந்தான்.

கதவைத் திறந்தபோது நடையில் கண்ட இரத்தத் துளிகள் அவனை நடுங்க வைத்து விட்டது. சீதாவை யாரோ கொன்று விட்டார்களா? அட தெய்வமே... மனதிற்குள் கத்திக் கதறியபடி அவன் சாப்பாட்டறையைத் தாண்டி இரத்தத் துளிகள் கோடிட்டது போலச் சென்ற சமையலறைப் பக்கம் வந்தான்.

அங்கே அவன் கண்ட காட்சி அவனை பதை பதைக்கச் செய்தது. சீதா நத்தை போல சுருண்டு கொண்டு கிடந்தாள். தலையிலிருந்து நிறையவே கொட்டிய இரத்தம் தரையில் விட்டமாக உறைந்து கிடந்தது. கண்களை மூடியபடி கிடந்த சீதா செத்து விட்டாளா? பயந்து போய் மெல்ல அவள் மூக்கருகே கையை நீட்டிப் பார்த்தான். லேசாக அவள் மூச்சு முட்டுவது தெரிந்தது.

அடுத்ததாக அவன் அவளைத் தூக்கி முகத்தைக் கழுவி இரத்தக் கறையைத் துடைத்துப் படுக்க வைத்து,

பருக ஏதேனும் சூடாகத் தந்து கண் விழிப்புறச் செய்ய நினைத்தான்.

கையும் காலும் பதறவே அவனுக்கு என்ன செய்வதென்றே புரியாத குழப்பமும் துயரமும் தாங்க முடியவில்லை; அவனையும் மீறி கண்களில் இருந்து நீர் புரண்டு கன்னத்திலே கோடிட்டது. ''சீதா - சீதா உனக்கு இப்படி எப்படியம்மா ஏற்பட்டது?'' தனக்குள்ளே புலம்பியபடி படுக்கை அறைக்குள் ஓடி வந்து ஸிட் அவுட்டின், கதவைத் திறந்தான்.

எதிர்ப்பக்கத்திலே திரைச்சீலையை விலக்கி சாரதா அம்மா எட்டிப் பார்ப்பது தெரிந்தது. கத்திக் கூப்பிட்டு சொல்லும் விஷயமல்லவே. தொலைபேசி எண்களை வேகமாகச் சுழற்றினான்.

''சாரதாம்மா! யாரோ சீதாவை தாக்கிக் காயப் படுத்திட்டுப் போயிருக்காங்க. சமையலறையிலே ஒரே இரத்தம். சீதாவுக்கு உசிரு இருக்கு. என்ன பண்றதுன்னு...'' தழு தழுத்தான்.

''தம்பி கோதண்டராமன். நீ போலீஸ் வரும்வரை ஒண்ணும் பண்ணக்கூடாது. அவங்களுக்குக் கைரேகை கள் முக்கியம். சீதாவைத் தொடாதே. நொடியில் நான் போலீசுக்குத் தகவல் தந்திட்டு அங்கே வரேன். தைரியமா இருப்பா'' உத்திரவிட்டாள்.

வேகமாக உடைமாற்றிக் கொண்டு - தொலைபேசி எண்களைச் சுழற்றினாள். ''ஹலோ'' என்று மறுபக்கத்தில் ஒலித்த காவல்துறை அதிகாரி ரங்கநாதன் குரலைக் கேட்க மிகவும் ஆறுதலாக இருந்தது.

''ரங்கா! நீதான் உதவி செய்யணும்.''



''மறுபடியும் ஒரு போலீஸ் கேஸா!'' மெலிதாக சிரித்தான் ரங்கன்.

''ஆமாம் - இது எனக்கு மிகவும் வேண்டியவங்க குடும்பத்திலே நிகழ்ந்துவிட்ட சங்கதி. உடனே நீ வர வேண்டும். வந்து ஆவன செய்ய வேண்டும். முகவரியைக் கேட்டுக்கோ'' என்று துரிதமாகப் பேசினாள்.

சாரதா மதுரா அப்பார்ட்மெண்டுக்கு சென்று ஃப்ளாட்டுக்குள் புகுந்து... கோதண்டராமனுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்த கொஞ்ச நேரத்தில் தன் படை யுடன் ரங்கநாதன் அங்கே வந்து சேர்ந்து விட்டான்.

அப்பொழுதுதான் விழித்துக் கொண்டவர்கள் போல அக்கம் பக்கத்து ஃப்ளாட்டுக்காரர்கள் என்ன போலீஸ் வந்திருக்கே என்று ஆவலுடன் விஷயத்தைத் தெரிந்து கொள்ள அவன் வீட்டு வாயிலை நெருங் கினார்கள்.

''இங்கே யாரும் வரக்கூடாது'' என்று போலீஸ்காரர் ஒருத்தர் அதட்டவே, அவரவர்களின் ஃப்ளாட்டு வாசலில் நின்றபடி மண்டை வெடிக்க அறியும் ஆவலில் எட்டிப் பார்த்தனர்... சீதாவைத் தொட்டு நகர்த்து முன் ஒரு அதிகாரி சுற்றிலுமிருந்த கைரேகைகளை எடுத்துக் கொண்டார். பூட்ஸ் காலின் அளவுகளைக் குறியிட்டுக் கொண்டார். ரங்கநாதன் தொலைபேசி மூலம் அழைத்தவுடன் ஆம்புலன்ஸ் வந்து சேர்ந்தது.

போலீஸ் நாயுடன் ஓர் அதிகாரி விரைவில் அங்கு வந்து சேர்ந்து விட்டார்.

''அந்த ஃப்ளாட்டுக்காரியை யாரோ கொலை செய்துட்டாங்க போலிருக்கு.''

''இல்லை... கொலையில்லை... கொள்ளையாம்.''

''அத்துடன் கற்பழிப்பும் நடந்துவிட்டிருக்காமே. அந்தப் பெண் பார்க்க அழகா இருப்பாளே.''

கணப்பொழுதிலே அங்கு ஓர் அருமையான விமரிசனம் நடந்து கொண்டிருந்தது.

சீதாவின் கழுத்திலே இருந்த தாலிச்சரடு காண வில்லை. கைகள் வெறுமையாக இருந்தன. உள்ளே வந்த திருடனுக்கு நேரம் அதிகமிருக்கவில்லை போலும். காதில் இருந்த வைரக்கம்மல்களைத் திருடவில்லை.

ஆம்புலன்சில் ஏற்றுமுன் அவன் பார்த்தான். தலையில் பட்ட அடியால் உச்சந்தலையில் கத்தியால் வெட்டியது போன்ற பிளவுக் காயம் ஒன்று ஏற்பட் டிருந்தது. அதுதான் அந்த அதிக இரத்த இழப்பிற்குக் காரணம் என்று ஊகித்துக் கொண்டான். சீதா மயக்க நிலையில் இருந்தாள்... பயமும், அதிக ரத்த இழப்பும் அடிபட்டபோது ஏற்பட்ட அதிர்ச்சியும் அதற்குக் காரணமாக இருக்கலாம். எல்லாம் வைத்திய பரிசோதனைக்குப் பிறகு விவரமாக விளங்கிவிடும் என்று தன்னுள் எண்ணிக்கொண்டு, அவள் விழுந்திருந்த நிலையை சாக்கட்டியால் வரைந்து கொண்டான்.

''ஆம்புலன்ஸ் அதிகாரிகள் ஸ்டெச்சரில் அவளைத் தூக்கிச் செல்லுமுன் காதணிகளைக் கழற்றிக் கொள்ளும்படி சாரதா அம்மாவுக்கு உத்தரவிட்டு, அதைப் பற்றிய விவரத்தை தன் டைரியில் குறித்துக் கொண்டான். முகத்தின்மீது கிடந்த முடியைத் தள்ளியபோது நகத்தினால் முகம் பல இடங்களில் பிராண்டப்பட்டு அந்தக் காயத்தில் ரத்தக்கசிவு ஏற்பட்டிருப்பதைக்



கண்டான். அதற்குமேல் சிந்தித்துப் பார்க்க அவன் மனம் வேதனைப்பட்டது. கற்பழிப்பும் இதில் சம்பந்தப் பட்டிருக்குமோ? கடவுளே ஒரு குடும்பப் பெண்ணுக்கு வீட்டுக்குள்ளேயே இந்தக் கொடுமை நிகழ்ந்து விட்டதா?

போலீசார் வசம் வீட்டை ஒப்படைத்துவிட்டு... துயரத்திலே தொய்ந்துபோன கோதண்டராமனை தன்னுடன் கூட தன் குடியிருப்புக்கு அழைத்துக்கொண்டு போனாள் சாரதா. வழியில் நின்ற ஃபிளாட்டுவாசிகள் என்ன நடந்தது என்று தெரிந்துகொள்ள மட்டும் விரும்பிக் கேட்டார்கள்.

ஒரு பெண் யாரோ ஒரு முரடனால் அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறாள். அவள் கத்திக் கதறியிருப் பாள். யாருமே அதைக் காதில் போட்டுக்கொண்டு உதவ முன் வரவில்லை. ஆனால் அங்கே என்ன நடந்தது என்ற வம்பை மட்டும் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்களே. இவர்கள் எல்லாம் மனிதர்கள்தானா? கேவலம் ஒரு காக்காய் அடிபட்டுக் கீழே விழுந்துவிட்டால் நூற்றுக் கணக்கான காக்காய்கள் கூடி, தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனவே. மனிதன் ஒரு பறவையை விடவா மட்டமாகி விட்டான். ''என்னவோ நடந்தது - இப்போ தெரிஞ்சு உங்களுக்கு என்ன ஆகணும்.'' பட்டென்று பதிலளித்துவிட்டு கோதண்டராமனுடன் மாடிப்படியில் இறங்கினாள்.

பசியும், துயரமுமாக இருந்த அவனுக்கு ஆறுதல் சொல்ல தன் வீட்டில் சமைத்து வைத்திருந்த உணவை அன்போடு பரிமாறி வற்புறுத்தி அவனைச் சாப்பிடச் செய்தாள்.

''சாரதாம்மா... என் சீதா ஆஸ்பத்திரியில் கிடக்கிற போது நான் இங்கே வயிறார சாப்பிடறேனே...'' என்று குலுங்கி அழுதான் அவன்.

''இந்த மாதிரி துன்ப சமயங்களில் ஆண்பிள்ளைகள் தங்கள் துணிவை இழக்கக்கூடாது. இங்கே வா. ஓய்வா அடுத்த அறையில் கொஞ்சம் படுக்கையில் சாய்ந்து கொண்டிரு... கொஞ்ச நேரத்தில் எல்லா விவரத்துடன் ரங்கநாதன் இங்கே வருவான்'' என்று குழைவாகப் பேசினாள்.

சீதாவுக்கு இப்படி ஒரு விபத்து ஏற்படணுமா? எந்த அயோக்கியன் அவளை இப்படி அடித்து விட்டிருக்கிறான் என்று தன்னுள்ளே புலம்பிக்கொண்டு நேரம் நத்தையாக ஊர்வதைப் போன்று அவதிப்பட்டுக் கொண்டிருந்தான் அன்புக் கணவன் கோதண்டராமன்.

பொழுது அஸ்தமிக்கும் வேளையில் ரங்கநாதன் அங்கே வந்தான். அவன் வந்து செய்தியைச் சொல்லும் வரை, கோதண்டராமன் ஆஸ்பத்திரிக்குப் போய் சீதா நிலைமையை அறிய வராந்தாவிலேயே பழிகிடப்பதில் பயன் இல்லை என்று தன்னுடன் இருக்கும்படி வற்புறுத்தி விட்டிருந்தாள் சாரதா.

தொலைபேசி மணி அடிக்கும்போதெல்லாம் துள்ளி எழுந்தோடி வந்து கொண்டிருந்தான் கோதண்டராமன்.

ரங்கநாதன் உள்ளே வந்ததும் முதல் வேலையாக ஃபிளாட்டின் சாவியை அவளிடம் ஒப்படைந்தான்.

''உங்களது வீட்டுப் பொருள் எதையும் தொடாதபடி காவல் துறையினர் பத்திரமாகவே பார்த்துக்கொண்டு



விட்டிருந்தனர். எதற்கும் இருக்கட்டும் என்று உங்கள் வீட்டைக் கண்காணித்தபடி சாதா உடையில் ஒரு காவல் துறை அதிகாரியை அந்தப் பக்கம் பாதுகாப்பிற்குப் போட்டிருக்கிறேன்'' என்று கூறிவிட்டு ஆயாசத்துடன் ஓர் இருக்கையில் அமர்ந்தான்.

சூடான காப்பியும் - தின்ன முறுக்கும் எடுத்துக் கொண்டு வந்து அவன் முன்னிலையில் வைத்தாள் சாரதா.

''ரங்கா நீ இப்போது என் குடும்ப நண்பரின் மகனாக இங்கே வந்திருக்கிறாய்... அதனால் இவை களைச் சாப்பிடு. காவல் பணியில் வந்திருந்தால் நான் வற்புறுத்த மாட்டேன்'' என்று முறுவலித்தாள்.

இங்குமங்கும் ஓடிக் களைத்து விட்டிருந்த ரங்கநாதன் சூடான காப்பியை மிகவும் வரவேற்றான். தட்டிலிருந்த முறுக்கை அவன் தொடவில்லை. ''ரங்கா! சீதா எப்படியிருக்கிறான்னு சொல்ல முடியுமா?'' சாரதா மெல்லிய குரலில் கேட்டாள்.

கோதண்டராமன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். சீதாவுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டது என்று சொல்லி விட்டால்... பயத்திலே அவனது நெஞ்சு பட படத்தது.

''உயிருக்கு ஆபத்தில்லை. தலைக் காயத்திற்கு தையல் போட்டிருக்காங்க. காயம் சீழ்பிடிக்காதிருக்க ஊசி போட்டிருக்காங்க. இரத்த இழப்பை சீர் செய்ய இரத்தம் கொடுத்துக்கொண்டிருக்காங்க. உடம்பு வலி தெரியாமலிருக்க ஊசி போட்டிருப்பதால் சீதா கொஞ்ச நேரம் கண்விழித்துப் பார்த்துவிட்டு, தன் சூழ்நிலையைக் கூடப் புரிந்து கொள்ள முடியாது ஆழ்ந்த உறக்கத்திலிருக் காங்க.''

'காயம் ரொம்ப பலமானதோ...' கவலையுடன் கேட்டான் கோதண்டராமன்.

''கொஞ்சம் பலமானது என்றுதான் சொல்ல வேண்டும். கழுத்தைக் குத்த திருடன் கத்தியை ஓங்கியிருக்கிறான். ஆனால் தவறி தாடையில் ஆழமாகப் பட்டுவிட்டிருக்கிறது. நல்லவேளை இன்னும் கொஞ்சம் அந்தக் குத்து இறங்கி கழுத்தை நோக்கிப் பாய்ந்து விட்டிருந்தா சீதா அம்மா இத்தனை நேரம் நம்மோடு இருக்க முடியாது.''

''குடல் எல்லாம் சுருட்டிக் கொண்டு வாயை அடைத்துவிட்டதொரு பயங்கர வேதனையில் கோதண்டராமன் அழுகையை அடக்கிக் கொண்டு ''கடவுளே...'' என்று முனகினான்.

''திருடன் சில நாட்களாக அவங்க நடவடிக்கையை கவனித்து விட்டுத்தான் வந்து தாக்கியிருக்கான் என்பது எங்கள் ஊகம். தாலித் திருட்டு இப்போது ஏராளமாக நடக்கிறதனால் இதில் அதிசயப்படுவதற்கு ஒன்று மில்லை.''

கோதண்டராமனுக்கு கேட்க வேண்டுமென்று துடிப்பு. கேட்டுத் தெரிந்து கொள்ளவும் பிரியமில்லை.

''மண்டைக்காயம் - தாடையில் பெரிய கீறல். முகத்திலே நகத்தால் பல பிறாண்டல் காயம். இதைத்தவிர'' பேச முடியாது வார்த்தைகளை விழுங்கிக் கொண்டான்.

''மிகவும் அதிசயம்தான். இந்த அதிர்ச்சி - அடி இவைகளைத் தாங்கிக்கொண்டு போராடியிருக்காங்க அந்தம்மா. உங்கள் மனைவி... கர்ப்பவதியாக



இருக்கிறாங்கன்னும், அந்தக் கர்ப்பத்திற்கு எந்தவித சேதமும் ஏற்படாதிருப்பது அதிசயம் என்றும் அவர்களைப் பரீட்சை செய்த பெண் வைத்தியர் சொன்னாங்க. அதோட...'' என்று கூறிவிட்டு ரங்கநாதன் கோதண்டராமனின் முகத்தைப் பார்த்தான்.

உடம்பெல்லாம் சுருங்கிப் போனது போன்ற ஒரு அவமான உணர்வில் தவித்தான் கோதண்டராமன். ஆனால் அந்த எதிர்பார்ப்பை பொறுக்க முடியவில்லை.

''நல்லவேளை - உங்கள் மனைவியைத் தாக்கிய வன் நகைகளை மட்டுமே களவாடிச் சென்றிருக்கிறான். கற்பழிப்பு செய்ய முயன்ற தடயங்களோ, கற்பழிப்பு செய்ததின் அறிகுறியோ ஏதும் இல்லை என்று வைத்தியர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.''

அப்பாடா என்றதொரு நிம்மதி கோதண்டராமன் மனதிலே நிறைந்தது.

''சீதாவை நான் பார்க்க விரும்பறேன். எப்போது அனுமதிப்பீங்க'' மெல்லிய குரலில் கேட்டான்.

''நாளைக்கு சாயங்காலம் பார்வையாளர்களை அனுமதிக்கும் நேரத்தில் நீங்க இருவரும் போய் தாராளமாகப் பாக்கலாம், அதற்குள் ஓரளவு அவங்க ளுடைய அதிர்ச்சி அடங்கியிருக்கும். நினைவு நன்றாகத் திரும்பி விட்டிருக்கும். உங்களையெல்லாம் பார்த்தால் ஓரளவு அவங்களுக்கு மன ஆறுதல்கூட ஏற்படலாம்.''

''நாளைக்கு நாம் இருவரும் ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டு வருவோம். சீதாவைப் பார்த்துப் பேசணும்னு என் மனம் எப்படித் துடிக்கிறது தெரியுமா அம்மா...'' நா தழுதழுக்க, பேசமுடியாது தடுமாறினான் கோதண்ட ராமன்.

பேல்பூரியைத் தின்றுவிட்டு அவன் பெற்றோர்கள் இருந்த குடியிருப்புப் பகுதிக்குப் பக்கத்திலிருந்த ஒரு குஜராத்திப் பெண்ணிடம் அவள் அதை எப்படித் தயாரிப்பது என்று சமையல் குறிப்பை எழுதி வாங்கிக் கொண்டாளே அந்த நினைவு அவன் நெஞ்சை அடைத்தது.

''ஊருக்குப் போனதும் நான் இந்தப் பலகாரத்தை செய்து உங்களுக்குப் பரிமாறுகிறேன்... இதைவிட ரொம்ப ஜோராக செய்து போடறேன் பாருங்கோ'' என்று அவள் கொஞ்சிப் பேசியபோது... ''நீ ரொம்ப கெட்டிக்காரின்னு தெரிஞ்சுதானே உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்,'' என்று கன்னத்தை லேசாகக் கிள்ளினான். சீதா என்று குரல் எழுப்பிக் கொண்டு அவளுடைய அம்மா வந்ததும் மரியாதைக்குரிய மாப்பிள்ளையாக அவன் ஒதுங்கிக் கொண்டான்.

''இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமான்னு எங்கள் வீட்டவர்கள் முன்னால் ரொம்ப வேஷம் போடறீங்க. சமத்து மாப்பிள்ளை'' என்று அவள் அதற்கு அவனைக் கேலி செய்து சிரிக்க வைத்ததின் நினைவு நெஞ்சை முள்ளாக வருடியது.

''ஃப்ளாட்டு, மற்றத் தனியான குடியிருப்புகளில் வசிக்கும் பெண்கள் தங்களை இது விதமான ஆபத்துகளிலிருந்து எப்படிக் காப்பாற்றிக் கொள்வது என்பதைப் பற்றி நாங்கள் அடிக்கடி எச்சரித்துக் கொண்டுதான் இருக்கிறோம். அப்படியிருந்தும் உங்கள் மனைவிக்கு இந்த விபத்து ஏற்பட்டது பற்றிநான் ரொம்ப வருந்துகிறேன். அவங்க ரொம்ப புத்திசாலிப் பெண்ணா யிற்றே. வாயில் கதவில் பதித்துள்ள கண்ணாடி வழியே



வந்தவனைப் பாராது எப்படிக் கதவைச் சட்டென்று திறந்தாங்க? வீட்டுக் கதவுக்கு பாதுகாப்பு சங்கிலி ஒன்று பொருத்தியிருக்கே, அதைப் பிணைத்து விட்டு ஏன் திறக்கவில்லை.''

ஆமாம்! சீதா ஏன் அந்த முட்டாள்தனமான காரியத்தைச் செய்தாள். அப்படிச் செய்யக் கூடியவள் இல்லையே. ஏன் சட்டென்று வந்தவனைப் பாராது கதவைத் திறந்து விட்டாள்?... ஏன்?... ஏன்?...

''நான் ரொம்ப உஷாராக இருக்கிறவள்தான். ஆனால் யானைக்கும் அடி சறுக்கும் என்பார்களே அது போல, சில நாட்களுக்கு முன் இரவு எட்டு மணிக்கு அழைப்பு மணி அடித்ததைக் கேட்டு முன்பின் யோசிக்காம சட்டென்று கதவை திறந்துட்டேன்.

''சாரதாம்மா நான் உங்க பெரியம்மா பேரன் நினைவிருக்கா'' என்று தாடியும் மீசையுமாக ஒருவன் தன் பூட்ஸ் காலைக் கதவிடுக்கில் கொடுத்துக்கொண்டு கதவைத் தாள் போட முடியாது உள்ளே வர முயன்றான்.

''அவனுக்கும் எனக்கும் ஸ்நான பிராப்தி கூட கிடையாது. உறவு சொல்லி உள்ளே வந்துடலாம் என்கிற யோசனை. நானும் கதவில் பொருத்தியுள்ள கண்ணாடியைப் பார்க்கலை. பாதுகாப்பு சங்கிலியைப் பொருத்தலை. டி.வி. பார்த்து முடிஞ்சதும் கதவை இரட்டை தாள் போட்டு பாதுகாப்பு சங்கிலியைப் பொருத்தி பந்தோபஸ்து செய்கிறவள்தான். நானே அன்னிக்கு ஏமாந்துட்டேன். ஆனால் சமயோஜித புத்தியை இழக்கலை... நீ நாணுவின் பேரனா... அடடா, என்று சொல்லிக்கொண்டு, பலம் முழுவதையும் உபயோகித்து அவனை நெட்டி வெளியே தள்ளிக் கதவை

இழுத்துப் பூட்டிக்கொண்டேன். ரொம்ப நேரமாச்சு அந்த அதிர்ச்சியிலிருந்து எனக்கு என் நினைப்பு வர. என்னைப்போல் சீதாவும் வீட்டு வேலைகள் காரணமாக மறந்திருக்கலாம். தூங்கிவிட்டு எழுந்த தூக்கக் கலக்கமாக இருக்கலாம்.

''நாம் எத்தனையோ பாதுகாப்பாக இருக்கோம். திருடனும் நம்மைவிட கெட்டிக்காரனாக இருக்கான் என்பதை மறுக்க முடியுமா?''

''சாரதா மாமி... உங்களை வாதத்தில் வெல்ல முடியாது என்பதை நான் ஒரு நாளும் மறக்கவே மாட்டேன்'' என்று கூறிவிட்டு... ரங்கன் விடைபெற்றுக் கொண்டு எழுந்தான்.

மறுநாள் காலை கோதண்டராமன் எதிர்பார்த்தது போல அந்தச் சம்பவம் நாளேடுகளில் தலையங்கத்துடன் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

''நகரிலே ஃபிளாட்டுக்குள் நுழைந்த சங்கிலித் திருடன்!''

''தான் வசிக்கும் ஃபிளாட்டிலேயே சீதா என்னும் இளம் பெண் பட்டப்பகலில் தாக்கப்பட்டாள். திருடன் அவளது கழுத்துச் சங்கிலி, கைவளைகளுடன்... மாயமானான்.

''பரபரப்பூட்டும் பகல் திருடன்: மதுரா அப்பார்ட் மெண்ட் என்று புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஃபிளாட் ஒன்றில் வசிக்கும் சீதா என்னும் பெண்ணை அவள் கணவன் வீட்டுக்கு வருவதற்குள் பகல் பதினோரு மணியளவில் கத்தியைக் காட்டி மிரட்டி - நகைகளைப் பறித்துக்கொண்டு... படுகாயப்படுத்தி விட்டுத் திருடன்



மறைந்து விட்டான். போலீஸ் நாயுடன் வந்து போலீசார் சோதனை செய்தனர். நாய் சிறிது தூரம் வரை சென்று நின்றது. அந்த இடத்தில் ஒரு ஸ்கூட்டர் டயரின் அடையாளம் தெரிந்தது. பின்னர் நாய் சிறிது தூரம் ஓடி... சில நாட்களுக்கு முன் பெய்த மழையினால்... நீர் தேங்கியிருந்த ஒரு பகுதிக்கு மேல் செல்லாது நின்று விட்டது. திருடன் அதைத் தாண்டி அப்பால் போயிருக்கிறான். அல்லது அந்தப் பக்கத்தில் உள்ள ஏதாவது ஒரு வீட்டில் வசிக்கிறான் போலும் என்று சந்தேகித்த போலீஸ் அந்த இடத்தை சல்லடை போட்டுக் கொண்டிருக்கிறது.''

தாலிச் சரடையும் தங்கச் சங்கிலியையும் பறித்துக் கொண்டு போகும் திருட்டு அதிகமாகிக் கொண்டு வருகிறதே இதை எப்படித் தவிர்ப்பது என்று சமூக சேவகி மோகனாவை நமது நிருபர் கேட்டபோது அவர் கீழே கண்ட பதிலைக் கொடுத்தார்.

''பெண்களுக்குப் பொன்னகை எதற்கு? புன்னகையே போதும். வேலைக்குப் போகும் பெண்களை வழிப்பறி திருடர்களிடமிருந்து எப்படிக் காப்பது? வேலைக்குப் போகும் பெண்கள் கழுத்திலோ - காதிலோ - கைகளிலோ நகைகள் அணிந்து கொண்டு போவது ஆபத்தை விலைக்கு வாங்குவதாகும். போலி நகைகளை அணிந்து கொண்டு போனால்...''

''போலி நகைகளைக் கூட நிஜம் என்று நம்பித் தாக்கினாலும் அதிசயப்படுவதற்கில்லை. பெண்களுக்கு இது சம்பந்தமாக உங்களது அறிவுரை என்ன என்று சொல்ல முடியுமா?''

''தீவட்டிக் கொள்ளைக்காரன் என்று அந்தக் காலத்தில் தீவட்டிகளுடன் - இரவில் கிராமங்களில் புகுந்து மிகவும் துணிவுடன் கொள்ளையடித்தனர் ஒரு கும்பல்.

''அவர்களிடம் கூட சில கட்டுப்பாடுகள் இருந்தன. பெண்ணின் மேலிருக்கும் அத்தனை நகைகளையும் பயமுறுத்தி கழற்றி வாங்கிக் கொண்டனர். ஆனால் தாலியை மட்டும் திருடியதில்லை.

''அக்னிசாட்சியாக அணியப்பட்டதொரு நகை அது. தெய்வீகமானது. அதைத் தொட்டால் அழிவு ஏற்படும் என்று அஞ்சினர். ஆனால் இந்தக் காலத்துத் திருடர்கள் முதலில் தாலியைத்தான் பிடித்து அறுத்து எடுத்துக் கொள்கிறார்கள். மிக ஏழைப் பெண்ணாக இருந்தாலும் ஒரு துளியளவு தங்கமாவது தாலியில் இருக்கும் என்ற நம்பிக்கை.

''அதனால் இனிப் பெண்கள் தாலிக்குப் பதில் வெறும் கருப்பு மணியை நூலில் கோத்து அணிந்து கொள்வது நலம். பம்பாய் டெல்லி போன்ற இடங்களில் பெண்கள் கருப்பு மணிகளைத்தான் அணிகிறார்கள். நம் நாட்டிலும் கணவனுக்கு உடல் நலமில்லாதபோது தன் தாலியை விற்றாவது மருந்துகள் வாங்கித் தரும் நிலை ஏற்பட்டபோது அந்த ஏழைத் தாய்மார்கள் தங்களது நூல் சரட்டிலே மஞ்சள் கிழங்கைக் கட்டிக் கொள்கின்றனர். தாலி மீது தெய்வ நம்பிக்கை வைத்திருக்கும் பெண்கள் அவ்வாறு செய்யலாமே...''

''கருமணியாலும் - மஞ்சள் கிழங்காலும் தாலி திருடும் கொள்ளையைத் தவிர்க்கலாம் என்கிறீர்கள். இத்தனை நகை வேண்டும் என்று திருமணத்தின் போது



மாப்பிள்ளை வீட்டவர்கள் வற்புறுத்துகிறார்களே! அதற்கு உங்கள் பதில்?''

''பெரியோர்கள் ஆசீர்வதிக்க, அக்னி சாட்சியாக அணிவிக்கப்படும் தாலியே இப்போது இந்தக் கதியை அடைந்திருக்கும் போது... நகைகள் இத்தனை வேண்டும் என்று வற்புறுத்துவது தவறு. அந்த நகைகள் வங்கியில் தான் தூங்கப் போகின்றன.

''வரதக்ஷணை... சீர் - நகைகள் என்பதை ஒழித்து விட்டு, தமது வருங்கால மாமியார்கள் பெண்ணை அவளும் ஒரு பெண் என்ற மதிப்பீட்டில் தம் மகனுக்குக் கட்டி வைக்க முன் வந்தால் நமது சமுதாயம் முன்னேறும். வரதக்ஷணைக் கொடுமை மாமியார்களால்தான் உருவா கிறது என்ற அவச்சொல் பெண் குலத்திற்கு ஏற்படாது.

''திருட்டிலிருந்து வரதக்ஷணைக்குப் போய் விட்டீர்களே?

''சமூகத்திலே ஏற்படும் பல குற்றங்களுக்கு வரதக்ஷணை கொடுமை ஏதாவது ஒரு கோணத்தில் பொறுப்பாகி வருவதால் முதலில் அதை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பது என் கருத்து. நகை ஆசையைப் பெண்கள் ஒழித்துவிட வேண்டும். தானே இந்தத் தாலித் திருட்டு சமூகத்தில் குறைந்து போகும்.''

''சில சமயங்கள் பெண்களின் நகைகளைப் பறிப்பதுடன் திருடன் அவர்களைக் கற்பழிக்கவும் செய்கிறான். அதற்கு உங்கள் பதில்.''

''வேலைக்குப் போகும் ஒவ்வொரு பெண்ணும் விழிப்பாக இருக்க வேண்டும். இருளடைந்த சந்துகளில்

தனியே வரத் துணிவது தவறு. தன்னை சட்டென்று எதிர்க்கும் ஆளைக் கண்டதும் உதவிக்குக் கூப்பிட நினைத்தால் திருடன் என்று கத்தாது நெருப்பு, நெருப்பு என்று அலறினால் பயன் உண்டு. திருடன் என்று கத்தினால் பலர் நமக்கேன் வம்பு என்று தத்தம் கதவை அடைத்துக் கொள்ளக்கூடும். நெருப்பு என்றால் அந்த ஆபத்து அவர்கள் வீட்டுக்கும் பரவிவிடும் என்ற அச்சத்திலே எங்கே அது ஆரம்பித்துள்ளது என்று அறிய ஆவலுடன் ஓடி வருவார்கள். இன்னொன்று, ஒவ்வொரு பெண்ணும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, கராத்தே போன்ற வீர விளையாட்டில் பயிற்சி எடுத்துக் கொள்வது நல்லது.''

''கராத்தேயா?''

''ஏன் சிரிக்கிறீங்க... பெண்கள் டென்னிஸ், நீச்சல் போட்டி, எகிறி குதித்தல் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுகிறார்களே, அதைப் போல கராத்தே பயிற்சியும் பெற்றுக்கொள்வது நல்லது. சீதாவுக்கு கராத்தே தெரியாது. ஆனால் அவள் அந்தத் திருடனுடன் போராடியிருக்கிறாள்.

அந்தப் பாவி, மலர் போன்ற அவளது முகத்தை நகத்தால் பிராண்டி காயப்படுத்தியிருக்கிறானே. பாவம் சீதா, அது சமயம் அவள் எப்படித் துடித்தாளோ - கணவன் அலுவலகத்திலிருந்து சட்டென்று திரும்பி வந்து உதவக் கூடாதா என்று பதைத்திருப்பாள் என எண்ணிக் குமைந்த படி நாளேட்டைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

வாயிற் கதவின் அழைப்பு மணி ஒலித்தபோது அவன் திடுக்கிட்டு எழுந்தான். கண்ணாடி வழியே பார்த்தான். ஒரு கட்டு காகிதத்தை கையிடுக்கில் அமுக்கிக் கொண்டு மூக்குக் கண்ணாடி அணிந்த ஓர் இளைஞன் நின்று கொண்டிருந்தான்.



கதவைத் திறந்தான். ''நான் உள்ளே வரலாமா?'' மிகவும் பணிவாகக் கேட்டான் அவன்.

ஒடிசலான தோற்றமுடைய அவனால் அவனுக்கு ஆபத்து என்ன வந்துவிடப் போகிறது என்று அவனை அனுமதித்தான்.

முன்னறை இருக்கையில் அமர்ந்து கொண்டு கையில் பேனாவையும் நோட்டுப் புத்தகத்தையும் எடுத்துக் கொண்ட இளைஞன் கேட்டான்.

''நீங்கள்தான் சீதாவின் கணவரா?''

''ஆமாம்... எதுக்குக் கேட்கிறீங்க.''

''நான் 'இன்று நடந்தது' என்ற நாளேட்டிலிருந்து வருகிறேன். பத்திரிகை நிருபர். நேரிடையாக உங்களது மனப்பாதிப்பை அறிந்துகொண்டு போக வந்தேன்.

கோதண்டராமன் அவனைக் கோபத்துடன் பார்த்தான்.

''உங்க மனைவியைத் தாக்கிய அந்தத் திருடன் நகையை மட்டும் திருட வரவில்லை. அவங்களது பெண்மையையும் அழிக்க முன்னேற்பாடுடன் வந்திருக்கிறான் என்றுதானே நீங்க நினைக்கிறீங்க?''

''அப்படி யார் சொன்னது'' ஆத்திரத்தில் பற்களைக் கடித்தான் கோதண்டராமன்.

''பெரும்பாலானவர்களின் ஊகம் அப்படித்தானே இருக்கிறது. முகத்திலே பிராண்டி காயப்படுத்தி, புடவைத்

தலைப்பை இழுத்துப் போட்டு, அந்த இடத்தில் ஒரு போராட்டம் நடந்த சின்னங்கள் இருப்பதால்...''

''கெட் அவுட், ஐ சே யூ கெட் அவுட்'' என்று கோபத்திலே உரத்த குரலில் கையை ஓங்கிக்கொண்டு கோதண்டராமன் கத்தியதைக் கேட்டு, அந்த ஒடிசலான நிருபர் வெளியே ஓடி ஒரே மூச்சில் கட்டடத்தினின்று வெளியேறித் தறைமறைவானான்.

நகரத்திலே மிக நெருக்கமான தேவநாராயணன் தெருவின் குறுக்கே ஓடிய சந்தில் முதலாவதாக குமரேசனது கடை இருந்தது. சாய்வான மேஜையருகே திண்டில் சாய்ந்துகொண்டு சதா வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்த அவன் அருகே கண்ணாடிப் பெட்டிக்குள் தெரிந்த சிறு திராசைக் கண்டுதான் அது ஒரு நகைக்கடை என்று புரிந்து கொள்ள வேண்டும். அப்படி அங்கு ஒன்றும் வியாபாரம் நடக்கவில்லை. பொழுதைக் கழிக்க முடியாது ஒரு சிறு தடுப்பை வாடகைக்கு எடுத்துக் கொண்டு கண்ணாடி அலமாரியில் சில முத்து மாலைகளையும், பவள மாலைகளையும் தொங்க விட்டுவிட்டு திண்டிலே சாய்ந்தபடி சட்டைக்கு முன்னால் பிதுங்கிக் கொண்டிருந்த தொந்தியை, இதமாக சாய்மான மேஜையின் மீது வைத்துக்கொண்டு தூக்கமும் விழிப்புமாக உட்கார்ந்திருந்த படுசோம்பேறி என்றுதான் பார்ப்பவர்கள் கண்களில் தெரிந்தான்.

ஆனால் அவன் படு அயோக்கியன். ஊரில் திருட்டுப் போகும் நகைகளில் பெருமளவு அவனிடம் தான் வந்து சிக்குகின்றன.



கடைக்குப் பின்னால் இருந்த சிறு தாழ்வாரத்திலே அவனது ஆட்கள் வேகமாக அந்த நகைகளைப் பிரித்துப் பொன்னை உருக்கி, கற்களைப் பெயர்த்து உருத்தெரியாது மாற்றிக் கொண்டிருந்தனர் என்பது காவல்துறை அதிகாரிகளுக்குத் தெரியும்.

எங்கெங்கே திருட்டு நகைகள் வாங்கப்படுகின்றன என்பதற்கு அவர்கள்தான் ஒரு பட்டியலே வைத்துக் கொண்டிருக்கிறார்களே?

அன்று வந்த வாரப் பத்திரிகையில் தனது ராசி பலனைப் பார்த்துக்கொண்டு தனக்குள்ளேயே முறு வலித்துக் கொண்டிருந்தவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

எதிர்பாராதவர்களின் வரவு என்றதை அவன் வேறு விதமாக, கணிப்பு செய்து மகிழ்ச்சியடைந்து விட்டிருந்தான். கொஞ்ச நாட்களாக ஆனந்தன் அவனிடம் வியாபார சம்பந்தமாகத் தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை.

சில தினங்களுக்கு முன்னர்தான் அவன் மறுபடியும் அவன் கடைக்கு வந்திருந்தான். ஒரு சரடு, நாலு வளைகள். இவைகளை வைத்துக்கொண்டு எனக்கு நாலாயிரம் ரூபாய் கடனாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு ஒரு பொட்டலத்தை அவன் முன் வைத்தான்.

''நகைகளை நான் அடமானத்திற்கு எடுப்ப தில்லைன்னு உங்களுக்குத் தெரியுமே. மொத்தமாக வித்துவிட்டு பணத்தை வாங்கிகிட்டு போங்க. உங்களுக் கும் தொல்லை விட்டது. எனக்கும் நிம்மதி'' என்றான்.

எக்கச்சக்கமான தொரு பேரம் இருவர்களிடையே நடந்தது.

காப்பி சாப்பிட்டு விட்டுப் பேசலாமா என்றபடி தயாராக தன் அருகே வைத்திருந்த பிளாஸ்கிலிருந்து சூடான காப்பியை இரண்டு கண்ணாடி டம்ளரில் பகிர்ந்து கொண்டு ஒன்றை அவன் முன் வைத்தான்.

குமரேசனது ஜாலங்கள் உபசாரங்கள் எல்லா வற்றையும் ஆனந்தன் நன்கு அறிந்தவன்தான்.

கடையின் பின் சுவரில் லக்ஷ்மிதேவியின் படத் திற்குப் பின்னால் வைத்திருந்த காளப்பிறை வழியே அவன் உள்ளே மும்முரமாக வேலை செய்த ஆட்களிடம் சட்டென்று பொட்டலத்தைக் கொடுத்து உரைகல்லில் தேய்த்து மதிப்பிடச் சொல்லி விட்டிருந்தான். எல்லாம் பேச்சில்லாத மௌனமாக நடந்ததொரு விசித்திர வியாபாரம் அது.

சில நிமிடங்களில் பொட்டலமும் ஒரு சிறு துண்டுக் கடிதத்தில் அவனுக்கு மட்டுமே புரிந்ததொரு எழுத்தும் திரும்ப காளப்பிறை வழியாக வந்தன. உதட்டை சுளித்துக் கொண்டு தலையைச் சொறிந்தான்.

உச்சந்தலையில் லேசாக வழுக்கை விழுந்து விட்டிருந்தது. சரியான கிராக்கி அகப்பட்டுவிட்டால் அவனுக்கு வழுக்கை மண்டையில் அரிப்பு ஏற்படுவது வழக்கம்.

''பதினைஞ்சு ரூபாய் வாங்கிக்கொண்டு சாமான் களை வெச்சிட்டு போங்க'' என்றான்.

ஆனந்தன் அப்படி ஒரு மட்டியல்ல. வேறு ஒரு கடையில் எடை போட்டு விலையை ஓரளவு அறிந்து கொண்டுதான் வந்திருந்தான்.



''இருபத்தஞ்சு ரூபா பெறுமான சாமானுக்கு பதினைஞ்சு கொடுக்கிறேன் என்றால் நியாயமா!'' ஆத்திரத்துடன் கேட்டான்.

''நியாயமான வழியில் வராத பொருள். உங்களுக் கும் தெரியும். எனக்கும் தெரியும். பதினைஞ்சுக்கு மேலே ஒரு செல்லாக் காசு தர முடியாது.'' கண்டிப்பா பேசினான் குமரேசன்.

''யோசிச்சிவிட்டு நாளை மறுநாள் வருகிறேன்.'' என்று பொட்டலத்தை வாங்கிக்கொண்டு போய் விட்டான் ஆனந்தன்.

இங்குமங்கும் சுற்றிப் பார்த்துவிட்டு முடிவில் வேறு வழியில்லாது அவன் தான் சொன்ன விலைக்கு நகைகளை விற்க வருவான் போலிருக்கு. அந்த வாரப் பத்திரிகையில் அவனைப் பொறுத்தவரை அவனது ராசியைப் பற்றிய பலன்கள் உண்மையாகவே இருப்பது வழக்கம். காலடி ஓசையைக் கேட்டு மகிழ்வுடன் நிமிர்ந்தவனுக்குப் பெருத்த அதிர்ச்சி.

''வாங்கோ, உட்காருங்கோ. ஏது இந்தப் பக்கம், இந்த ஏழையைத் தேடிக்கிட்டு வந்தாப்பல. தாகத்துக்கு இளநீர் கொண்டு வரச் சொல்லவா?''

''தாகத்துக்கு சாப்பிட்டுகிட்டு உன்னோடு கதை பேச வரலை குமரேசன். ஏழை பாருங்க. இந்த மாதிரி காரியங்களைச் செய்து விரைவாகப் பணக்காரராகிக் கொண்டு வரீங்களே?

''ஐயா என்ன சொல்றீங்கன்னு புரியலையே'' என்றபடி தனது பீடத்தை விட்டு எழுமுன் லக்ஷ்மி படத்தை ஒரு தட்டு தட்டி ஓசைப்படுத்தி விட்டுக் கீழே வந்து நின்றான்.

அது பின் பக்கத்தில் வேலை செய்கிறவர்களுக்கு எச்சரிக்கை.

ஆபத்து என்பதின் அடையாளம். அப்படிக் குமரேசன் எச்சரிக்கை தந்ததும் இரண்டு பேர்கள் மட்டும் வெள்ளிக் கம்பி ஒன்றை இழுத்துச் சுற்றிக் கொண்டிருப்பார்கள். மற்றவர்கள் தங்கள் வேலைகளைச் சுருக்கிக் கொண்டு பின்புறமாகக் கம்பி நீட்டிவிடுவார்கள்.

ரங்கநாதனுக்கு அவர்களின் ஜால வித்தைகள் அனைத்தும் தெரியும். ''குமரேசன் ஏற்கனவே ரெண்டு தடவை உனக்குப் பெரிய அபராதமும் அடுத்த தடவை அகப்பட்டால் சிறைவாசம் என்ற எச்சரிக்கையும் கிடைச்சிருக்கு. நான் புகுந்து தேட ஆரம்பிக்கு முன் மரியாதையாக நீ மதுரா அப்பார்ட்மெண்டில் அந்தப் ஃபிளாட்டு பெண்ணிடமிருந்து திருடன் அபகரித்த நகைகளைக் கொடுத்துவிட்டு அவன் யார்னு அடையாளம் காட்டிடு. மற்றதை நான் கவனிச்சுக்கிறேன்.''

''அய்யா! அதைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாது சார்'' குமரேசன் கண்ணீர் புரள அலறினான்.

''இந்த நாடகம் தேவையில்லை. மத்த இடங்களில் விசாரித்தாய் விட்டது. நீ ஒருத்தன்தான் பாக்கி. திருடினவன் அடுத்த நாளே அதை விக்க முயல மாட்டான். ஏன்னா நாங்க அங்கங்கே விசாரித்து வந்திருப்போம்னு அவனுக்குத் தெரியும். உன்னைத் தேடிக்கொண்டு வரவன் மத்த இடங்களில் முடியாததினால் கடைசியா வருவான்னு அவனுக்குக் கண்ணி வச்சோம். காவல் துறையினருக்கு ஆயிரம் கண்கள் உண்டு என்பது மறக்காதே. வருஷம் இரண்டு ஆனாலும் திருடப்பட்ட பொருட்களைக் கண்டு பிடிச்சுடு



வோம்ன்னு உனக்குத் தெரியும். நீயே அப்படிப்பட்ட ஒரு விஷயத்தில் சம்பந்தப்பட்டு ரொம்ப அவதிப்பட்டிருக்கே. திருட்டு நகைகளில் பெரும் பகுதி உன்கிட்டேதான் வரது என்பதும் எங்களுக்குத் தெரியும்.''

''ஐயா! நீங்க தாராளமா கடையைச் சோதனை போடலாம்! ஆனால் அந்த ஆனந்தன் இங்க வந்து சில நகைகளை விற்கப் பார்த்தான். அவன் நல்லவன் இல்லன்னு எனக்குத் தெரியும். இரண்டு நாள் கழிச்சு வா சொல்றேன்னு அனுப்பினேன்.''

''அவன் நல்லவன் இல்லேன்னு தெரிஞ்சதும் உடனே நீங்க போலீஸுக்குத் தகவல் தந்திருக்கணும் இல்லையா?''

''தந்திருக்கணும். ஆனால் அவன் மகா பொல்லாதவன். அடியாட்களை வச்சு அடிச்சுட்டா என்ன செய்யறதுன்னு பயந்தான் ஸார்.''

''இந்தக் கதையெல்லாம் வேண்டாம். அவன் எங்கே தங்கியிருக்கான்னு தெரியுமில்லையா. அந்த முகவரியைத் தந்தால் போதும்.''

''அந்தந்த சமயத்துக்கு அவன் முகவரி மாத்திருப்பானே, எனக்குத் தெரிஞ்ச ரெண்டு மூணு இடத்தைத் தரேன். பிறகு உங்க சாமர்த்தியம்.''

குமரேசன் எச்சிலை விழுங்கிக்கொண்டு உத்தேசமான சில இடங்களைச் சொன்னான். உள்ளூர அவனுக்கு பிக்க பயம்தான். ஆனந்தன் கொஞ்சம் பொல்லாதவனே. வஞ்சம் தீர்த்துக்கொள்ள ஆரம்பித்தால்... மனதிற்குள் தன் குலதெய்வமான சர்வசித்தி பிள்ளையாரை வேண்டிக் கொண்டான்.

பிள்ளையார் கோவிலில் கள்ளன் உண்டு. ஆனால் பயமில்லை என்கிற பழமொழி எங்களுக்குத்தானே ஏற்பட்டது... அப்பனே ஆனந்தனையும் காப்பாத்து, அடியேனையும் காப்பாத்து. மீண்டும் மனதிற்குள் வேண்டிக் கொண்டான். ''மறுபடி வாரேன்...'' என்று ரங்கநாதன் அதிகாரத் தோரணையுடன் சொன்னபோது குமரேசன் ஆடிப் போனான். பிள்ளையாரப்பா இவர் மறுபடி இங்கே வராதபடி செய்துடு அப்பா. உனக்கு சந்தன அபிஷேகம் செய்து வைக்கிறேன்.

அன்று அந்த அனுபவத்திற்குப்பின் அவன் கடையை வெகுநேரம் திறந்து வைக்க விரும்பவில்லை. எதிர்பாராத காரணங்களினால் இன்றும் நாளையும் கடை திறக்கப்படமாட்டாது - எப்பொழுதும் உதவும் - என்று தயாராக எழுதி வைத்திருந்த அட்டையை கதவு தாழ்ப்பாள் மீது கட்டி விட்டு கெட்டியாகப் பூட்டிக் கொண்டு கொஞ்ச தூரத்தில் போய் தலைமறைவாக நின்று கொண்டிருந்த தன் சகாக்களைக் கண்டு விஷயத்தைச் சொல்லி தன் வியாபாரத்தை தற்காலிகமாக இரண்டு தினங்களுக்கு ஒத்திப் போட்டிருப்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று சந்திலிருந்து வெளிப்பட்டு தேவநாராயணன் தெருவில் மெல்ல நடந்தான்.

காவல் துறை அதிகாரி ரங்கநாதன் தன் மோட்டார் சைக்கிளை அந்த வீட்டின் எதிரே நிறுத்திவிட்டு - பதினெட்டாம் நம்பர் வீடு, ரஞ்சிதா காலனி என்ற முகவரியை சரிபார்த்துக் கொண்டு கீழ்ப்பக்கத்து வீட்டின் முகப்பிலிருந்த அழைப்பு மணியை அழுத்தினான்.



பாவாடை தாவணியில் வந்து கதவைத் திறந்த வீட்டுக்காரரின் மகள் போலீஸ்காரரைக் கண்டதும் மிரண்டு விட்டாள்.

''அம்மா - போலீஸ் - போலீஸ்'' என்று அவள் கூவ, அடுப்பருகில் கைவேலையாக இருந்த அவளது தாய் தன் கையிலிருந்த பிடி துணியைக் கூட அப்பால் போட மறந்து வேகமாக வெளிப்பட்டாள்.

''என்ன வேணும். யாரைப் பார்க்கணும்?'' பதை பதைத்தாள்.

காரணமில்லாது சிலர் போலீசாரைக் கண்டதுமே ஏன் மிரண்டு கொள்கிறார்கள்?

சின்ன வயதில், சாப்பிடு - இல்லாட்டா போலீஸ் காரரிடம் பிடிச்சுக் கொடுத்துடுவேன் என்று தாய்மார்கள் குழந்தைகளை மிரட்டி உணவூட்டியதின் பாதிப்பா - தனக்குள்ளே எண்ணி சிரித்துக்கொண்டான் ரங்கநாதன்.

''ஓர் இளைஞர் இந்த வீட்டு மாடியில் குடியிருந்தாரே அவரது நண்பன் நான். அவர் இது சமயம் மாடியில் இருக்கிறாரா? வெளியே போயிருக்கிறாரா?''

மாயவர்மன் என்ற பெயரில் ஆனந்தன் அங்கு குடியிருந்தது உண்மை. வீட்டுக்காரருக்கு அவனது உத்தியோகம் பற்றிய தகவல் எதுவும் தெரியாது. மாடிப் பகுதியை வாடகைக்கு விட்டால் கொஞ்சம் பற்றாக் குறையிலிருந்து தப்பலாமே என்ற நல்ல எண்ணத்துடன் தான் வாடகைக்கு விட்டார். அதே சமயம் கல்யாண வயதை நெருங்கிவரும் பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு ஒரு பிரம்மச்சாரி இளைஞனைக் குடிவைப்பது சரியா என்று மனம் உறுத்தியது. நல்ல வேளை அவனாகவே காலி செய்துகொண்டு போய்விட்டான்.

''மாயவர்மன்னு ஒருத்தர் இருந்தார். போன மாதமே அவர் காலி செய்துகொண்டு போய்விட்டாரே?'' அந்தம்மாள் பதிலளித்தாள்.

''அவர் எங்கே போயிருக்கிறார் என்ற தகவல் ஏதும் தரவில்லை?''

''அவருக்குக் கடிதங்கள் ஏதும் இதுவரை வராததால் எங்களுக்கு அதைத் திருப்பி அனுப்ப விலாசம் தேடி அலையும் வேலை இல்லை.''

வேகமாக அண்ணா நகருக்கு வண்டியைத் திருப்பினான் ரங்கநாதன்.

குமரேசன் கொடுத்த முகவரியில்... வாயில் வராந்தாவில் ஒரு வயதான கிழவர் இருமிக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி நாளேடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

''ஜகந்நாதனையா கேட்கிறீங்க. அவர் இங்கிருந்து காலி செய்துகொண்டு போய் சில நாட்களாகிறதே. எங்கே போனார் என்பது தெரியலை. ஒரு நாள் சூப்பர் மார்க்கெட் எதிரே பார்த்தேன். சௌக்கியமா தம்பின்னு விசாரித்தேன். எங்கே குடியிருக்கே? என்ன வேலை பண்றேன்னு கூடக் கேட்டேன். அவசரம். மற்றொரு சமயம் பார்க்கிறேன்னு ஸ்கூட்டரில் விரைந்து விட்டான்.''

''அந்த ஸ்கூட்டரின் நம்பர் ஞாபகமிருக்கா?''

''ஸ்கூட்டர் நம்பரா?... இருங்க... சுவற்றிலே ஒரு பக்கம் எழுதி வச்சிருந்தேன். எனக்கு கார், ஸ்கூட்டர் இதுகளின் நம்பரைப் பார்த்தும்... எங்கேயாவது எழுதி வைக்கிற ஒரு பழக்கம். ஏன்னு கேட்காதீங்க? சின்ன வயதிலிருந்து அந்தப் பழக்கம். நான் கேட்கிறேன்னு கோவிச்சுக்காதீங்க. போலீஸ்காரங்க சும்மா வந்து ஒருத்தரைத் தேட மாட்டாங்க. பையன் யார் மேலயாவது இடிச்சுட்டானா? ஏதாவது விபத்தா!...''



''அட, சரியா சொல்லிட்டீங்களே? ஒரு சிறு விபத்து அதை விசாரிக்க வேண்டியது கடமையாயிடுச்சு.''

''நான் நினைச்சேன் அவசரமா இவன் காலி பண்ணிட்டு போரச்சேயே ஏதாவது காரணம் இருக்கும்னு அந்த சூப்பர் மார்க்கெட் பக்கம் போய் பாருங்க. இந்தாங்க நம்பர்...'' கிழவர் மிகவும் உதவினார்.

மூன்றாவதான முகவரியையும் சோதித்துப் பார்க்க ரங்கநாதனுக்கு ஆவலாக இருந்தது. ஆனந்தன் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு பெயரில் வசித்துக்கொண்டிருந்தான். மூன்றாவதாக அவன் புளியந்தோப்பு பினாகபாணி தெருவில் ஏழாவது எண்ணில் இருப்பதாக... குமரேசன் முகவரி தந்திருந்தான்... இந்த இடத்தில் அவன் பெயர் என்னவோ?

பினாகபாணி தெரு நகரத்தில் உள்ள எல்லா அழுக்குப் பிடித்த தெருவுக்கும் தலையானது. குறுக்கே ஓடிய சாக்கடையைத் தாண்டிக்கொண்டு அவன் ஏழாவது எண் முன் வந்தான். கோழி வியாபாரம் செய்து பிழைக்கிறவர்கள் என்பதற்கடையாளமாக பெரிய கூடைகளில் அடைபட்டுக் கிடந்த கோழிகள் காலடிச் சப்தம் கேட்டதும் கொக் கொக்கென்று சப்தித்தன.

கிழவர் தந்த முகவரியில் இடது பக்கமாக தோட்டத்தில் போடப்பட்டிருந்த சிறு கூடைக் கொட்டகையில் கோழிக் கூடைகள் நடுவே அந்த ஸ்கூட்டர் நின்று கொண்டிருந்தது. ரங்கநாதன் மனம் உற்சாகத்தில் பூரித்துப்

போனது. ஆசாமி உள்ளேயிருக்கான் போலிருக்கு. சட்டென்று அமுக்கி விடலாம் என்ற எண்ணத்திலே... அவன் விரைந்து சென்று அருகிலிருந்த பொதுத் தொலைபேசியின் மூலம் தனது ஸ்டேஷனில் உள்ள மற்றொரு அதிகாரியை அழைத்தான்.

''நமது காரியம் அநேகமாக வெற்றியடைஞ் சுட்டது! நீ சட்டுனு வேனுடன் இன்னும் சிலருடன் புறப்பட்டு வா. கூட சாதா உடையில் இரண்டு பேரைக் கூட்டிவா. இங்கே உள்ள ஒரு சந்துப் பக்கம் நான் காத்திருப்பேன்...'' என்றான்.

சிறுநீர் கழியவும் மற்ற அசிங்கங்களுக்கும் உபயோகப்படுத்திய அந்தச் சந்தில் காத்திருப்பது நரக வேதனையாக இருந்தது. என்ன செய்வது, கடமையை நிறைவேற்ற அவர்கள் என்னென்னவோ செய்தாக வேண்டியிருக்கே.

பினாகபாணி தெருவுக்கப்பால் சிறிது தூரத்திலேயே காவல்துறை வண்டி அவனது வேண்டுகோள்படி நின்றது. சாதா உடையிலிருந்த இரண்டு காவல்துறை அதிகாரிகள் இறங்கி வந்து அவனது மோட்டார் சைக்கிள் நின்ற இடத்திலிருந்த சந்தை எட்டிப் பார்த்தனர்.

குமட்டிய வயிற்றைப் பிடித்துக் கொண்டு நின்ற ரங்கநாதன் சட்டென அவர்கள் செய்ய வேண்டியதைச் சொன்னான்.

ஆனந்தனின் ஸ்கூட்டர் நின்ற இடத்திற்கு முன்னால் போன அந்த இரு காவல்துறை அதிகாரிகளும் மிகவும் துணிவுடன் வாயிற்கதவைத் தட்டினார்கள்.

பள்ளிக்கூட சிறுவன் வந்து கதவைத் திறந்தான்.



''இந்த ஸ்கூட்டரை ஓட்டுகிறவரா? உங்க கடையில் வீட்டுச் சாவியை வச்சுட்டு வந்துட்டாரா... நீங்க யாரைக் கேட்கிறீங்க? பூபதி அண்ணனையா... அவர் ஸ்கூட்டரை இங்கேதான் நிறுத்தி வைக்கிறது. ஆனா அடுத்த தெரு பதினைஞ்சாம் நம்பரில்தான் அவர் இருக்கார்.''

''தாங்யூ தம்பி, பாவம் அவர் வீட்டுச் சாவியை எங்க கடையிலே வச்சுட்டுப் போயிட்டார். இங்கேதான் இருப்பேன்னு பேசிக்கிட்டிருக்கும்போது சொன்னதால தான் வந்துட்டோம் - ஹ-ஹி'' என்று சிரித்துவிட்டு வேகமாக நகர்ந்து ரங்கநாதனிடம் விஷயத்தைச் சொன்னார்கள்.

கொஞ்ச நேரத்திலே... அந்தத் தெரு பதினைந்தாம் எண் வீட்டிற்கு சற்றுத் தொலைவில் வான் நின்றது. மறுபடியும் சாதா உடையிலிருந்த காவல்துறை அதிகாரிகள் வீட்டு வாசல் கதவைத் தட்டினார்கள்.

''யாரது அது... கதவை இப்படி பாழ் பண்றது?'' அகங்காரமாகக் கேட்டுக்கொண்டே வந்தாள் இரட்டை நாடியான ஒரு பெண்மணி... காலனா அகலக் குங்குமப் பொட்டும் - பெரிய கொண்டையும் வெற்றிலை பாக்கில் சிவந்த உதடுமாக வாயிற்படியை நிறைத்த அவள் தோற்றமே பெரிய சண்டைக்காரிபோலத் தெரிந்தது.

''பூபதி அண்ணனைத் தேடிக்கிட்டு வந்தோம்'' காவல்துறை அதிகாரிகள் மெல்லிய குரலில் முண கினார்கள்.

''ராத்திரி டியூட்டி செய்துட்டு அது வந்து இப்பத் தான் படுத்திருக்கு. அதை எழுப்ப முடியாது...'' கைகளை ஊன்றிக்கொண்டு பொறிந்தாள் கொண்டைக்காரி. ''ஏதாவது விசயம்னா என்கிட்ட சொல்லுங்க.''

''யாரம்மா அது...'' என்று கேட்ட இளம் பெண்ணின் குரல் வந்த திசையைப் பார்த்தனர். திரைச்சீலையைத் தள்ளிக்கொண்டு வெளியே எட்டிப் பார்த்த அந்தப் பெண்ணைப் பார்த்ததுமே அதிகாரிகள் எண்ணம் உறுதியானது...

பூபதி அண்ணன் - மயூரவர்மன் - ஜகந்நாதன் - ஆனந்தன் இன்னும் எத்தனையோ பெயர்கள் கொண்ட அந்தச் சங்கிலியறுக்கும் திருடன் அந்த வீட்டில்தான் உள்ளே தங்கியிருக்கிறான்... மை வழியும் கண்களால் மருளப் பார்க்கும் அந்தப் பதினேழு வயது இளசு அவனது காதலி, வாயிலை மறைத்து நிற்கும் அந்தப் பெருத்த உடல் அவளது தாய். கணப் பொழுதில் கணிப்புச் செய்தனர்.

''ஓர் அவசர சங்கதி... அவர்கிட்ட நேரே சொல்லணும். வியாபார விஷயம்'' என்றார் ஒருவர்.

புன்முறுவலுடன் அந்த இளம் பெண் அறைக் குள்ளே சென்றாள். சில நிமிடங்களில் லுங்கியும் பனியனுமான கோலத்தில் தலைமுடி முகத்தில் புரள - முதல் நாள் அருந்திய மதுவின் நெடி இன்னமும்... லேசாக வீச, யாரது என்று அதட்டும் குரலில் கேட்டபடி வந்தவன் மீது குபீரென்று அவர்கள் இருவரும் பாய்ந்த னர். அதே சமயம் ரங்கநாதன் கொடுத்த சைகையைக் கண்டுகொண்டு போலீஸ் வான் தெருவுக்குள் வேகமாக வந்து வீட்டின் முன் நின்றது.

பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த ரங்கநாதன் கொடுத்த உத்தரவின்படி மற்ற போலீசார் வானிலிருந்து இறங்கி உள்ளே புகுந்து சோதனையைத் துவங்கினர்.



''ஆப்பிட்டு கிட்டது ஸார்'' என்று ஒருத்தர் மகிழ்ச்சியுடன் ஒரு காகிதப் பொட்டலத்தை... அரிசி டப்பாவிலிருந்து எடுத்துக்கொண்டு வந்தார்.

அதற்குள் தெருவிலே பல தலைகள் வீட்டுக் குள்ளும் வெளியிலும் தெரியத் தொடங்கின. சிறுவர்கள் பலர் ஆரவாரித்துக் கொண்டு அருகே வருவதை உணர்ந்த இரண்டு போலீஸ் அதிகாரிகள் அவர்களைத் தடுக்க, சாதா உடையிலிருந்த அந்த இரு அதிகாரிகளும் ஆனந்தன் கரத்தில் விலங்கைப் பூட்டி வலுக்கட்டாயமாக அவனை வானிற்குள் தள்ளிக் கதவைச் சாத்தினர்...

நகரத்தில் பல இடங்களில் ஒரு நாகரிக யுவனாக... சங்கிலியை அறுத்துக் கொண்டு திரிந்த, பல பெயர்களில் பல இடங்களில் வசித்த ரங்கநாதன் சிஷ்யகோடிகளில் மிக முக்கியமான ஆனந்தன் முடிவில் போலீஸாரிடம் வசமாகத் தடயத்துடன் சிக்கிக்கொண்டான்.

தலைவலி விட்டாலும் திருகுவலி விடவில்லை என்ற பழமொழி சீதாவைப் பொறுத்தவரை உண்மையா கியது.

தலையில் பட்ட காயத்திற்குப் போட்ட தையலை, சில நாட்கள் கழித்துப் பிரிக்கலாம் என்று அவளை ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அனுப்பி விட்டனர். ஆரம்பத்திலிருந்து அவள் ஒரு போலீஸ் கேஸாகக் கருதப்பட்டாள். அதனால் எத்தனை பிரச்சினைகள் - சிக்கல்கள்?

அவளுக்கேற்பட்ட காயங்களின் விவரங்களை ஒரு டாக்டர் தடிமனானதொரு நோட்டுப் புத்தகத்தில் விவரமாக எழுதிக்கொண்டார். அவளைத் தீவிரமாகப் பரிசோதித்த பெண் மருத்துவரும் சில குறிப்புகளை எழுதி

வைத்துக் கொண்டார். வார்டில் கூட ஆயாவிலிருந்து வார்ட்பாய், பார்வையாளர், மற்ற நோயாளிகள் அனைவரிடமும் அவளைப் பற்றிய விவரம் விளம்பரமாகியது.

''ஐயோ பாவம்! சின்னப் பொண்ணு'' - என்று அனுதாபப்பட்டனர் சிலர்...

''இந்தக் காலத்தில் பெண் பிள்ளைகள் எதுக்கு நகைகளைப் போட்டுகிட்டு வெளியே போகணும். திருடர்களைத் தூண்டுகிறவர்கள் இந்த மாதிரிப் பெண்கள்தான்.''

கடுமையாக விமரிசித்தனர் சில பார்வையாளர்கள்.

அவைகளையெல்லாம் கேட்கக் கேட்க அவளுக்குத் தலை சுற்றியது.

வீட்டிற்குத் திரும்பிய அவள், தங்களது ஃபிளாட்டில் தனியே முன் போல் இருக்க அஞ்சினாள். அவளது மன நிலையைப் புரிந்து கொண்டு சாரதா அவளைத் தன்னுடன் சில நாட்கள் வைத்துப் பாதுகாக்க ஒப்புக் கொண்டாள்.

சிநேகிதத்தை முகாந்திரமாக வைத்துக்கொண்டு அவளைப் போன்ற வயதான பெண்ணிடம் அதிக சலுகைகளை எதிர்பார்க்கவும் - ஏற்கவும் கோதண்டராமனுக்குப் பிடிக்கவில்லை. சீதா இருந்ததொரு மனநிலையைக் கண்டு அவனும் கலங்கிப்போய் அதற்கு அனுமதித்தான். ஆனால் அவனும் மனைவியுடன் கூட அங்கு சென்று தங்க ஒப்பவில்லை.

காலையில் எழுந்து குளித்துவிட்டு, தானே காப்பி போட்டு சாப்பிட்டுவிட்டு, வேலைக்காரி வீட்டைச் சுத்தம் செய்ததும், கதவைப் பூட்டிக்கொண்டு வந்து தன்



மனைவியைப் பார்த்துப் பேசிவிட்டுதான் வேலைக்குக் கிளம்பிச் சென்றான். மாலை திரும்பியதும் சாரதாவின் கட்டாயத்தின் பேரில் இரவு உணவை அவர்களுடன் சாப்பிட்டான். ஆனால் படுத்துறங்க தங்களது ஃபிளாட்டுக்கு திரும்பிப் போவதை வழக்கமாக்கிக் கொண்டான்.

அந்த விபத்தினால் ஏற்பட்ட திகில் இன்னமும் சீதாவின் மனத்தை விட்டு அகலவில்லை. சாரதா வீட்டின் வாயில் அழைப்பு மணியை வேலைக்காரி அழுத்தினாலும் அவள் திடுக்கிட்டுப் போனாள். சாரதா அம்மாளின் யோசனைப்படி அவள் கணவனிடம் சொல்லி ஒரு மஞ்சள் கயிற்றை வாங்கி வரச் செய்து மஞ்சள் கிழங்கை அதில் கட்டிக் கழுத்தில் அவனை அணியச் செய்து தரித்துக் கொண்டிருந்தாள். இரவு வேளையில் அந்தக் கயிற்றைத் தொட்டுப் பார்த்துவிட்டு அவள் திடீரென்று அந்தச் சம்பவத்தை நினைத்துக் குலுங்கக் குலுங்க அழுதாள்.

''சே! என்ன இது, எதுக்கு அழணும்?'' சாரதா கோபித்துக் கொண்டபோது...

அவள் சொன்ன பதில் அந்த அம்மாளைக் கூட சிந்திக்கச் செய்தது உண்டு. அந்தத் திருட்டுப் பாவி என் நகைகளை மட்டும் பறிக்க உள்ளே வரலை சாரதா அம்மா! என்னையும் நாசப்படுத்த வந்தான். அதை நினைக்கும் போது என் குலை நடுங்குகிறது.''

சாரதா அம்மாள் அதைப் பற்றித் தீவிரமாகத் தன்னுள் சிந்திக்கத் தொடங்கினாள். பல கதைகளைப் படித்து அவளது கற்பனை மிகவும் உற்சாக நிலையில் இருந்ததால், சீதாவின் விவரத்தைப் பல கோணங்களில்

தன்னுள் சிந்தித்துக் கலவரப்பட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் தனது மனக்குழப்பத்தை அவள் சிறிதும் வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

டாக்டர் சொன்ன நாளன்று சீதாவுடன் துணையாக டாக்ஸியில் சாரதா கூடச் சென்றாள். தையலைப் பிரித்து காயம் பட்ட இடத்திலே பிளாஸ்திரியைப் போட்டு அனுப்பி விட்டனர்.

முன்போல முகத்திலே பட்ட நகக் காயங்கள் இருப்பது அவளுக்கு வேதனை கொடுக்கவில்லை. தலையில் காயத்திற்கு மருந்து போட சிறிதளவு முடியைக் கத்தரித்து விட்டிருந்தனர். அந்த இடத்தைக்கூட சாமர்த்தியமாக தலையை வாரி மூடிக்கொள்ள முடிந்தது. தாடைக்குக் கீழ் நெருப்பாக எரிந்த காயம் ஆறி, லேசாக பொருக்குத் தட்டிக்கொண்டிருந்தது. இன்னும் சில நாட்களில் அது உதிர்ந்ததும் ஒரு சிறு காய வடு மட்டும் தாடைக்குக் கீழ் இருக்கும். சட்டென்று பார்க்கும் போது அது தெரியாது. அதனால் முகம் முன்போல் பழையபடி வழுவழுவென்றாகிவிடும் என்று மன ஆறுதல் பெற்றுக் கொண்டிருந்தாள்.

அன்று காலை அவள் சாரதாவுக்கு உதவியாக சமையலறையில் காய்களை நறுக்கிக் கொண்டிருந்தாள்.

வாயில் அழைப்பு மணி அடித்ததும், கையில் பிடித்திருந்த சிறு கத்தியைத் தவறவிட்டு விட்டாள் சீதா.

''ஏன் இப்படிப் பயப்படறே? உன் அனுபவத் திற்குப் பிறகு எனக்குப் புத்தி வந்திருக்கு. யார் வந்து மணியடித்தாலும், கண்ணாடி வழியே பார்த்த பிறகுதான் திறக்கிறேன். உன் கணவனைக் கூட நான் லேசில் விடறதில்லை.'' சிரித்தபடி கதவில் பொருத்தியிருந்த கண்ணாடி வழியே பார்த்தாள்.



காவல்துறை அதிகாரி ரங்கநாதன் வாசலில் நின்று கொண்டிருந்தான். மின்னலடித்தது போன்று சங்கதி அவளுக்குப் புரிந்து விட்டது.

சீதாவை விசாரிக்க அவன் வந்திருக்கிறான். இந்த விபத்து இத்துடன் அடங்கிப் போகாத விஷயமாயிற்றே.

''என்னப்பா ரங்கா? ஏது இந்தப் பக்கம்'' என்று முறுவலித்தபடி அவனை வரவேற்றாள்.

''காரியமில்லாமல் வருவேனா ஆண்ட்டி.'' புன்முறுவலுடன் தொப்பியைக் கழற்றி கையிடுக்கில் வைத்துக் கொண்டு, மிதியடியில் ஷூவின் பாதங்களைத் தேய்த்துவிட்டு உள்ளே வரத் தயங்கினான்.

''பரவாயில்லை. காலணியோடு உள்ளே வா. நான் எல்லோருக்கும் அந்தக் கட்டாயத்தை அனுசரிப்ப தில்லை. நீ காவல்துறை உடையுடன் வந்திருப்பதால் காலணியைக் கழற்றத் தேவையில்லை.'' என்று கூறிவிட்டு அவனை அனுமதித்தாள்.

''முன்னறையில் உட்கார். சீதாவைக் கூப்பிடு கிறேன்'' என்றபடி அவள் உள்ளே விரைந்தாள்.

முத்துக்களைப்போல் முகத்தில் துளிர்த்த வியர் வையைத் துடைத்துக்கொண்டு சீதா அச்சத்துடன் சமையலறைக் கதவருகே நின்று கொண்டிருந்தாள்.

''சீதா, ஒண்ணுமில்லை. நம்ப ரங்கநாதன் வந்திருக் கிறான். என்னவோ உன்கிட்ட சில விவரங்கள் கேட்கணு மாம்'' தைரியம் சொல்லி அவளை முன்னறைக்குக் கூட்டி வந்தாள்.

''உட்காரும்மா'' என்று ரங்கநாதன் அவளை உபசரித்தான். ''நீங்களும் உட்காரலாம். உங்கள் முன்னா லேயே விசாரிக்கப் போறேன்'' என்று சாரதாவையும் அவர்களுடன் கூடயிருக்க அனுமதித்துவிட்டு தன் நோட்டுப் புத்தகத்தையும் பேனாவையும் எடுத்துக் கொண்டான்.

''உங்களைத் தாக்கியவனை நீங்கள் இரண்டு மூன்று தடவைகள் பார்த்திருப்பதாகச் சொன்னீங்க இல்லையா? அப்போ உங்கள் மனநிலை மிகவும் அதிர்ச்சியில் குழம்பியிருந்ததால் விவரம் கேட்கலை. நகைகள் விவரத்திலேயே ஒருவாறு நாங்கள் துப்பறிந்து கொண் டிருந்தோம். உங்களைத் தாக்கின அன்று அவன் அணிந் திருந்த உடை, உத்தேசமாக அவன் உயரமானவனா, குள்ளனா, சிவப்பா, கருப்பா, மீசை, தாடி போன்ற அடையாளங்கள் இதெல்லாம் கொஞ்சம் நினைவு படுத்திச் சொல்ல வேண்டும்'' என்றபோதே திடீரென்று சீதா விசும்பத் தொடங்கினாள்.

சாரதா எழுந்து வந்து அவளை அணைத்துக் கொண்டு ஆறுதல் சொன்னாள்.

''இதோ பார்! நீ இங்கு வந்ததிலிருந்து நான் இந்த விபத்து சம்பந்தப்பட்ட விவரம் எதையும் கேட்கலை. ஏன் தெரியுமா? நீ கொஞ்ச காலம் அதை மறந்து நல்ல துணிவு பெறவேணும் என்கிறதற்காக அந்தப் பேச்சையே நான் எடுக்கலை. ஆனால் இப்பொழுது கவனிக்கப்படர நேரம் வந்துவிட்டது. போலீஸ் கேஸாக இந்தத் திருட்டு பதிவாகியிருப்பதாலே நீ விவரம் கொடுத்து உதவ வேண்டியது நியாயமாச்சே.''



கண்களைத் துடைத்துக்கொண்டாள் சீதா. தன் துணிவையெல்லாம் திரட்டிக்கொண்டு அவள் முதல் முதலாக அவனை எவ்வாறு சந்திக்க நேர்ந்தது. அவனது ஸ்கூட்டரின் நிறம் எண் ஞாபகத்திற்கு வரவில்லை. அதை மனதில் கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாததால் பார்க்கவில்லை. நிறமா? மாநிறம், வட்டமான முகம் கன்னங்கள் சிறிது உப்பிய மாதிரி இருந்தான். வயது சுமார் முப்பதுக்குள் இருக்கும். தலைமுடி கருப்பாகத் தானிருந்தது... சாயமடித்ததோ என்று அப்போது நான் யோசிக்கவில்லை. எதற்கு அவனைப் பார்த்து நான் யோசிக்கணும்? அவனைப் பார்த்தபோது எனக்கு உள்ளூர ஒரு பயம் ஏற்பட்டது. ஏன்னு கேட்காதீர்கள். சிலபேரைக் கண்டால் நமக்கு திடீரென்று ஒரு கலவரம் இயற்கையாகத் தோன்றும். அது உள்ளுணர்வு. ஓர் உதாரணத்துக்கு உங்களையே எடுத்துக் கிறேன். உங்களை இந்த உடையில் பார்த்ததும் மெட்ராஸ் ரிஜிமெண்டே என் பக்கத்திலே பாதுகாக்க இருப்பது போல ஒரு துணிவு ஏற்படுகிறது. அதுவும் உள்ளுணர்ச்சி தரும் உந்துதல்தான்'' படபடவென்று சீதா பேச, அவன் தன் நோட்டுப் புத்தகத்தில் எழுதிக்கொண்டு போனான்.

திடீரென்று சீதாவுக்கு அந்தக் கடிதத்தின் நினைவு வந்தது. சாரதா அம்மாளுக்கு தான் எழுதிய அந்தக் கடிதம். ஆமாம்! இதுவரை சாரதா அம்மா அதைப் பற்றித் தெரிவிக்கவில்லையே? ஒரு சமயம் அதைப்பற்றிப் பேச வேண்டாம் என்று அவங்க மௌனமாக இருக் கிறாங்களோ? சரி - அப்படியே இருக்கட்டும். காவல் துறை அதிகாரியிடம் இப்போது அவள் அதைப் பற்றித் தெரிவிக்க வேண்டிது இல்லை. அது அவ்வளவு அவசியமானதுமில்லை.

''என்ன திடீர்னு பேசறதை நிறுத்திட்டீங்க! மேற்கொண்டு விவரத்தைச் சொல்லுங்க.''

''குறிப்பிட்ட விபத்து அன்று நானும் என் கணவரும் கொஞ்ச நேரம் முன்புதான் எங்களது பம்பாய் பயணத்திலிருந்து திரும்பி வந்தோம். அவர் அலுவலகத்துக்குப் போயிட்டார். வேலைக்காரி அடுத்த நாள்தான் வருவாள் என்பதால் நானே எல்லா வேலைகளையும் துரிதமாகச் செய்தேன்.''

''ஆமாம் ரங்கநாதன், அன்னிக்குன்னு பார்த்து நான்கூட வெளியே போயிருந்தேன். இல்லாட்டா என் வீட்டு ஜன்னல் வழியே பார்த்தால் இவர்களது ஃபிளாட் சமையலறை நன்றாகத் தெரியும். இவள் போராடிக் கொண்டிருப்பதை நான் பார்த்திருந்தால்...''

''என்ன செய்திருப்பீங்கன்னு தெரியும். கையில் அகப்பட்ட சாமானுடன் அடுத்த ஃபிளாட்டுக்கு ஓடி ஊரைக் கூட்டுமளவு கத்தி அமர்க்களப் படுத்தியிருப்பீங்க. சாரதா ஆண்டி உங்களைப் பத்தி எனக்குத் தெரியுமே! ஸ்காட்லாண்ட் யார்டில் உங்களை வேலைக்கு வைத்திருக்க வேண்டும். குற்ற நிகழ்ச்சிகளைத் துப்புதுலக்கி சரியான முடிவு எடுக்கிறவங்க நீங்கன்னு எனக்கு ரொம்பவே தெரியும்.''

''போதும் ரங்கா... ஐஸ் வைக்காதே... ஏற்கனவே எனக்குக் கொஞ்சம் ஜலதோசம் பிடிச்சிண்டு இருக்கு'' சாரதா சிரித்தாள்.

''திடீர்னு கதவைத் திறந்தது தப்புதான். ஏன் அந்தப் பிழையைச் செய்தேன்னு பிறகுதான் நான் என்னையே



பல தடவை நொந்துக்கிட்டேன். ஞாபகமறதி யாருக்கும் உண்டானதுதானே... என் கணவர் பல தடவை சொல்லியிருந்தும், எனக்குத் தெரிஞ்சவங்க யாரோ வந்திருக்கிற நினைவிலே கதவை சட்டுனு திறந்துட்டேன். அந்தப் பாவி கருப்புச் சட்டையும், கருப்புப் பாண்டுமாக ராட்சசன் போல என்னைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தான். பிறகு நடந்தது உங்களுக்குத் தெரியும்'' என்றாள் தழ தழத்த குரலில்.

எல்லா விவரங்களையும் திரும்பத் திரும்பக் கேட்டு துல்லியமாக விசாரித்து விட்டு, பின்னர் அந்தத் திடுக்கிடும் செய்தியைச் சொன்னான் ரங்கநாதன்.

''குற்றவாளியைக் கண்டு பிடிச்சுவிட்டோம். நகைகள், கைரேகைகள், அங்கே வாசலில் துளியாகச் சொட்டியிருந்த இரத்தம் அவனுடைய விவரம் எல்லாம் கிடைச்சுட்டது. நீங்க எங்களுடைய காவல்துறை அலுவலகத்திற்கு வந்து அவனை ஒரு சில குற்றவாளிகளிடையேயிருந்து அடையாளம் காட்டணும்.

''இதற்கு ஐடெண்டிபிகேஷன் பரேட்டுனு பேர். அதற்குப் பிறகு அவன்தான் குற்றவாளின்னு நாங்கள் தாக்கல் செய்யும் முறையீட்டிற்குப் பின் கோர்ட்டில் கேஸ் நடக்கும். அப்போது நீங்க வந்து சாட்சி கூற வேண்டியிருக்கும்.''

சீதாவுக்கு முகம் வெளிறிப் போனது. மயக்கமாக அவள் கீழே விழுந்து விடுவாள் போன்று தெரிவதைக் கண்டு சாரதா விரைந்து ஒரு டம்ளரில் குளிர்ந்த நீரை நிரப்பிக்கொண்டு வந்தாள்.

''இதைக் குடி. முகத்தைத் துடைச்சுக்கோ. உன்னைப் போல படிச்ச பெண்கள் இப்படியா பயப்படறது? போலீஸ், கோர்ட் என்றால் ஏன் பெண்கள் இப்படி மிரளணும். இவைகள் எல்லாம் நாம் வாழும் இந்த நாகரிகமான வாழ்க்கையை ஒட்டிய சங்கதிகள்'' என்று அன்புடன் அதட்டினாள்.

கோதண்டராமனுக்கு விவரம் தெரிவிக்கப்பட்டதும் அவனும் கலவரம் அடைந்து போனான்.

நகைகள் போனதும், மனைவி காயமடைந்து ஆஸ்பத்திரிக்குப் போய்வர நேர்ந்ததும், அவர்களது பெயரும் நடந்த விவரமும் ஊர் உலகத்தாருக்குத் தெரியும். அது வரை பத்திரிகையில் அடிபட்டது போதாது போல இன்னமும் இந்தச் சங்கதி தொடர வேண்டுமா?

''கோதண்டராமன்! நீயும் சீதா போல இப்படியா மிரள்கிறது. சமூகத்திலே ஓர் உருப்பினராக வாழ்கின்ற ஒவ்வொருவருடைய கடமையும் இதுன்னு புரிஞ்சுக்கோ. நகை போகட்டும். அந்தத் திருடன் எக்கேடு கெட்டுப் போகட்டும். எங்களை இனி நிம்மதியாகயிருக்க விடட்டும் என்று அசட்டுத்தனமாகப் பேசக்கூடாது.

''திருடன் இப்போது பிடிபட்டிருக்கிறான். அவன் தானா சீதாவைத் தாக்கியவன் என்பதற்கு அவள்தானே அடையாளம் காட்ட வேண்டும்.

''அரசு சமூகத்தாருக்கு நியாயம் வழங்க ஏற்றுக் கொள்ளும் முயற்சியிலே ஒவ்வொருவரும் தங்கள் பங்கை நிறைவேற்ற முன்வர வேண்டியது நமது கடமையில்லையா'' சிறிது கோபத்துடன் அதட்டினாள்.



''இதனால் ஏற்படப் போகிற விளம்பரத்தை நினைத்துக் கொண்டேன் சாரதா அம்மா'' என்று சங்கடமான குரலில் பதிலளித்தான்.

''என்ன விளம்பரம். இது உலக அதிசயங்களில் ஒன்றா? அப்படிப்பட்ட அதிசயங்களைக் கூட பத்திரிகையில் படித்ததும் இரண்டு நாள் ஆனதும் மக்கள் மறந்து போகிறார்கள். வேகத்தில் ஜனங்கள் மற்றொரு அதிசயத்தை நாடிக்கொண்டு முதல் நாள் படித்த செய்தியைக் கட்டோடு மறந்து விடுகிறாங்க. அதனால் ஏதாவது உனக்கோ சீதாவுக்கோ பத்திரிகையில் வேண்டாத விவரம் வந்தால் இருவரும் அதைப் பற்றி அசட்டையாயிருக்கணும். அவ்வளவுதான்.'' ஆறுதலாகச் சொன்னாள்.

கோதண்டராமனுக்கு வாக்குத் தந்தது போல, அவள் சீதாவுடன் குறிப்பிட்ட நாள் காலையில் அந்தப் பகுதி யிலிருந்த காவல்துறை அலுவலகத்திற்குப் போனாள்.

ரங்கநாதன் அவர்களை எதிர்கொண்டு அழைத்து சாரதாவைத் தன் அறையில் ஓர் இருக்கையில் அமர்த்திவிட்டு சீதாவை மட்டும் அழைத்துக் கொண்டு பெரியதாகவிருந்த ஓர் அறைக்கு அழைத்துச் சென்றான். உள்ளே சீதாவிடம் தாழ்ந்த குரலில் எச்சரிக்கை செய்தான்.

''உங்களைத் தாக்கினவன் இங்குள்ள சிலரிடையே இருந்தால் அடையாளம் காட்டணும். அதுக்காகத்தான் வந்திருக்கீங்க. சில நிமிஷம் அவகாசம் தருகிறேன். நல்லாப் பார்த்து யோசிச்சு அவன்தானான்னு உங்க மனசில் பட்டால் அடையாளம் காட்டுங்க. அவன் இதில் இல்லாட்டிப் பரவாயில்லை. தப்பாக யாரையும்

அடையாளம் காட்டாதீங்க. வீணா ஒரு குழப்பம் ஏற்படும். புரிகிறதா'' என்று கேட்டுக் கொண்டான்.

சீதா சம்மதத்திற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினாள். இனம் புரியாத பயத்தில் அவள் வியர்த்து விறுவிறுத்துப் போனாள்.

அறைக்குள்ளிருந்து மக்கலான ஒரு வாசனை முகத்தில் வந்து மோதியது. அந்த அறையின் பின் சுவற்றை ஒட்டி, பதினைந்து பேர்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தனர்.

அவர்களின் தோற்றம் வெவ்வேறு விதமாக இருந்தது. இளம்தாடி, குறுந்தாடி, வழுக்கைத்தலை, அழகாக வாரப்பட்ட கிராப்பு, சிகை, குடுமி, பிரஷ் மீசை, தொங்கு மீசை, கொம்பு மீசை, வேஷ்டி - ஜிப்பா, பேண்ட் - சட்டை, லுங்கி - பனியன் என்ற அலங்காரத்திலே கன்னங் கரேலென்ற நிறத்திலிருந்து கோதுமை வண்ணத்திலே தெரிந்தனர் அவர்கள்.

மூச்சு முட்டிவிடும் போன்றதொரு கலவரத்துடன் அவள் அவர்கள் ஒவ்வொருவரையும் துல்லியமாகத் தீவிரமாக உற்றுப் பார்த்தாள்.

ஒருமுறை பார்த்தாள். மும்முறை பார்த்தாள்.

அந்த மீசை, கண்களை அவள் மறக்க முடியாதே. உதட்டை சுழித்துக் கொண்டாள். ஆவேசமும் ஆத்திரமுமாக அவள் தன் கையைத் தூக்கி அவன் - அவனேதான் என்று அந்தக் கூட்டத்தில் நின்ற ஆனந்தனை அடையாளம் காட்டினாள்.

''வாங்கோ போதும்'' என்று சீதாவை மறுபடி தன் அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றான். தன் பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்து எதிரேயிருந்த ஒரு கடையிலிருந்து குளிர்பானம் தருவித்து சாப்பிடச் சொல்லி உபசரித்தான்.

''உங்கள் உடல் நிலைக்கும், மனநிலைக்கும் இந்த அனுபவம் ஓரளவு பாதிப்பை உண்டாக்கி விட்டிருக்கு.

''இனிமேல் வேண்டும்போது உங்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். அப்போது வந்தால் போதும்'' என்றான்.

''ரங்கநாதா! ஆசாமியை அடையாளம் காட்டி விட்டாளா சீதா'' என்று தாழ்ந்த குரலில் மெல்லக் கேட்டாள் சாரதா.

ரங்கநாதன் முகத்திலே பூத்த பெரிய புன்னகையில் அவள் பதிலைக் கண்டுகொண்டாள்.

அதற்குப்பின் நாட்கள் நரக வேதனையாக சீதாவுக்குக் கழிந்தன. எந்தச் சமயம் அவள் அந்தக் கேசுக்காக கோர்ட்டில் ஆஜராக நேருமோ என்ற திகிலில் நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தாள். நீண்ட நாட்கள் சாரதாவின் வீட்டிலேயே தங்குவது நியாயமல்ல என்று உணர்ந்த கோதண்டராமன் அவளைத் தன் ஃபிளாட்டிற்கு அழைத்துக்கொண்டு போனான்.

பழைய வேலைக்காரி இந்தச் சம்பவத்திற்குப்பின் வேலையை விட்டு நின்று விட்டதால், கோதண்டராமன் தன் நண்பன் ஒருவனது மனைவியின் சிபாரிசின் பேரில் சீதாவுக்குத் துணையாகவும், வீட்டு வேலைகளைக் கவனிக்கவும் ஒரு புதிய வேலைக்காரியை அமர்த்தினான்.

வள்ளி இளம் பெண்; துருதுருப்பானவள். அத்துடன் மிகவும் நியாயமானவள் என்பதால் சீதா அவளை ஏற்றுக்

கொண்டிருந்தாள். நாட்கள் நகர்ந்தன. சில மாதங்களுக்குப்பின் சீதா அந்தப் பயங்கர நிலையை மறக்கத் தொடங்கிய பின்னர் தாய்மையில் அவள் முன்னேறிக் கொண்டிருந்த சமயம், அந்தக் கேஸ் நீதிபதிக்கு முன்னர் கொண்டு வரப்பட்டது.

ஆனந்தனுக்குப் பண வசதிக்குக் குறைவில்லை. ஜாமீனில் அவனை வெளிக்கொணர்ந்து வக்கீல் வைத்து வாதாடுவதற்கும் அவனது குழுவில் சிலர் முன் வந்திருந்தனர்.

அந்தத் தெம்பிலே அவன் மிகவும் துணிச்சலுடன் குற்றவாளிக் கூண்டில் நீதிபதியை நிமிர்ந்து பார்த்துக் கொண்டு ஏதோ தன்னைச் சுற்றி ஒரு வேடிக்கை நடப்பது போல நின்று கொண்டிருந்தான்.

சீதா விசாரிக்கப்பட்டாள். குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டிருந்த அவன்தான் அன்று கதவைத் தள்ளி உள்ளே வந்து, கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி, அசிங்கமாகப் பேசி - அவளைத் தாக்கி, தாலிச்சரட்டையும் கை வளைகளையும் கழற்றி வாங்கிகொண்டதுடன், அவளைத் தாக்கிக் காயப்படுத்தியவன் என்று சர்க்கார் தரப்பில் சாட்சி சொன்னாள்.

எதிர்தரப்பு வக்கீல் சும்மா விட்டு விடுவாரா? இது மாதிரி சங்கதிகளின்போது தங்களது கட்சிக்காரருக்காக வாதாட வந்துள்ள வக்கீல் சாட்சிகளைக் கேள்விக் கணைகளைத் தொடுத்து நார் நாராகப் பிய்த்துக் கட்டிவிடுவதில் சமர்த்தரான ஒருவரைத்தான் ஆனந்தன் குழு நியமித்திருந்தனர்.



''கூண்டில் நிற்கும் இவரை நன்றாகப் பார்த்துச் சொல்லுங்கள். உங்களுக்கு இவரை முன்னமேயே தெரிந்திருக்கிறது. நீங்களும் என் கட்சிக்காரரும் இரகசியமானதொரு தொடர்பை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்கிறேன்.''

''ஐயோ, எனக்கு இவரைத் தெரியவே தெரியாது.'' சீதா அலறினாள் நீதிமன்றத்தில்.

''பொய். சுத்த பொய். என் கட்சிக்காரருடன் நீங்கள் கொஞ்ச காலமாக நெருக்கமாகப் பழகியிருக்கிறீர்கள். அடிக்கடி உங்கள் பிளாட்டுக்கு அவர் இரகசியமாக வந்து உங்களுடன் உறவு வைத்துக் கொண்டிருக்கிறார்.''

''இல்லை. இல்லை. இது சுத்தப் பொய்'' கிரீச்சிட்டாள் சீதா.

''இந்த உறவின் நெருக்கத்தினால் அவர் உங்களைப் பண உதவி கேட்டு வற்புறுத்தியிருக்கிறார். நீங்கள் அவருக்குப் பயந்து கொண்டு அவரை விரட்ட முயன்று கோபத்துடன் அப்பளக் குழவியால் அடித்திருக்கிறீர்கள். தற்காப்புக்காக அவர் உங்களைத் தாக்கியிருக்கிறார்.''

''இது சுத்தப் பொய். அப்படி நடக்கவில்லை. கத்தியைக் காட்டி பயமுறுத்தி நகைகளைக் கவர்ந்து கொண்டான்.''

''முன்பின் தெரியாவதர்களை நீங்கள் உள்ளே அனுமதிப்பீங்களா? நீங்கள் கதவைத் திறந்ததால்தானே இவர் உள்ளே வந்திருக்கிறார்.''

''சாதாரணமாக சட்டுனு நான் கதவைத் திறக்க மாட்டேன்.''

''அப்படி வாங்கோ வழிக்கு. இவர் ஏற்கெனவே உங்கள் கள்ளக் காதலனாக இருக்கிறவர். அதனால் கணவன் வருவதற்கு முன் இவரைச் சந்திக்க ஆவலுடன் கதவைத் திறந்து உள்ளே அனுமதிச்சிருக்கீங்க.''

''இல்லை. ஞாபக மறதியால் சட்டுன்னு கண்ணாடி வழியாகப் பார்க்க மறந்து கதவைத் திறந்துட்டேன்.''

''அது வெறும் கட்டுக்கதை. படிச்ச பெண் நீங்க. நகரத்தில் நடக்கும் சில குற்றங்களைப் பற்றித் தெரிஞ்சு கொண்டவங்க. சில காலமா நீங்க இவருடன் தொடர்பு வச்சுக் கொண்டிருந்ததாக என் கட்சிக்காரர் சொல்கிறார். உங்கள் கணவன் வெளியே போனபின் அடிக்கடி உங்களை அந்த ஃபிளாட்டில் சந்தித்து சல்லாபங்கள் செய்ய அனுமதிச்சிருக்கீங்க என்கிறார் என் கட்சிக்காரர். இந்த உறவின் நெருக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர் உங்களிடம் சில தடவை கடனாகப் பணம் வாங்கிக் கொண்டிருக்கிறார். அவைகளைத் திருப்பித் தர முடிய வில்லை.

''பொய், பொய். சுத்தப் பொய்'' அதற்கு மேல் அவளால் கத்திப் பேச முடியவில்லை.

''உண்மை... இதுதான் நடந்த உண்மை. அந்த நகைகளை நீங்களே வலுவில் கழற்றிக் கொடுத்துவிட்டு, பின்னர் யாரோ திருடன் அபகரித்து விட்டதாகக் கதை கட்ட நினைத்தீர்கள். அது போதாது மேலும் பணம் கொடு என்று அவர் காதலுடன் உங்களை நெருங்கினபோது, கணவர் திரும்பி வந்துவிடுவார் என்று பயந்தீர்கள்... நடை வெளியில் காலடி சத்தம் கேட்டதும் கண்ணகியாக மாறத் திட்டமிட்டீர்கள்... வழக்கம் போல நீங்கள் சம்மதத்துடன் உடலுறவுக்கு அனுமதி தராததினால், காமவசப்பட்ட என்



கட்சிக்காரர் உங்களை வேகமாக அணுகியிருக்கிறார்... அதையே ஒரு முகாந்திரமாகக் கொண்டு அப்பளக் குழவியால் அடிக்க அவர் கோபங்கொண்டு உங்கள் புடவையை இழுக்க முகத்தில் காயம், தலையில் காயம் என்று இருவருக்கும் பல காயங்கள் ஏற்பட்டு ஒரு கற்பழிப்பு சம்பவம் போல தந்திரமாக ஜோடனை செய்து...''

''சுத்த அபத்தம்... நிரபராதியான ஒரு பெண் மேல் வீண் கதை கட்டுகிறார் இந்தப் பாவி'' ஓங்கிக் கூச்சலிட்டாள்.

'சைலன்ஸ் சைலன்ஸ்' என்று நீதிபதி மேஜையைத் தட்ட, பத்திரிகை நிருபர்களிடையே சலசலப்பு ஏற்பட கோர்ட்டில் இந்த விவகாரம் வேறு கோணத்தில் சூடு பிடித்தது.

அவ்வளவுதான் நிருபர்களுக்கு சாப்பிட அல்வா கிடைத்தது போன்றதொரு சங்கதி கிட்டியது... ஊராருக்கு நொறுக்கித் தின்ன அவல் கிடைத்த மாதிரி இருந்தது.

சீதா அம்மாளின் நகைத் திருட்டு விசாரிப்பில் புதிய சில உண்மைகள்.

தாலித் திருடன் கண்டுபிடிக்கப்பட்டு விசாரிக்கப் பட்டபோது கிடைத்த திடுக்கிடும் தகவல்கள்.

ஆனந்தன் திருட்டு வழக்கிலே சில அதிசயமான திருப்பங்கள்.

தலைப்புகளை விதவிதமாகக் கொடுத்து பத்திரிகை கள் விஷயத்தைப் பரவலாக விளம்பரப்படுத்துவதில் மும்முரமாகியது.

கோர்ட்டு விசாரிப்பிற்குப் பின் வெளியே வந்த சீத்தா மயக்கமாகி சாரதா கையணைப்பில் மயங்கி விழுந்துவிட்டாள்.

மறுநாள் வெளிவந்த பத்திரிகைகள் அனைத்திலும் அந்தக் கேஸின் முடிவு வெளியாகியிருந்தது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் ஏதோ ஒரு பக்கத்தில் ஒரு சிறு இடத்தில் வெளியான அந்தச் செய்தி சில தமிழ் பத்திரிகைகளில் பெரிய தலைப்புடன் பளிச்சென்று மக்களுக்கு சுடச்சுட பெரிய செய்தியாகத் தரப் பட்டிருந்தது.

ஆனந்தன் திருட்டு வழக்கின் முடிவு.

சீதா - ஆனந்தன் திருட்டு வழக்கில் வக்கீலின் திறமையான வாதம்... நீதிபதியின் தீர்ப்பு.

பல பெயர்களில் திரிந்து கொண்டிருந்த பிரபல சங்கிலித் திருடன் கேசின் இறுதிக் கட்டம்.

கள்ளக் காதலா? கற்பழிப்பா? சீதா என்ற பெண்ணின் கேஸின் முடிவு பல விதமான தலைப்புகள். கண்களில் பளீரென்று தெரியும்படி பத்திரிகைகளில் பத்தி பத்தியாக விவரமும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கேஸ் நடக்கத் தொடங்கியதிலிருந்து கோதண்ட ராமன் சில தமிழ் பத்திரிகைகளையும் கொண்டு வந்து போடும்படி வழக்கமாக பேப்பர் விநியோகிக்கும் பையனிடம் சொல்லியிருந்தான்.

அவ்வளவுதான்... அன்று காலை வாயிற் கதவைத் திறந்து பார்த்தபோது அந்தக் கொட்டை எழுத்துக்கள் தான் கையில் அள்ளிய அந்தப் பத்திரிகைகள் அனைத்திலும் தெரிந்தன... அவனது கண்களை உறுத்தின.



ஒன்றைப் பிரித்து அவசரமாகப் படித்தான்... ஆனந்தன் என்ற பெயரில் முடிவில் கைதாகி பிரபல சங்கிலித் திருடன் வழக்கில் முடிவு கொஞ்சம் பரபரப்பை உண்டாக்கி விட்டிருக்கிறது. அவனுக்காக ஆஜர் ஆன பிரபல குற்ற ஆய்வு நிபுணரான வக்கீல் வரதராஜன் அவன் சார்பில் வாதாடியபோது தமது கட்சிக்காரருக்கும் சீதா என்ற அந்தப் பெண்ணிற்கும் பல நாட்களாகவே கள்ளக் காதல் இருந்ததென்றும், அவளை அவன் வழக்கம் போல சந்திக்கப்போன இடத்திலே கணவனுக்குப் பயந்து அவள் திடீரென்று பத்தினி வேஷம் போட்டதின் விளைவுதான் இது என்றும் ஆணித்தரமாக வாதாடினார்.

சர்க்கார் சார்பில் பேசிய வக்கீல் வாதம் வேறு விதமாக இருந்தது. சீதா - ஆனந்தன் இருவர் இடையே கள்ளக் காதல் இருந்திருக்கலாம்.

கணவன் வெளியேறியதும் காதலனை சீதா தானே உள்ளே அனுமதித்திருக்கலாம் - ஆனால் அவனுக்கு ஒரு பெண்ணை உடலுறவுக்கு பலவந்தம் செய்ய உரிமை யில்லை.

அது கற்பழிப்பு என்ற குற்றத்தின் கீழ் ஆராயப்பட வேண்டிய சங்கதியாகிறது... ஏற்கனவே பல செயின் திருட்டில் சம்பந்தப்பட்ட ஆனந்தன் என்ற தற்காலிக பெயர் கொண்ட இந்தப் பிரபல திருடன், கட்டாயம் திருடும் நோக்கத்துடன்தான் அந்த வீட்டில் நுழைந் திருக்கிறான். கத்தியைக் காட்டி மிரட்டித்தான் நகைகளைப் பறித்திருக்கிறான் - தன்னைக் காத்துக் கொள்ள அந்தப் பெண் அவனைத் தாக்கியிருக்கிறாள். அவன் கோபத்தில் காயப்படுத்தியிருக்கிறான்.

இந்தக் குற்றங்களுக்கு நீதிபதி அவனுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று சிபாரிசு செய்கிறேன் என்று மிகவும் ஆவேசமாகப் பேசினார்.

ஆனந்தன் வக்கீல், சர்க்கார் வக்கீல் இருவரின் வாதங்களை சீர் தூக்கிப் பார்த்த பின்னர் ஆனந்தன் திருடும் நோக்கத்துடன்தான் அந்த வீட்டிற்குள் நுழைந்திருக்கிறான் என்ற முடிவில் அவனுக்கு ஆறு மாதம் கடுங்காவல் விதிக்கிறேன். அடித்துக் காயப் படுத்தியத்திற்கு இன்னொரு ஆறுமாதக் கடுங்காவல் விதிக்கிறேன். இரண்டும் ஒரே சமயத்தில் அவன் அனுபவிக்க வேண்டும் என்று உத்திரவிடுகிறேன் என்று நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

மூச்சைப் பிடித்துக் கொண்டு அத்தனை பத்திரிகை களையும் பல் துலக்கு முன்பே படித்து முடித்தான்... அவன் நெஞ்சில் கோபம் நெருப்பாக எரிந்தது. பத்திரிகை களை ஆத்திரமாக விசிறி முன்னறை சோபாவில் போட்டு விட்டு, பற்பசையுடன் வாஷ் பேசின் அருகே வந்து நின்றவன் தன் முகத்தை மேலே பதிக்கப்பட்டிருந்த கண்ணாடியில் பார்த்துக் கொண்டான்.

சில சினிமாப் படங்களில் வரும் காட்சி போல கண்ணாடியில் தெரிந்த அவனது முகம் அவனிடம் பேசி நகைத்தது போன்ற ஒரு பிரமிப்பில் அதிர்ந்து போனான்.

கோதண்டராமா? உன் மனைவி சீதாவுக்கும் அந்தத் திருடனுக்கும் இடையே கள்ளக்காதல் இருந்திருக்கிறது.

இல்லாவிட்டால் அவள் கதவைத் திறந்து அந்நியன் ஒருவனை வீட்டுக்குள் துணிவாக அனுமதித்திருப்பாளா?



உன் மனைவி நடத்தை கெட்டவள்... நம்பாதே அவளை கோதண்டராமா! நீ ஒரு பெரிய அலுவலகத்திலே உயர் மட்டத்து அதிகாரி. ஆனால் உன் மனைவியோ ஒரு பிரபல திருடனுடன் கள்ளத்தனமாகத் தொடர்பு வைத்துக் கொண்டவள்.

பத்திரிகையில் வந்து விட்டிருக்கிறது உண்மை சங்கதி. நீ இன்னும் உன் மனைவியை உத்தமி என்றா நினைக்கிறாய்?

அட முட்டாளே! பெண்கள் மனம் வைத்தால் என்னென்னவோ செய்ய முடியும். நீ சின்ன வயதில் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை படித்திருக் கிறாயே. அதில் வருகிறதே ஒரு பெண்ணின் கதை - அரசன்... இந்தப் பக்கமும், மந்திரி அந்தப் பக்கமும் காவல் செய்யும்போதே சோரம் போகிறாளே? உன் மனைவியும் அந்த ரகத்தைச் சேர்ந்தவள்தான்... நீதான் முட்டாள்... படித்த முட்டாள்... வடிகட்டின முட்டாள்.

கோபத்துடன் ஆத்திரமாகப் பற்பசையினால் பற்களை அழுத்தித் தேய்த்துக் கொண்டான்.

முகத்தைக் கழுவி துவாலையால் துடைத்துவிட்டு மீண்டும் கண்ணாடியில் பார்த்தான்.

அவனை அன்று அலுவலகத்தில் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து பணி செய்யும் அலுவலகப் பையன் முதல் மானேஜிங் டைரக்டர் வரை எல்லோரும் எப்படிப் பார்ப்பார்கள்.

மனைவி வீட்டில் கள்ளக் காதலனுடன் கொஞ்ச கோட்டும் சூட்டுமா பெரிய அலங்காரத்திலே வந்து

ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்கிறானே. இவனும் ஒரு மனிதன்! வெட்கம் கெட்டவன். மனைவியை விலைக்கு விற்றுவிட்டு அந்தக் காசில் சோறு தின்னும் கேடு கெட்ட ஜன்மங்களில் இவனும் ஒருவன். மனைவியை தன் உயர்வுக்காக விபச்சாரம் செய்ய அனுமதிக்கும் அதமன். பாவி, சண்டாளன் என்று பல பட்டங்கள் கொடுத்து பார்வை யால் கொல்வார்களே.

அன்று அவன் அலுவலகத்தில் லீவு போட்டுவிட்டு வீட்டில் தூங்க முடியாதே! மானேஜிங் டைரக்டர் அவனிடம் முக்கியமாகப் பேசித் தீர்மானம் எடுக்க வேண்டிய சில காரியங்கள் இருக்கின்றனவே.

அவர் பத்திரிகையைப் படித்திருந்தால்? அவர் முகத்தில் எப்படி அவன் விழிப்பான். அலுவலகத்தில் உள்ள மற்றவர்கள் இதை வம்பு பேசிப் பெரிது படுத்துவார்களே?

சீதாவுக்கு சாட்சி சொல்லப் போன தினத்திலிருந்து அடிக்கடி மயக்கம் வந்தது. அவள் படுக்கையினின்று இன்னமும் எழவில்லை.

அந்தப் பத்திரிகை செய்திகளைப் படித்தபின் அவனுக்குப் படுக்கை அறைக்குள் சென்று அவளைப் பார்க்கவும் முடியாது போன்றதொரு தயக்கம். இல்லை வெறுப்பும், கோபமும் என்றே சொல்ல வேண்டும்.

கடமைக்காகக் குளித்து மாற்றுடை அணிந்து கொண்டதும் படுக்கையறைக்குள் சென்று சில நிமிஷங்கள் நின்றான்.



அவள் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தாள். இந்தத் தூக்கத்திலிருந்து அவள் விழிப்படையாது ஒரே தூக்கமாகி விட்டால் கூடத் தேவலை என்ற ஒரு பயங்கர எண்ணம் மனதில் எழ, அவன் கோபத்துடன் சமையலறைக்குள் புகுந்து தானே பாலைக் காய்ச்சி அவசரமாக ஒரு கோப்பை காப்பியைத் தயாரித்துக் குடித்தான்.

மேலே அங்கே அவன் நீடித்து நின்றால் அவனை யறியாது ஏதாவது தவறு செய்து விடுவான் போன்ற ஒரு திகில். தன் பிரிப்கேஸைத் தூக்கிக் கொண்டு வாயில் காட்ரிஜ் கதவை இழுத்து சாத்திப் பூட்டிக் கொண்டு வெளிநடப்புச் செய்தான்.

வழி நெடுக அவன் மனம் அலை பாய்ந்தது.

சீதாவுக்கு அந்த மயக்கம் நிறைந்த உறக்கத்திலிருந்து விழிப்பு ஏற்பட்டது. இதென்ன சுரீர் என்று பின்பக்கத்திலே வலி.

'ஐயோ! தாங்க முடியவில்லையே.' தள்ளாடிக் கொண்டு எழுந்து வந்தாள். தனக்குப் பிரசவ வேதனை ஆரம்பித்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டாள். டாக்டர் ரேவதி 'இன்னும் கொஞ்சம் நாள் பிடிக்கும், என்று கணக்குக் கொடுத்தாள்.

ஆனால் வலி இப்போதே துவங்கி விட்டதே. போலியாக சில சமயம் வேதனை எடுத்து நின்றுவிடும் என்று சொன்னார்களே, இது போலி வலியா?

குழந்தை பிறக்க இன்னும் நாலு வாரத்திற்கு மேலிருக்கிறதே! ஐயோ இப்போது குழந்தை பிறந்து விட்டால்? அது குறைமாதக் குழந்தையாகி விடுமே! சில சமயம் அது இறந்து போகலாமே!

மறுபடியும் சுரீர் என்று மின்னலடித்தாற் போன்ற வலி தன்னையும் மீறி 'ஐயோ அம்மா' என்று அலறினாள்.

'ஆமாம். இவர் எங்கே? சமையலறையில் தானே காப்பி போட்டுக் கொள்கிறாரா - பாவம்' என்றபடி அங்கே வந்து எட்டிப் பார்த்தாள்.

''உங்களைத்தானே! மிஸ்டர் கோதண்டராமன் ஹே ராமன்! எங்கே இருக்கீங்க.'' அடுத்த வலியைத் தாங்கிக் கொண்டு உரத்த குரலில் கூப்பிட்டாள். சாப்பாட்டறை மேஜை மீது ஒரு பக்கமிருக்கும் அவனது ஃபிரிப் கேசைக் காணவில்லை. அவள் தயாராக எடுத்து வைத்திருந்த அலுவலக உடையை முக்காலி மீது காணவில்லை.

குளியலறையின் ஷவரிலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. அவன் குளித்துவிட்டதின் அடையாள மாக அறையின் தரையில் நீர் பரவி ஈரமாகத் தெரிந்தது.

காப்பி சாப்பிட்டு விட்டு, கோப்பையைக் கழுவி அவன் மேடையில் ஒரு பக்கம் கவிழ்த்துவிட்டுப் போயிருந்தது தெரிந்தது.

வாசல் கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு அவன் வேலைக்குப் போய்விட்டான். அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் போக வேண்டிய அவசரம்?

அவள் கண்களில் முன்னறையில் கிடந்த அந்தப் பத்திரிகைகள் தென்பட்டன.

இன்னொரு வலி - தாடை இறுக, பற்களைக் கடித்துத் தாங்கிக் கொண்டாள்.

ஒரு தமிழ் பத்திரிகையைக் கையில் எடுத்துப் பார்த்தாள். அந்த அசிங்கமான விபரத்தைப் பார்த்ததும் அவளுக்குத் தலை சுற்றியது. ஒரு சமயம் அவைகளைப்



படித்து மனவேதனைப்பட்ட அவள் கணவன் அவளைப் பார்த்து அதைப் பற்றிப் பேச மனமின்றி அதைத் தவிர்க்கத்தான் சட்டென்று அலுவலகத்திற்குக் கிளம்பி விட்டாரோ...

கோதண்டராமன் அவளை உயிருக்குயிராக நேசிக்கும் கணவன். ஊரார் வம்பு தும்புகளைக் காதில் போட்டுக் கொள்ளமாட்டார்.

ஐயோ - மறுபடியும் பின் பக்கத்திலே வலிக்கிறதே. பிரசவ வேதனை அப்படித்தான் ஆரம்பிக்கும் என்று அந்தப் புத்தகத்தில் அந்த டாக்டர் எழுதியிருந்தாரே!

பிரசவத்திற்குப் பிறந்த வீட்டுக்குப் போவதாக ஏற்பாடு செய்திருந்தான் அவள் கணவன். தாய்மை முன்னேறி விட்டால் விமானத்தில் பறப்பது என்ற உத்தேசம். அப்படிப் போக வசதி இல்லாது போனால்... அம்மாவை வரவழைத்து அங்குள்ள தனியார் ஆஸ்பத்திரியில் டாக்டர் ரேவதியின் மேற்பார்வையில் அனுமதிப்பது என்றதொரு ஏற்பாட்டையும் கணவன் செய்திருந்தாரே!

கோதண்டராமனது ஆலோசனை அது. திருட்டு நடந்தபோது அவளது பெற்றோர்களுக்கு முழு விபரத் தையும் எழுதி பயப்படுத்தக் கூடாது என்று... நாசூக்காக நடந்ததை தபாலில் எழுதியிருந்தான். தொலைபேசியில் அவர்கள் யாரும் பதட்டப்பட்டுக்கொண்டு வரத் தேவையில்லை என்று சொல்லியிருந்தான்.

அவர்கள் குடும்பம் மத்திய தர வகுப்பைச் சேர்ந்தது. அப்பாவுக்கு சட்டென்று கிளம்ப முடியாது. ஒரு தடவை மாரடைப்பு வந்து செத்துப் பிழைத்தவர்.

மணிபர்சில் தேவைப்பட்ட பணம் உள்ளதா என்று ஒருமுறை சோதித்துக் கொண்டு, கைத்தாங்கலாக அவளை வெளியே அழைத்து வந்து கதவை வெளிப்பக்கம் பூட்டிவிட்டு டாக்ஸியில் ஆஸ்பத்திரிக்கு விரைந்தாள்.

## 4

துன்பங்கள் வந்தால் கட்டுகளாக வரும் என்பார்கள் ஆங்கிலத்தில். அதையே நம் தமிழ்ப் புலவர் ஒருவர் ஆவீன மழைபொழிய இல்லம் வீழ... என்று ஒரு தனி மனிதனுக்குத் தொடராக ஏற்பட்ட துன்பங்களை வரிசைப்படுத்தி ஒரு தனிப்பாடல் இயற்றியிருக்கிறார்.

அது சீதாவின் பெற்றோர்கள் விஷயத்தில் இப்போது உண்மையாகி விட்டிருந்தது.

சாரதா அம்மாள் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள்... சீதாவின் பெற்றோர்கள் வசித்த ஃபிளாட்டில் தொலைபேசி வசதி கிடையாது. எதிர் ஃபிளாட்டிலிருந்த குஜராத்திப் பெண்மணி அவசரத் திற்குத் தங்கள் தொலைபேசியை உபயோகிக்க அனுமதி அளித்திருந்தாள்.

அந்தச் சலுகையை உபயோகித்துதான் சாரதா அந்தம்மாளை அழைத்து சங்கதியைச் சொன்னபோது... பேச முடியாது சீதாவின் தாய் போனிலேயே அழுது விட்டாள்.



அவளது கணவருக்கு மறுபடியும் ஒரு மாரடைப்பு வந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும்... சீதாவின் தங்கை கடும் காய்ச்சலில் படுத்திருப்பதாகவும், அந்த மாதத்தின் கடைசியிலேயே அவர்கள் வசிக்கும் ஃபிளாட்டைக் காலி செய்து தரவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் இருப்பதாகவும் திக்கித்திணறினாள்.

''அப்படியென்றால் நானே உங்கள் சார்பில் சீதாவைக் கவனிச்சுக்கிறேன், கவலைப்பட வேண்டாம்'' என்றாள் சாரதா. அந்தத் திருட்டுக் கேஸ் பற்றின விவரம் கொண்ட பத்திரிகைத் துண்டுகளை எங்கள் தூர உறவினன்... வக்ரபுத்தியோட கத்தரிச்சு அனுப்பியிருந் தான். அதைப் பார்த்த இவருக்கு நெஞ்சுவலி வந்து விட்டது'' என்று அழுதாள்.

சிலருக்கு ஏனோ இந்தத் துர்புத்தி... உதவி செய்யாவிட்டாலும் மனதைக் கிண்டிக் கிளறி நோகச் செய்து எல்லாவித இடைஞ்சலும் செய்ய நினைக்கும் கோணல் புத்தி.

''கவலைப்படாதீங்க... பேப்பரில் இதுகளை யெல்லாம் பிரசுரிக்கத்தான் செய்வாங்க... அதுக்காக வருத்தப்பட்டால் சாத்தியப்படாது'' என்று ஆறுதல் சொன்னாள்.

ஆனாலும் சாரதாவின் மனத்திற்குள்ளே ஒரு நெருடல்.

அவள் சீதாவை அந்தத் தனியார் மருத்துவமனையில் அனுமதித்து நாள் இரண்டாகியது... அடிக்கடி போலி வலி வந்து சீதா துடிதுடித்தாள்.

அதை நிறுத்த அவளைக் கவனித்த வைத்தியர் ஆவன செய்து கொண்டிருந்தார்... நாளின் பெரும்பொழுது சீதா தன்னை மறந்த நிலையில் இருந்தாள்... அதனாலோ என்னவோ அவள் கணவனைப் பற்றி விசாரிக்கவில்லை... ஆனால் கோதண்டராமன் அவளை வந்து பார்க்க முற்படவேயில்லை...

இரண்டு முறை அவள் கோதண்டராமனது ஃபிளாட்டிற்கு மாலை வேளையில் சென்று பார்த்தாள்... கதவு பூட்டப்பட்டிருந்தது.

இரவில் படுக்கையறையில் தெரிந்த வெளிச்சத்தைக் கண்டுவிட்டுக் கோதண்டராமனை போனில் அழைத்தாள்.

''உன் மாமியாருக்கும் இப்போது வந்து கவனிக்க முடியாதபடி பல சங்கடங்கள்... உன் மாமனாரும் - மச்சினியும் உடம்புக்கு முடியாம இருப்பதால் அவர்கள் உடனே புறப்பட்டு வந்து சீதாவை கவனிக்க முடியலை. போலி வலியைக் கட்டுப்படுத்த டாக்டர் தரும் மருந்தின் போதையால் சீதா நாளின் பெரும்பகுதி தூங்குகிறாள். என்றாலும்... விழிப்பு ஏற்படும் போதெல்லாம் உன்னைக் கூப்பிடுகிறாள். நீ இன்னமும் அவளை வந்து பார்க்காது இருப்பதின் அர்த்தமே புரியலையே!'' என்று மூச்சு விடாது படபடவென்று கேட்டு விட்டாள்.

''உங்களுக்குக்கூடப் புரியலைன்னா ரொம்ப விசித்திரமாக இருக்கு சாரதா அம்மா...'' மிகவும் விரக்தியாகப் பதிலளித்தான் கோதண்டராமன்.

''உண்மையில் எனக்குப் புரியாததினால்தானே கேட்கிறேன்.''

''சீதாவை நான் பார்க்க விரும்பலை.''



''அவள் செய்த குற்றம்?''

''என்னைப் பார்த்து ஊர் சிரிக்கும்படி வச்சிட்டாளே - அந்தக் குற்றம் போதாதா!''

''கோதண்டராமன் நீயாப்பா இப்படி பேசறே. ஆஸ்பத்திரியில் அவள் வலியுடன் படுத்துக் கிடக்கிறாள். இந்தச் சமயம் நீ இப்படி நடந்துக்கலாமா? உன்னைப் போல படிச்சவன் செய்கிற காரியமா இது?''

''சாரதா அம்மா.. கோர்ட்டில் அன்று சாட்சி சொல்ல சீதா சென்றப்போ... அந்த வக்கீல் கேட்ட கேள்விகளை பத்திரிகைகளில் போட்டு அம்பலப் படுத்திய பிறகு நாக்கைப் பிடுங்கிக் கொண்டு உசிரை விடாம நான் இன்னமும் இருப்பதே அதிகம். இனி அவளை நான் வந்து பார்ப்பதாக உத்தேசமில்லை.''

''அப்படி நீ உன் மனைவியை உதறிவிட்டுப் போய்விட முடியாதே.''

''சாரதா அம்மா, எனக்கு என் பொறுப்புத் தெரியும். அவளது பிரசவத்திற்கும் தொடர்ந்து அவளது குழந்தையை வளர்க்க ஆகும் செலவையும் நான் அனுப்பி விட ஏற்பாடு செய்து விடுகிறேன். ஒரு வருஷகாலம் நாங்கள் ஒருவரையொருவர் பாராதிருந்து பிறகு உரிய முறைப்படி அவளை நான் விவாகரத்து செய்துவிடத் தீர்மானித் திருக்கிறேன்.''

''அவள் செய்த பிசகு என்ன என்று அவளை உன் வாழ்க்கையிலிருந்து ஒதுக்கத் தீர்மானித்திருக்கிறாய்?''

''கணவனுக்கு அவள் செய்த துரோகம்...''

''பிரசவ வேதனையில் துடிக்கும் அவள் இதைக் கேள்விப்பட்டால் என்ன ஆகும் தெரியுமா?''

''அந்தக் குழந்தையே என்னுடையதா என்ற சந்தேகம் வந்தபின்......''

''கோதண்டராமன் நீ அத்துமீறி ஓர் அபலைப் பெண் மீது அபாண்டமான பழியைச் சுமத்துகிறாய். இதில் நான் அதிசயப்பட எதுவுமே இல்லை. காலந்தொட்டு பெண் களுக்கு உன்னைப் போன்ற ஆண்கள் வழங்கும் நீதி இதுதான்னு நான் பல சமயங்களில் பலர் வாழ்க்கையைப் பார்த்துப் புரிஞ்சுண்டு இருக்கேன். இது தான் உன் முடிவா?''

''இதுதான் என் முடிவு... அவள் விழித்துக் கொண்டு என்னைப் பற்றி விசாரித்தால் தயக்கமில்லாம இதைச் சொல்லிவிடுங்கோ. அவளுடைய சாமான்கள் - மீதமுள்ள நகைகள் எல்லாவற்றையும் நீங்கள் வேண்டுமானால் வந்து சேகரித்துக் கொள்ளலாம். நான் தொடர்ந்து இந்த ஃபிளாட்டில் வசிப்பதாக யோசனையில்லை. வேறு இடம் பார்த்து விட்டேன்.

''ஆஸ்பத்திரி செலவுக்குண்டான பில்லை எனக்கு அனுப்பினால் அதை நான் கட்டி முடித்து விடுவேன். பிறகு என் வக்கீலிடம் ஏற்பாடு செய்து, சீதாவுக்கும் - குழந்தைக்கும் செலவுக்குத் தேவையான பணத்தை அவள் எங்கு விரும்புகிறாளோ, அங்கே அனுப்பி வைக்க முடியும்.''

''கோதண்டராமா! காதலித்து கைபிடித்து உன்னையே நம்பிண்டு இருக்கிற உன் மனைவியை நீ வேணுமானால் இப்படி வீம்பு பிடித்துக் கொண்டு உதற முடியும்? கொஞ்ச நாள் பழகினாலும் சீதாவை நான் என் பெண் போல நேசிக்கிறேன். அவளை என்னால் உதற முடியாது... நீ அவளது பிரசவ செலவுக்கோ - அவள் பிற்கால வாழ்க்கைக்கோ எதுவும் உதவாட்டாலும் பரவாயில்லை. நான் கவனிச்சுக்கிறேன்.



''அப்படி உன் பொண்டாட்டியை நான் நடுத் தெருவில் விடமாட்டேன். எனக்குன்னு குழந்தை குட்டி ஏதுமில்லை... சீதாவுக்கும் - அவள் குழந்தைக்கும் என் சொத்தில் ஒரு பிடி போட்டால் நான் ஒண்ணும் குறைஞ்சு போயிட மாட்டோன்...''

''தேவையில்லை. நானே அந்தப் பொறுப்பை ஏத்துக்கிட்டு பணம் அனுப்பி விடுகிறேன்...''

''கோதண்டராமா! உங்க ரெண்டு பேருடன் சிநேகம் செய்ய ஆரம்பிச்ச புதுசிலே நான் ரொம்ப ஆச்சரியப் பட்டேன். இந்தத் தம்பதிகள் உருவத்திலேயும், பேரிலும் எத்தனை பொருத்தமானவர்களா இருக்காங் கன்னு அதிசயப்பட்டேன்... அந்த இராமன் மனைவியைக் காட்டுக்கு அனுப்பி வச்சான்... நீயோ ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு கைகழுவி விட்டாய். நீயும்... ஒரு இராமன் தான்...'' பட்டென்று போனை வைத்தாள்.

சாரதாவின் உடல் உணர்ச்சி வசத்தில் ஆடியது. நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டது. இதென்ன கொடுமை! என்ற எண்ணத்தின் துயர பளுவில் கண்களில் நீர் முட்டிக் கொண்டது.

புராண காலத்திலிருந்து பெண்களுக்கு... ஆண் வழங்கும் தீர்ப்பு இப்படியா கொடுமையாக இருக்க வேண்டும்.

இராமன் என்று தெய்வமாகக் கொண்டாடப்படும் அந்த இராமன் என்ன செய்தார்? யாரோ சலவைத் தொழிலாளி சொன்ன ஒரு பழிச்சொல்லைக் கேட்டு விட்டு... தன் அருமை மனைவியை... காவியங்கள் புகழும் கதாநாயகியை... மகாலக்ஷ்மியின் அவதாரம் எனக் கருதும் சீதாபிராட்டியைக் கர்ப்பிணியான நிலையில் காட்டுக்கு அனுப்பினாரே! அதைவிடக் கொடுமையாக ஒரு சம்பவத்தை புராணத்திலே யாரும் காண முடியாது.

தன்னுடைய பிரஜைகளில் யாரும் தனது நியாயமான அரசாட்சியைப் பற்றிக் குற்றங்காணக்கூடாது என்று இராமன் அந்தக் காரியத்தை செய்ததாகப் புராணங்கள் விளக்கம் தரலாம்.

ஆனால் சீதையும் அவரது அரசாட்சியில் ஒரு குடி மகள் தானே. மனைவி என்று பார்க்காது மன்னன் தீர்ப்பளித்தான் என்றால்... மனைவி என்று பாராது சாதாரண ஒரு குடிமகளுக்கு இராமனைப் போன்ற கருணை மிக்க அரசன் ஒரு சந்தேகத்தின் பேரில் ஊரார் சொல்லும் ஒரு பழிசொல்லுக்காக அத்தனை ஒரு பெரிய தண்டனையை வழங்கியது நியாயமா?

அது புராண காலந்தொட்டு பெண்ணுக்கு ஆண் வழங்கிய கொடுமையின் முன்னோட்டம்.

துஷ்யந்த மகாராஜன் மட்டும் எந்த விதத்தில் உயர்ந்தவன். கந்தர்வ விவாகம் செய்துகொண்டுவிட்டு... கர்ப்பிணியாக வந்து நின்ற சகுந்தலையை... அரச சபையில் யாரோ ஒரு பரத்தை என்று அவமதித்து... விலக்கவில்லையா.



நள மகராஜன் அதைவிட ஒரு படி மேலாக நடந்து கொண்டதும் தெரிந்த கதைதான். காதலியைக் காரிருளில் கானகத்தில் கைவிட்ட பாதகன்... அவன் என்று - புலவர்களால் பாடல் பெற்றவன்!-

சே! இந்தக் கோதண்டராமனும்... இவர்கள் வரிசையில் ஒருவனாக வந்து நின்று விட்டானே.

இந்த உண்மையை சீதா அறிந்து கொண்டால்!...

திடீரென்று தன் கன்னங்களில் கண்ணீர் வழிவதை சாரதா உணர்ந்தாள். புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு - வெகுநேரம் உறக்கமின்றிப் படுக்கைமீது உட்கார்ந்திருந்தாள்.

மறுநாள் காலை... சீதாவுக்கு உண்மையாகவே பிரசவ வேதனை எடுத்து ஒரு சில மணி நேரத்தில் குறை மாதக் குழந்தையாக ஓர் ஆண் மகவு பிறந்தது.

குழந்தையைத் தனியாக வைத்து பாதுகாக்க நர்ஸ் எடுத்துக் கொண்டு சென்றபோது சீதா விம்மிவிம்மி அழுதாள்.

"டாக்டர் என் குழந்தை சீக்கிரம் பிறந்து விட்டதால்... கெடுதி ஏதாவது நேருமா. உயிருக்கு ஆபத்தில்லையே - டாக்டர்! அவனை எப்படியாவது காப்பாற்றிக் கொடுங்க. முதலில் பிறப்பது ஆணாக இருக்கணும்னு என் கணவர் ரொம்ப ஆசைப்பட்டார்" என்று தவித்தாள்.

சாரதாவுக்கு சீதாவின் நிலைமையைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது. உண்மையை மூடி மறைத்து எத்தனை நாள் காலத்தை ஓட்ட முடியும்?... ஆனால் அதை எப்படிச் சொல்வது என்று

கவலைப்பட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் அலைந்து கொண்டிருந்தாள்.

அன்று மாலை அவள் சீதாவுக்கு ஹார்லிக்ஸ் கலந்து பிளாஸ்க்கில் ஊற்றி எடுத்துக்கொண்டு - ஒரு பிளாஸ்டிக் பையில் சில சாத்துக்குடி வாங்கிப் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தாள்.

குறைமாதக் குழந்தையைப் பெற்றவள் - அந்தக் கேஸின் பாதிப்பால் குழப்பமான மன நிலையில் இருந்தாள் என்ற காரணம் பற்றி அவளை மருத்துவ மனையில் தனியறையில் வைத்திருந்தனர். கதவைத் தள்ளித் திறந்து கொண்டு சாரதா அம்மா நுழைந்தபோது திடுக்கிட்டுப் போனாள்.

சீதா படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்திருந்தாள் அவள் தலைமுடி அவிழ்ந்த அலங்கோலமாக முதுகில் புரண்டு கொண்டிருந்தது. முகத்திலே பேயறைந்து விட்டது போன்ற தோற்றம்.

பிளாஸ்க்கை மேஜை மீது வைத்து விட்டு... அருகிலிருந்த நாற்காலியில் அமரப்போன சாரதாவை அவள் கோபத்துடன் வெறித்தாள்.

''இத்தனை நாளும் எனக்கு உண்மையைச் சொல்லாமல் ஏன் மூடி மறைச்சு வச்சீங்க... ஒருநாள் இல்லாட்டி ஒரு நாள் தெரியப் போற கதைதானே... ஏன் உடனேயே சொல்லலை...'' என்று சிறிது கோபத்துடன் கேட்ட சீதா, தன் தலையணை அடியில் வைத்திருந்த கடிதத்தை எடுத்து... அவள் முன் விசிறிப் போட்டாள்.



சில சமயங்களில் பிரசவத்தின் பின் சில பெண்களுக்குப் பல காரணங்களினால்... பிரசவகாலப் பைத்தியம், அதாவது பியூர்புயூரல் மேனியா என்ற மனக்குழப்பம் ஏற்படுவதுண்டு...

''சிலர் இந்த நோயினின்று வெகு விரைவில் குணமடைந்து விடக்கூடும். ஆனால் வேறு சிலர் குணமடைய வெகு நாட்கள் கூட ஆகலாம். அதுவரை இவளை நாங்கள் இங்கேதான் நிறுத்திக் கொள்ள வேண்டியிருக்கும்.''

''அதிக நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்க நேரிட்டால் அதிகப் பணம் கட்டவேண்டுமென்றுதானே சொல்றீங்க? அதுக்கு நான் ஜவாப்பு. நாளைக்கு வேணுமானாலும் முன்னதாக ஒரு தொகையைக் கட்டிவிடறேன்.''

''தேவையில்லை. நீங்க பொறுப்பெடுத்துக் கொள்வதாக வாக்குறுதி கொடுத்ததே போதும்.''

உள்ளேயிருந்து சீதா நர்ஸிடம் அடங்காது இடக்கு பண்ணி அலறி அழுவதைக் கேட்ட சாரதா மனம் நொந்து போனாள்.

எப்படி சந்தோஷமாக இருந்த தம்பதிகள்! இப்படி ஒரு பயங்கரம் நிகழ்ந்து விட்டதே. யார் கண் பட்டதோ, எண்ணி எண்ணிப் புழுங்கினாள்.

சிறிது நேரம் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்துவிட்டு மிகவும் மனம் சோர்ந்தவளாகத் திரும்பினாள்.

## 5

சாரதாவுக்கு அதற்குப்பின் நிற்கப் பொழுது இருக்கவில்லை. ஆஸ்பத்திரிக்கும், வீட்டிற்கும் இடையே அலைவது போதாதென்று சீதாவைப் பற்றிய தகவலை அவளது பெற்றோருக்கு அவ்வப்போது தொலைபேசி மூலமும் அறிவிக்க வேண்டியிருந்தது.

சீதாவை தான் கவனித்துக் கொள்வதால் அவளது தாய் தன் நோயாளிக் கணவரை விட்டு வரத் தேவையில்லை என்று சொல்லி விட்டிருந்தாள்.

கோதண்டராமனின் தாய் ஒருமுறை மருமகளைப் பார்க்க வந்து போனாள்... தன் பிள்ளை செய்துவிட்ட தவறான காரியத்தைப் பற்றி மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டு அந்தம்மாள் அழுது புலம்பிவிட்டுப் போனாள்.

கோதண்டராமன் தான் கூறியபடியே வக்கீல் மூலம் சீதாவின் சாமான்கள் கொண்ட இரு தோல் பெட்டிகளையும் ஆஸ்பத்திரிக்குண்டான தொகைக்கு ஒரு டிராப்டை சாரதா அம்மாள் பெயரிலும் அனுப்பியிருந்தான்.

அவைகளைப் பெற்றுக்கொண்டு வக்கீலின் உத்திரவுப்படி விவரமானதொரு இரசிதை, தயாரித்து அனுப்பி வைக்க வேண்டியதொரு வேலையும் கூடியது.

நகரத்திலேயே தங்கிக் கொண்டு இப்படியா ஒரு இரும்பு மனம் படைத்தவனாக இருப்பான்...? என்ற அதிசயத்தில் ஒருநாள் அவள் கோதண்டராமன் அலுவலகத்திற்குப் போன் செய்தாள்.



''மிஸ்டர் கோதண்டராமனா அவர் இங்கே இல்லையே? எங்கள் கல்கத்தா கிளை அலுவலகத்திற்கு மாற்றலாகிப் போய் விட்டாரே? முகவரி வேண்டுமா? ஆமாம் நீங்க அவருக்கு...?'' மறுபக்கத்தில் இனிய குரலில் குழைந்தாள் ரிஸப்ஷனிஸ்ட்.

''நான் அவருக்கு ரொம்ப நெருங்கிய உறவுக்காரி'' பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு மென்மையாகச் சொன்னாள் சாரதா.

ரிஸப்ஷனிஸ்ட் வேகமாகச் சொன்ன முகவரியைக் குறிப்பேட்டில் எழுதி வைத்துக்கொண்டு தொலைபேசியை வைத்தாள்.

வெகு நேரம் அவளது ஆத்திரம் அடங்கவில்லை.

இரண்டு தினங்களுக்குப்பின் அவள் வழக்கம்போல சீதாவைப் பார்த்து வர அந்த மருத்துவமனைக்கு, பார்வையாளர் நேரத்தின்போது சென்றாள்.

மருந்துகளினால் சதா அரைத் தூக்கத்திலே படுக்கையில் கிடந்த சீதா திடீரென்று கண்களைப் பரக்க விழித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

''நீங்க சாரதா அம்மாதானே?'' என்று கேட்டபடி அவள் தன்னை உற்றுப் பார்த்தபோது மெய்சிலிர்த்துப் போனாள் சாரதா.

நோயாளி தன் அருகே உள்ளவர்களை அடையாளம் காணத் தொடங்கி விட்டால், அது நோய் குணமாவதின் அறிகுறி என்று டாக்டர் ரேவதி முன்னதாகவே சொல்லியிருந்தாள்.

''ஆமாம் உன் சாரதா அம்மாதான்... சீதா, இப்போ எப்படியம்மா இருக்கே...'' ஆனந்தத்துடன் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டு முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

சீதா சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பின்னர் மெல்லிய குரலில் பேசினாள்.

''சாரதாம்மா! இப்போது எனக்கு மெள்ள எல்லாம் ஞாபகத்துக்கு வரது. என் நினைவுகளை புகை மண்டலம் போல ஏதோ ஒரு தடுப்பு மறைச்சிட்டிருந்தது. அதெல்லாம் மெள்ள கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந் திட்டதாலே என்னால் நினைச்சுப் பார்க்க முடிகிறது'' மிக்க மகிழ்ச்சியுடன் எதிரே தெரிந்த ஜன்னல் வழியாக நீல வானத்தைப் பார்த்தாள்... கண்ணீரில் அவளது கண்கள் பளிச்சிட்டன.

''மெதுவாம்மா... அவசரப்படாம மெதுவா நினைச்சுப்பார்.'' கட்டுக்கொள்ள முடியாத ஆனந்தத்தில் சாரதா, கலைந்து போன அவளது தலைமுடியை மெல்ல கோதி விட்டாள்.

''குழந்தை எப்படியிருக்கான் சாரதாம்மா. இந்த ஆஸ்பத்திரிக்கு நான் வந்து எத்தனை நாளாச்சு?''

''பிரசவத்திற்காக உன்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தோம். இன்றோட ரெண்டு மாசமாகிறது.

''ரெண்டு மாசமா? சில நிமிஷங்கள் போல இருக்கே. என் குழந்தையைக் கொண்டு வரச் சொல்லுங்கோ - பார்க்க ஆசையா இருக்கும்மா.''

அவளது கன்னத்தில் வழிந்த கண்ணீரை மெல்ல துடைத்து விட்டாள் சாரதா... அவளது கண்களும் கலங்கிப் போயிருந்தன.



''கவலைப்படாதே... நீ சொன்னபடி கௌதம்னு பேர்வச்சு, பிறந்த நேரம் தேதி எல்லா விவரத்தையும் தெரிவிச்சு பிறப்புப் பதிவு செய்து விட்டிருக்கிறேன். நாளைக்கு இவனுக்கு கல்யாணம் செய்யனும்னா ஜாதகம் கணிக்கணுமே. அதனால நட்சத்திரம் ராசி இதெல்லாம் குறிச்சு வச்சிருக்கேன்... அமெரிக்காவுக்குப் படிக்கப் போனா பர்த் சர்டிபிகேட் வேணுமே. அதுக்காக பிறப்புப் பதிவு செய்திருக்கேன்.''

''கௌதம்கிற பேரையே வச்சிருக்கீங்களா அம்மா?''

''அந்தப் பேர் வைக்கப் போறேன்னு ஆசையா என் கிட்ட சொல்லிண்டு இருந்தியே.''

''அவர் அந்தப் பேரை வைக்கனும்னு ஆசைப் பட்டார். அவர் விருப்பப்படியே ஆண் குந்தையானால் கௌதம், பெண் ஆனால் மீரான்னு வைக்க ஒப்புக் கொண்டேன். அவர், அவர் தான்'' மிடறு விழுங்கிக் கொண்டு நீர் மல்கிய கண்களால் நிமிர்ந்து பார்த்தாள் சீதா.

''இதுதானே ஆகாதுன்னு சொன்னேன்... இப்படி நீ அழுகிறதாக இருந்தால் குழந்தையைக் கொண்டு வந்து காட்டச் சொல்லமாட்டேன்... உடம்பு குணமாகி சீக்கிரம் வீடு திரும்பணும்னு எத்தனை ஆவலா நானிருக்கேன்.''

''நீங்க சொல்றபடி கேட்கிறேன் சாரதாம்மா, கேட்கிறேன். என் குழந்தையைக் கொண்டு வரச் சொல்லுங்கோ'' கெஞ்சினாள் சீதா.

நர்ஸ் கொண்டு வந்து காட்டிய தன் மகனைக் கண்டதும் சீதா கைகளை நீட்டி வாங்கி மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

''இத்தனை நாள் அம்மாகிட்டே இல்லாம எங்கேடா போயிருந்தே படுவா'' என்று கொஞ்சினாள்.

''சாரதாம்மா இவனோடு என்னை வீட்டுக்கு அழைச்சிட்டுப் போரேன்னு சொன்னீங்களே... வீடுன்னு இப்போ எனக்கு'' என்று அவள் திக்கியபோது, சாரதா விரைந்து அருகில் வந்து படுக்கைமீது உட்கார்ந்து அவளை ஆதரவுடன் அணைத்துக் கொண்டாள்.

''சீதா, என் வீடு உன் வீடு புரிகிறதா? நீ என் மகள். நான் இந்த கௌதம் பயலுக்குப் பாட்டி... சரிதானே. நீ மனசை அலட்டிக்காம சமத்தா இருக்கணும். சரிதானே'' என்று பரிவுடன் பெற்ற பெண்மீது தாய் கொள்ளும் பாசத்துடன் அவளது கன்னத்தை வருடினாள்.

ஆஸ்பத்திரியிலிருந்து குழந்தையுடன் சாரதாவின் ஃபிளாட்டிற்கு வந்து தங்கிய சீதா சில தினங்களில் நல்ல மனத்தெளிவும், உடல் பலமும் பெற்றுவிட்டாள்.

நடந்த அனைத்தையும் அவள் எவ்விதக் குழப்பமுமின்றி துல்லியமாக நினைத்துப் பார்க்க முடிந்தது. தன் கணவனது கடிதத்தைப் பற்றியும் அவன் எடுத்து முடிவைப் பற்றியும் அவள் சாரதாவுடன் மனம் விட்டுப் பேசினாள்.

''பெற்ற மகளைப்போல நான் உன்னை நேசிக்கிறேன். நீ என் பேச்சைக் கேட்பியா சீதா...'' ஒரு நாள் காலை சாரதா சட்டென்று கேட்டாள்.

''உங்க ஆதரவில் உங்க வீட்டில் நானும், என் மகனும் தங்கியிருக்கோம். உங்க பேச்சைக் கேட்க மறுப்பேனா...''



''ஓரளவுக்குத்தான் நான் ஆதரவா இருக்கேன். உங்க ரெண்டுபேர் செலவுக்கும் கோதண்டராமன் பணம் அனுப்பி விடுகிறான். ஆனால் நிலைமை இப்படியே இருக்கக்கூடாது. ஒரு பெண் எந்த நிலையிலும் தன்னைத் தானே காத்துக் கொள்ளும் திறமையை மேற் கொள்ளணும்.''

''என்ன செய்யச் சொல்றீங்க... நான் அதுபடி நடக்கிறேன்.''

''உனக்கு பி.ஏ. பட்டத்துடன் தட்டெழுத்து - சுருக்கெழுத்து இரண்டிலும் பயிற்சி உண்டல்லவா?''

''கல்யாணத்துக்கு முந்தி சும்மா தெரிஞ்சு வச்சுக்கலாம்னு இவைகளைக் கத்துத் தேர்ந்தேன்.''

''நீ அதிர்ஷ்டவசமாக தட்டெழுத்து சுருக்கெழுத்து தேர்ந்திருக்கிறாய்... அது உனக்கு இப்போ உதவப் போகிறது.''

''என்ன சொல்றீங்க?''

''நான் நம்ப காவல்துறை அதிகாரி ரங்கநாதன் கிட்டே பேசினேன். தட்டெழுத்து சுருக்கெழுத்தில் தேர்ச்சி இருந்தால் தனக்குத் தெரிந்த ஒரு மருத்துவ மனையின் இரத்தப் பரிசோதனைப் பிரிவில் ஒரு கணக்கராக வேலை வாங்கித் தர முடியும் என்று சொல்கிறான். ஆரம்பத்தில் மாதம் நானூறு ரூபாய் கிடைக்கும். இப்போ உன் விஷயத்தில் பணம் முக்கியமல்ல. கோதண்டராமன் ஒரு வருஷம் கழித்து விவாகரத்து கோரி, பிறகு உனக்கு மாதா மாதம் அனுப்பும் தொகையைச் சரிவர அனுப்பாது இருந்துவிட்டால், உன்னையும் குழந்தையையும் நீ பாதுகாத்துக் கொள்ள

வேண்டும் இல்லையா? உன் பிறந்த வீடு உன்னை வைத்துப் போஷிக்க முடியாத நிலையில் இருப்பதால் உன்னை நீயே காத்துக் கொள்ள வேண்டாமா?''

''நீங்க சொல்றபடி அந்த வேலை கிடைச்சா ஏத்துக்கிறேன் - குழந்தை இருக்கானே?''

''அவனைப்பத்தி கவலைப்படாதே - நாள் முழுதும் தனியா இருந்து நான் ரொம்பத் தவிச்சுப் போனேன். எனக்கு இப்போ ஒரு பேரன் கிடைச்சிருக்கான் - அவனை நான் உனக்காகப் பார்த்துகிறேன்.''

ஒரு சில தினங்களில் அவள் அந்த வேலையை மேற்கொண்டாள்.

''வேலைக்குப் போய் வருவது சீதாவுக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது - ஆரம்ப நாட்களில் கொஞ்சம் சிரமப்பட்டாள் - ஆனால் பழக்கமானதும் தன்னாலும் சம்பாதிக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்தபோது அந்த உணர்வு தந்த தெம்பு அவளை முற்றிலும் புதிய பெண்ணாக மாற்றி விட்டது.

மாலை வீட்டுக்குத் திரும்பும்போது மட்டும் அவளால் ஆவலைக் கட்டுப்படுத்தவே முடியாது.

சாரதா கதவைத் திறந்தவுடன் காற்றாக உள்ளே பாய்ந்து மகனைத் தொட்டிலிலிருந்து வாரி எடுத்துக் கொள்வாள்.

''இன்னிக்கு இந்தப் போக்கிரி என்ன செய்தான், உங்களுக்கு ரொம்ப தொந்திரவு கொடுத்தானா?''

''பல்லு முளைச்சுப் போச்சா - இந்தக் கிழவியைப் படாத பாடு படுத்தறான் - தோள் பட்டையை நறுக்குனு கடிக்கிறான்.'' சாரதா சொல்ல பெருமையும் மகிழ்ச்சியு



மாக மார்புடன் அவனை அணைத்துக்கொண்டு கொஞ்சுவாள்.

நாட்கள் நகர்ந்தன - கௌதம் சுவற்றைப் பிடித்துக் கொண்டு நடப்பதைப் பார்த்து மகிழ்ந்தாள் சீதா. தத்திதத்தி அவன் வீடு முழுவதும் நடக்க முயன்று கீழே விழுவதைக் கண்டு இருவருமே மகிழ்ந்தனர்.

தாத்தா, அத்தை என்று பேச ஆரம்பித்தவன் அம்மா, அப்பா என்று பேசத் தொடங்கியபோதுதான் சீதா மனம் வருந்தினாள் - அந்த அப்பா குழந்தைக்கு ஒரு வயது ஆகியும் ஒரு முறைகூட, அவன் கதி என்ன ஆயிற்று - எங்கே இருக்கிறான் - எப்படி வளர்கிறான் என்று எதையும் தெரிந்து கொள்ள விரும்பவில்லையே?

சீதாவை அவன் வெறுக்கட்டும். பரவாயில்லை. அவனது மகனைக் கூடவா அவன் வெறுக்க வேண்டும். சில இரவுகளில் சீதா சாரதாவுக்குத் தெரியாமல் தலையணை நனைய கண்ணீர் சிந்தி அழுதாள்.

மறுநாள் கௌதமின் பிறந்தநாள் - அவனுக்குத் தன் பரிசாகப் புது சட்டை, பொம்மைகளை வாங்கவும், அப்படியே பாதாம் அல்வா செய்யக் கொஞ்சம் பாதாம் பருப்பு வாங்கி வரவும் நகரத்தில் பிரபலமான அந்த சூப்பர் மார்க்கெட்டிற்குள் நுழைந்தாள் சாரதா.

ஒரு வயதை அடைந்துவிட்ட கௌதம் நல்ல கவனிப்பாலும் போஷணையான உணவாலும் கிண் என்று இருந்தான். நட்சத்திரங்களைப் போன்று மின்னிய கண்களும், சுருண்ட முடியும், உப்பிய கன்னங்களுமாக தங்க விக்கிரகம் போலிருந்த அந்தக் குழந்தையைப் பார்த்த யாரும் சட்டென்று ஈர்க்கப்பட்டு அருகில் வந்து

''என்னடா பாப்பா! என்ன சிரிக்கிறே'' என்று கன்னத்தைக் கிள்ளிக் கொஞ்சத்தான் ஆசைப்பட்டனர்.

கௌதம் அந்நியரைக் கண்டதும் அலறி அழும் குழந்தையல்ல - அரிசிப் பற்களைக் காட்டிக் கொண்டு, துள்ளிக் குதித்து சிரித்தபடி, பிறர் கைகளில் தாவி விளையாட ஆசைப்படும் ஆரோக்கியமானதொரு குழந்தையாக இருந்தான் - பழக்கடைக்காரன் அவனைப் பார்த்து விட்டால் போதும் ஒரு ஆப்பிளைத் தூக்கி அவனிடம் இனாமாகத் தந்து விடுவான்.

சூப்பர் மார்க்கெட்டில் பணம் செலுத்தும் கவுண்டர் அருகே இருக்கும் முதியவர் அவனைப் பார்த்தால் ஒரு லாலிப்பாப்பை எடுத்து ஆசையோடு அவன் கையில் கொடுக்க மறக்கவே மாட்டார்.

வேலைக்காரியிலிருந்து தெருவில் போவோர் வருவோரை ஈர்த்துக் கொண்டு சாரதாவின் மனதிலே ஆனந்தத்தை நிறைத்த ஓர் அழகான குழந்தையாக அவன் வளர்ந்திருந்தான்.

சாமான்களை வாங்கி முடித்தபின் தன் மணிபர்சை எடுக்க தோள்பையைத் திறக்க வேண்டி இடுப்பிலிருந்து குழந்தையைச் சற்று இறக்கிவிட்டுத் திரும்பினாள். அவ்வளவுதான் - குழந்தை தத்தித் தத்தி நடைபோட்டுக் கொண்டு வாயிற் கதவைத் தாண்டி வெளியே சென்று மறைந்து விட்டான்.

கம்பெனி காரியமாக மானேஜிங் டைரக்டரை அன்று மாலை கோதண்டராமன் அவரது பங்களாவில் சந்திக்க வேண்டியிருந்தது. முதல் முதலாக அவரது



பங்களாவிற்குப் போக நேரிட்டதால் வெறும் கையுடன் போக விரும்பாது, ஒரு பிஸ்கட் டின் வாங்கிப்போக அந்த ஸூப்பர் மார்க்கெட்டிற்குள் நுழைந்தவன் வராந்தாவிலே தன்னந்தனியே ஒரு குழந்தை தத்தி நடந்து கொண்டு வருவதைக் கண்டு திடுக்கிட்டுப் போனான்.

யார் இப்படிக் குழந்தையைத் தனியே விட்டுவிட்டு ஷாப்பிங் மும்முரத்தில் இருப்பது. என்ன முட்டாள்தனம். வராந்தா ஓரத்திலே வந்துவிட்ட குழந்தை இன்னும் ஒரு அடி வைத்தால் அந்தப் படிகளில் விழுந்து பலத்த காயம் அடைந்து விடுவானே. யார் பெற்ற குழந்தையோ? எத்தனை அழகு. ஓடிச்சென்று கௌதமை வாரி எடுத்துக் கொண்டான்.

''இந்தக் குழந்தையைத்தான் அவன் பாட்டி தேடிக்கிட்டு இங்குமங்கும் கடைக்குள்ளேயே அலைய றாங்க ஸார். அதோ அந்தப் பச்சை சேலை கட்டிக்கிட் டிருக்காங்களே அவங்கதான். கொண்டு கொடுங்கோ. கிழவி ஒரு நிமிஷத்தில் அலறிட்டாங்க'' என்று காக்கி உடை அணிந்த கடைப்பையன்களில் ஒருவன் வந்து பதைப்புடன் சொன்னான்.

பின்புறம் மட்டுமே தெரிந்த அந்த நரைத்த தலைக்கிழவி மீது அவனுக்குப் பொல்லாத கோபம் வந்தது.

குழந்தை முக்கியமா, சாமான்கள் முக்கியமா? வெகுண்டவனாக, ''அம்மா, பிடியுங்கோ உங்க பேரனை'' என்று அதட்டியபடி குழந்தையை இரு கைகளிலும் பற்றியபடி நீட்டினான்.

''குழந்தையை நீங்க கண்டுபிடிச்சுட்டேளா?'' பழக்கமான அந்தக் குரலைக் கேட்டு அதிர்ந்தவன் முன் சாரதா திரும்பி நின்றாள்.

''கௌதமை சட்டென்று வாரி அணைத்துக் கொண்டாள். யார் கோதண்டராமனா?'' வியப்புடன் கேட்டு விட்டு அவனை உற்றுப் பார்த்தாள்.

இந்த ஒரு வருஷத்தில் ஆள் எப்படி மாறிப் போயிருக்கிறான்? தாடியும் மீசையுமாக பாதியான உடம்பும், எதையோ பறிகொடுத்தவன் போலக் கண்களில் ஏக்கமுமாக எப்படி இருந்தவன் இப்படியாகி விட்டான். குற்ற உணர்வு நெஞ்சை அடைக்க கோதண்டராமன் அடிக்குரலில் கேட்டான்.

''சாரதாம்மா. யாருடைய குழந்தை இவன்?''

வெடுக்கென்று நிமிர்ந்து பார்த்தாள் அவள். ''உன் குழந்தையை உனக்கு அடையாளம் தெரியலையா? எப்படித் தெரியும். பிறந்த தினத்திலிருந்து நீதான் பார்க்கலையே.'' மெல்லிய குரலில் பேசினாலும் அந்த வார்த்தைகள் ஈட்டியாக நெஞ்சைத் தாக்க அதிர்ந்து போனான்.

அந்தப் பொடிப் பயல் அவனது குழந்தையா? முத்தமிட வேணும் போன்று ஆவலைத் தூண்டும் கன்னங்கள் உடைய அந்த அழகிய குட்டிப் பயல் அவனுடைய குழந்தையா?

''என் குழந்தையா இவன்?'' தாங்க முடியாத ஆவலில் அவளது இடுப்பிலிருந்து குழந்தையை வாரித் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். கடையின் நடுவிலே பலர் பார்க்கும் ஒரு பொது இடத்திலே



நிற்கிறோம் என்ற நினைப்பு இன்றி, ஆனந்தமும் துக்கமும் நெஞ்சைப் பொடியாக்க, கண்களில் நீர் மாலையாக வழிய, தன் மகனை மார்போடு அணைத்துக்கொண்டு அந்தக் குண்டுக் கன்னங்களில் முத்தமாரி பொழிந்தான்.

''கடை வராந்தாவில் ஒரு பக்கம் நின்று பேசலாமா?'' சாரதா முன்னால் விரைய, அவன் குழந்தையை அணைத்தபடி பின் தொடர்ந்தான். ''குழந்தையை எடுத்துக் கிட்டு நீங்க கடைப் பக்கம் வந்திருக்கீங்களே?'' அவன் கேள்வியில் தொக்கி நின்ற அர்த்தத்தை சாரதா நன்றாகப் புரிந்து கொண்டாள். ஆனாலும் அவனை எதிர்பார்ப்பிலே ஒரு கணம் தவிக்க வைக்க வேண்டும் என்ற ஆவல்.

''நாளைக்கு கௌதமின் பிறந்தநாள். அவனுக்கு சட்டை, பாண்ட் வாங்கினேன். சீதா நாளைக்கு லீவு எடுத்துக் கொண்டு வீட்டில் இருப்பாள். அதனால் கொஞ்சம் பாதாம் அல்வா செய்யத் தேவைப்பட்டதை வாங்கக் கடைக்கு வந்தேன்.''

''அப்படின்னா சீதா?''. அவன் முடிக்குமுன் கௌதமை அவனிடமிருந்து சட்டென்று வாங்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள் சாரதா. ''இந்தக் குழந்தையையும், தன்னையும் காத்துக்கொள்ள அவள் வேலைக்குப் போய் வருகிறாள். இப்ப சத்தியா இந்த ஒரு வருஷமா என்னோட இருக்கிறாள். ஏன் கேட்கிறே?''

''நான் அவளைப் பார்க்க விரும்பறேன். உங்க வீட்டுக்கு வரலாமா'' - மிகவும் கெஞ்சிக் கேட்டான்.

''குழந்தையை நீங்க கண்டுபிடிச்சுட்டேளா?'' பழக்கமான அந்தக் குரலைக் கேட்டு அதிர்ந்தவன் முன் சாரதா திரும்பி நின்றாள்.

''கௌதமை சட்டென்று வாரி அணைத்துக் கொண்டாள். யார் கோதண்டராமனா?'' வியப்புடன் கேட்டு விட்டு அவனை உற்றுப் பார்த்தாள்.

இந்த ஒரு வருஷத்தில் ஆள் எப்படி மாறிப் போயிருக்கிறான்? தாடியும் மீசையுமாக பாதியான உடம்பும், எதையோ பறிகொடுத்தவன் போலக் கண்களில் ஏக்கமுமாக எப்படி இருந்தவன் இப்படியாகி விட்டான். குற்ற உணர்வு நெஞ்சை அடைக்க கோதண்டராமன் அடிக்குரலில் கேட்டான்.

''சாரதாம்மா. யாருடைய குழந்தை இவன்?''

வெடுக்கென்று நிமிர்ந்து பார்த்தாள் அவள். ''உன் குழந்தையை உனக்கு அடையாளம் தெரியலையா? எப்படித் தெரியும். பிறந்த தினத்திலிருந்து நீதான் பார்க்கலையே.'' மெல்லிய குரலில் பேசினாலும் அந்த வார்த்தைகள் ஈட்டியாக நெஞ்சைத் தாக்க அதிர்ந்து போனான்.

அந்தப் பொடிப் பயல் அவனது குழந்தையா? முத்தமிட வேணும் போன்று ஆவலைத் தூண்டும் கன்னங்கள் உடைய அந்த அழகிய குட்டிப் பயல் அவனுடைய குழந்தையா?

''என் குழந்தையா இவன்?'' தாங்க முடியாத ஆவலில் அவளது இடுப்பிலிருந்து குழந்தையை வாரித் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். கடையின் நடுவிலே பலர் பார்க்கும் ஒரு பொது இடத்திலே



நிற்கிறோம் என்ற நினைப்பு இன்றி, ஆனந்தமும் துக்கமும் நெஞ்சைப் பொடியாக்க, கண்களில் நீர் மாலையாக வழிய, தன் மகனை மார்போடு அணைத்துக்கொண்டு அந்தக் குண்டுக் கன்னங்களில் முத்தமாரி பொழிந்தான்.

''கடை வராந்தாவில் ஒரு பக்கம் நின்று பேசலாமா?'' சாரதா முன்னால் விரைய, அவன் குழந்தையை அணைத்தபடி பின் தொடர்ந்தான். ''குழந்தையை எடுத்துக் கிட்டு நீங்க கடைப் பக்கம் வந்திருக்கீங்களே?'' அவன் கேள்வியில் தொக்கி நின்ற அர்த்தத்தை சாரதா நன்றாகப் புரிந்து கொண்டாள். ஆனாலும் அவனை எதிர்பார்ப்பிலே ஒரு கணம் தவிக்க வைக்க வேண்டும் என்ற ஆவல்.

''நாளைக்கு கௌதமின் பிறந்தநாள். அவனுக்கு சட்டை, பாண்ட் வாங்கினேன். சீதா நாளைக்கு லீவு எடுத்துக் கொண்டு வீட்டில் இருப்பாள். அதனால் கொஞ்சம் பாதாம் அல்வா செய்யத் தேவைப்பட்டதை வாங்கக் கடைக்கு வந்தேன்.''

''அப்படின்னா சீதா?''. அவன் முடிக்குமுன் கௌதமை அவனிடமிருந்து சட்டென்று வாங்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள் சாரதா. ''இந்தக் குழந்தையையும், தன்னையும் காத்துக்கொள்ள அவள் வேலைக்குப் போய் வருகிறாள். இப்ப சத்தியா இந்த ஒரு வருஷமா என்னோட இருக்கிறாள். ஏன் கேட்கிறே?''

''நான் அவளைப் பார்க்க விரும்பறேன். உங்க வீட்டுக்கு வரலாமா'' - மிகவும் கெஞ்சிக் கேட்டான்.

தான் பெற்ற குழந்தையைக் கண்டதும் மனிதன் எப்படி ஆடிப் போய்விட்டான் - சாரதா புரிந்து கொண்டு விட்டாள். புரியாதது போலப் பேசினாள்.

உனக்கு ஒரு சங்கதி தெரியுமா? அந்தக் கேஸ் நடந்த சமயம் நம் பக்கம் ஒரு சாட்சியாகி விட்டிருக்கும் ஒரு கடிதம் பாக்யாவிடமிருந்தது. கோர்ட்டில் அதை வெளியிடாவிட்டாலும் உன்னிடம் நான் கொடுத்துப் படிக்க சொல்லியிருந்தால் இந்த சிக்கல் ஏற்பட்டிருக்காது. அந்தப் பெண் பாக்யா அந்தச் சமயம் காமாலைக் காய்ச்சலில் ஆஸ்பத்திரியில் இருந்தாள். கடிதத்தைப் பற்றியே மறந்து போனாள். சில நாட்களுக்கு முன் தான் வந்து கொடுத்தாள். அதை நீ அவசியம் படிக்கணும்.''

''தேவையில்லை. எனக்கு சீதாவைப் பார்த்தால் போதும்'' திணறினான் அவன்.

''நீ வீட்டுக்கு வருகிறதைப் பத்தி எனக்கு மறுப்பே கிடையாது. நாளை காலையில் வந்தால் சவுகரியமாக இருக்கும். வரட்டுமா?'' என்றபடி வேண்டுமென்றே அவனது பார்வையினின்று விலகி வேகமாக நடந்தாள். கொஞ்சதூரம் சென்றபின் திரும்பிப் பார்த்தாள். பித்தம் பிடித்தவன் போன்று அவன் அங்கேயே நின்று கொண்டு இருப்பதைக் கண்டு அவள் தன்னுள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

சீதாவின் பிரச்சினைக்கு ஒரு முடிவு வந்து விட்டதில் அவளுக்குத்தான் என்ன ஆனந்தம்?

அன்று காலை விடியுமுன்பே எழுந்து குளித்து விட்டு மாற்றுடை அணிந்து கொண்டு பரபரப்புடன் சமையலைக் கவனிக்கத் தொடங்கினாள் சீதா.



சாரதா குழந்தையுடன் அருகிலிருந்த விநாயகர் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்துவிட்டு பிரசாதக் கூடையுடன் திரும்பினாள்.

தான் வாங்கிய பரிசுப் பொம்மையைக் குழந்தை யிடம் கொடுத்தபோது சீதா அன்புடன் கடிந்து கொண்டாள். ''புதிய உடைகள் வாங்கி பரிசாகத் தந்திருக்கீங்க. இந்தப் பொம்மை வேறு எதற்கு? ரொம்ப செல்லம் கொடுத்து உங்கப் பேரனைக் கெடுக்கிறீங்க.''

''இரு அவசரப்படாதே. இவனுக்கு இன்னும் ஒரு பெரிய பரிசு காத்துண்டு இருக்கு'' சாரதா லேசாக சிரித்தாள்.

வாயில் அழைப்புமணி ஒலிப்பதைக் கேட்டுத் திரும்பினாள் சீதா. யாராக இருக்கும். கீரைக்காரி கூட வந்து விட்டுப் போய் விட்டாளே?''

''எனக்கு அலுப்பா இருக்கு. நீதான் போய்ப் பாரேன்'' என்றபடி சாரதாம்மா குழந்தையைத் தூக்கிக் கொண்டு நின்றாள்.

சீதா இப்பொழுது எல்லாம் கதவில் பதித்துள்ள கண்ணாடியைப் பாராது கதவைத் திறப்பதேயில்லை.

கண்ணாடி வழியே பார்த்தவள் திகைத்துப் போனாள்.

''சாரதாம்மா அவர்... அவர் வந்திருக்கார்'' என்று குழறினாள்.

''கதவைத் திறந்து உள்ளே வரச் சொல்லேன். என்கிட்டே வந்து சொன்னா?'' அதட்டினாள் சாரதா.

கதவைத் திறந்தவுடன் உள்ளே நுழைந்த கோதண்டராமன் கையில் கொண்டு வந்த பரிசுப் பொட்டலங்களை மேஜைமீது வைத்தான்.

''சாரதாம்மா என்னை முதலில் நீங்க மன்னிச்சேன்னு சொல்லணும்... உங்களைப் போல ஒருத்தருடைய சிநேகிதம் எங்களுக்குக் கிடைச்சது ரொம்பப் பெரிய பாக்கியம். இல்லாட்டா என் சீதா என்ன கதியாயிருப்பாளோ'' என்றபடி கீழே குனிந்து சாரதாவின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டவன், தாங்க முடியாத துயரத்தில் ''சீதா உன்னை நான் நம்பறேன் சீதா'' என்று அலறியபடி அவளருகே வந்தான்.

சாரதா சட்டென்று நகர்ந்து விட்டாள். ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டு அழுகையில் குலுங்கும் அந்தக் காட்சியைப் பாராது அப்பால் நின்ற போதிலும் அவளும் அழுதாள். ஆனந்தத்தில் அழுதாள்.

''அடுப்பில் என்னவோ காந்தரது. உன் பிள்ளையைப் பிடிக்கிறியா'' என்று கேட்ட சாரதாவிடம் ஓடி வந்தான் கோதண்டராமன்.

''நான் எத்தனை பெரிய பிசகு செய்துவிட்டேன் அம்மா. நீங்க மட்டும் உதவி செய்யாட்டா'' தழதழத்த படி மகனை வாரிக்கொண்டான்.

''ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண் செய்ய வேண்டிய உதவி; சமூகத்திலே ஓர் அங்கமாக இருக்கிற ஒவ்வொருவரும் மத்தவங்களுக்குச் செய்ய வேண்டிய கடமை; அதைத்தான் செய்தேன். இந்தச் சமயத்திலே ஒண்ணு சொல்லத் தோணுது. சொல்லட்டுமா?''

''சொல்லுங்க அம்மா - எது சொன்னாலும் அதை நான் கேட்கத் தயார்.''



''புராண காலத்து சீதா. முடிவில் தன் கணவனை மன்னிக்கலை. கோபத்துடன் பூமியைப் பிளந்துண்டு பிரிஞ்சு போயிட்டா - ஆனால் இந்த சீதா உன்னை எப்பவோ மன்னிச்சிட்டா. ஏன் தெரியுமா? தன் குழந்தை ஒரு நல்ல வாலிபனாகும் வரை அவனுக்குத் தந்தையின் துணையும் தேவைன்னு உன்னோட எப்பக் கூப்பிட்டாலும் வாழத் தயாரா இருந்தா. நீ தன்னந்தனியா இத்தனை நாள் வெளியூரிலே இருந்தாலும் உன்னைப் பத்தி அவ தவறாகவே நினைக்கலை. எப்பவும் நீ அவளுடைய கோதண்டராமனாகத்தான் இருந்தே. ஆனால் அவள்தான் உன் கண்களில் வித்தியாசமாகப் பட்டா.''

''ரொம்ப தப்பு செய்துட்டேன்... ஆணவத்தினால் எங்க வாழ்க்கையையே அழிச்சுக்கப் பார்த்தேன்.''

''ஆணுக்கு ஒரு நீதி. பெண்ணுக்கு ஒரு நீதி என்ற கண்ணோட்டத்திலே பார்க்கும் நம் சமுதாயம் இன்னும் திருந்தலைங்கறதை நிரூபிச்சுட்டே... போகட்டும்... அது பழைய கதை. சீதாவை அழைச்சுண்டு போகப்போறே. இன்னிக்கு வெள்ளிக்கிழமை. அதனால இந்தப் பெண்ணை என் வீட்டிருந்து உன்னோட அனுப்ப மாட்டேன்.''

''எப்ப அனுப்ப பிரியப்படுகிறீர்களோ அப்போ அழைச்சுட்டுப் போறேன். உங்க ஆசீர்வாதமும் அன்பும் இருந்தால் போதும்.''

''பேசிக் கொண்டே இருக்கோமே, வீட்டுக்கு வந்திருக்கும் மாப்பிள்ளைக்கு பாதம் அல்வாவோட காப்பி, டிபன் தர வேண்டாமா? சீதா சீக்கிரம் தட்டுகளை எடுத்து மேஜை மேலே வை. இந்தப் பொடியனை

சமாளிக்கிறதுக்கு ரெண்டு பேர் வேணும் போலிருக்கே" சாரதா சிரித்தபடி உத்தரவிட சீதா மகிழ்ச்சியுடன் சிரித்தாள். கோதண்டராமன் தன் குழந்தையைப் பெருமை யுடன் பார்த்துச் சிரித்தான்.

பூஜையறையில் புகைந்து கொண்டிருந்த ஊதுவத்தி வீடு முழுவதும் மணத்தது. அவர்கள் எல்லோரது மனமும் சந்தோஷத்தில் கனத்தது.

சில நாட்களுக்குப் பின் தன் வேலைக்கு விடுப்பு அறிக்கை விட்டு விட்டு சீதா தன் குழந்தையுடன் - சாமான்களுடன் பயணமாகினாள். வாசலில் நின்று வழியனுப்பி விட்டுக் கண்ணகி போல் உள்ளே வெறுமை யாகத் தெரிந்த வீட்டிற்குள் மீண்டும் தனிமையுடன் வந்து உட்கார்ந்து கொண்டாள் சாரதா.